# களுத்துறை அபிவிருத்தித் திட்டம் 2019 - 2030

பாகம் I



நகர அபிவிருத்தி அதிகாரசபை
2019 ஜூலை

# களுத்துறை அபிவிருத்தித் திட்டம்

2019 – 2030

## முதலாம் தொகுப்பு



பாரிய நகரம் மற்றும்  மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகாரசபை

களுத்துறை அபிவிருத்தித் திட்டம் ( 2019 – 2030) – முதலாம் தொகுப்பு
© நகர அபிவிருத்தி அதிகாரசபை – இலங்கை, 2019

இவ் ஆவணத்திற்கான அனைத்து விதமான உரிமைகளும் காப்பிடப்பட்டுள்ளன. இந்த களுத்துறை அபிவிருத்தித் திட்டமிடல் ஆவணமானது நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வெளியிடப்படுகின்றது. இவ் வெளியீட்டாளரின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி, இந்த வெளியீட்டை முழுமையாகவோ அல்லது ஒரு பாகமாகவோ மீள் உற்பத்தி செய்தல், விநியோகித்தல், எந்தவொரு பயன்பாட்டிற்காகவும் அனுப்புதல், நவீன தொழில்நுட்பக் கருவிகளின் மூலம் நகலெடுக்கப்படுதல் மற்றும் பதிவுசெய்யப்படுதல் அல்லது ஏதேனும் ஒரு வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுதல் போன்ற செயற்பாடுகள் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளன.

வெளியீட்டாளர்

நகர அபிவிருத்தி அதிகாரசபை – இலங்கை
6 வது 7வது மற்றும் 9 வது மாடி, "செத்சிரிபாய", பத்தரமுல்லை, கொழும்பு, இலங்கை.
இணையத்தளம்: www. uda. gov. lk
மின்னஞ்சல் : info@uda. gov. lk
தொலைபேசி : +94 112 873 637

2019 ஆம் ஆண்டு மாசி மாதத்தில் வெளியிடப்பட்டது.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டங்களுக்கு இடைப்பட்ட இக் களுத்துறை அபிவிருத்தித் திட்டமானது, பிரதானமாக இரண்டு பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இந்த ஆவணமானது, முதலாம் தொகுப்பு மற்றும் இரண்டாம் தொகுப்பு என்ற உள்ளடக்கங்களை அடிப்படையாக கொண்டு வெளியிடப்படுகிறது. இதன் முதல் தொகுப்பானது, முதலாம் பிரிவு மற்றும் இரண்டாம் பிரிவு ஆகிய இரண்டு உப பிரிவுகளைக் கொண்டு அமைந்து காணப்படுகின்றது. முதலாம் பிரிவானது, அறிமுகம், பின்னணிக் கற்கை, திட்டத்திற்கான தேவைப்பாடு ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது மற்றும் இரண்டாம் பிரிவில், திட்டத்திற்கான தொலைநோக்கு பார்வை, இலக்குகள் மற்றும் நோக்கங்கள், கருத்தாய்வுத் திட்டம் மற்றும் அபிவிருத்திற்காக முன்னெடுக்கப்படவுள்ள செயல் திட்ட மூலோபாயங்கள் ஆகியவை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இந்த திட்டத்தின் இரண்டாம் தொகுப்பானது, 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இப் பிரதேசம் சார்ந்த பகுதிகளுக்குள் முன்னெடுக்கப்படும் நிலம் மற்றும் கட்டிடங்கள் சார் அபிவிருத்திகளுக்கான வலய மண்டல ஒழுங்குமுறைகள் மற்றும் அனைத்து விதமான பிற பொது ஒழுங்குமுறைகளையும் மேம்படுத்தும் முகமாக பிரத்தியேகமாக தனித்தனியாக தயார் செய்யப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கான களுத்துறை அபிவிருத்தித் திட்டமானது, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மேல் மாகாண அபிவிருத்தி பிரிவால் தயார் செய்யப்பட்ட ஒரு திட்டமாகக் காணப்படுகின்றது. அத்தோடு இந்த திட்டத்தை தயாரிக்கும் செயன்முறைக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளினதும் மற்றும் இந்த திட்டத்தை உருவாக்க தேவையான பிற வள நபர்களினதும் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் என்பன முழுமையாகப் பெறப்பட்டன.

நேரடி மேற்பார்வை :

கலாநிதி. ஜகத் முனசிங்க – தலைவர் , நகர அபிவிருத்தி அதிகாரசபை.,பொறியியலாளர். எஸ். எஸ். பி. ரத்னாயக்க, பணிப்பாளர் நாயகம் – நகர அபிவிருத்தி அதிகாரசபை, திட்டமிடலாளர். கே. ஏ. டி. சந்திரதாச, மேலதிக பணிப்பாளர் நாயகம் – நகர அபிவிருத்தி அதிகாரசபை, திட்டமிடலாளர். டி. எம். பி. ரணதுங்க, பிரதிப் பணிப்பாளர் நாயகம் – நகர அபிவிருத்தி அதிகாரசபை, திட்டமிடலாளர். ஜனக் ரணவீர, பணிப்பாளர் – மேல் மாகாணம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, திட்டமிடலாளர். லலித் விஜயரத்ன – பணிப்பாளர், அபிவிருத்தி திட்டமிடல், நகர அபிவிருத்தி அதிகாரசபை

திட்டமிடல் குழு:

திட்டமிடலாளர் திருமதி. எம். ஹேமந்தி, பிரதிப் பணிப்பாளர் – திட்டமிடல், (மேல் மாகாணப் பிரிவு , களுத்துறை மாவட்ட அலுவலகம்), நகர அபிவிருத்தி அதிகாரசபை, திருமதி. இமாலி ஹேரத், திட்டமிடல் உத்தியோகத்தர் (மேல் மாகாணப் பிரிவு, களுத்துறை மாவட்ட அலுவலகம்), நகர அபிவிருத்தி அதிகாரசபை, திருமதி. சமிந்திர ஹெட்டியாராச்சி, திட்டமிடல் உத்தியோகத்தர், (மேல் மாகாணப் பிரிவு , களுத்துறை மாவட்ட அலுவலகம்), நகர அபிவிருத்தி அதிகாரசபை, திருமதி. தனதுஜா இம்புலாகொட திட்டமிடல் உத்தியோகத்தர் (மேல் மாகாணப் பிரிவு, களுத்துறை மாவட்ட அலுவலகம்), நகர அபிவிருத்தி அதிகாரசபை, செல்வி. ஏ. ஜி. டி. டி. ரத்னாயக்க, உதவி திட்டமிடல் உத்தியோகத்தர் (மேல் மாகாணப் பிரிவு, களுத்துறை மாவட்ட அலுவலகம்) , நகர அபிவிருத்தி அதிகாரசபை, செல்வி. ஜி. டி. எஸ். குலசூரிய, உதவி திட்டமிடல் உத்தியோகத்தர் (மேல் மாகாணப் பிரிவு, களுத்துறை மாவட்ட அலுவலகம்) , நகர அபிவிருத்தி அதிகாரசபை, செல்வி. சி. எல். ஜெயசேகர, உதவி திட்டமிடல் உத்தியோகத்தர், ( மேல் மாகாணப் பிரிவு, களுத்துறை மாவட்ட அலுவலகம்), நகர அபிவிருத்தி அதிகாரசபை, திட்டமிடலாளர் திரு. எஸ். டி. யு. ஜயம்பத் , உதவி திட்டமிடல் உத்தியோகத்தர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு), நகர அபிவிருத்தி அதிகாரசபை.

ஏனைய உதவிக் குழுக்கள்

- சுற்றாடல் மற்றும் நிலத்தோற்றப் பிரிவு – நகர அபிவிருத்தி அதிகாரசபை
- புவியியல் தகவல் முறைமைகள் பிரிவு ( GIS) – நகர அபிவிருத்தி அதிகாரசபை
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு – நகர அபிவிருத்தி அதிகாரசபை

## சமர்ப்பணங்கள்

களுத்துறை அபிவிருத்தித் திட்டத்தின் தயாரிப்பு நடவடிக்கையானது, சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து தேவையான பங்களிப்பைப் பெற்றுக்கொண்ட பின்னர் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மேல் மாகாணப் பிரிவுடன் இணைந்து களுத்துறை மாவட்ட அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒன்றிணைந்த திட்ட செயன்முறைப் பணியாகும். ஏறக்குறைய ஒன்றரை வருட காலப்பகுதியை அடிப்படையாக கொண்டு உருவாக்கம் அடைந்த இந்த களுத்துறை அபிவிருத்தித் திட்டத்தின் தயாரித்தல் செயன்முறையில் பலர் பல்வேறு விதமான வழிகளிலும் உதவியுள்ளனர்.

முதலாவதாக குறிப்பிட்டுக் கூறுவதானால், இந்த அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்யும் முகமாக எமக்கு வழிகாட்டியது மட்டுமல்லாமல் அதற்கு தேவையான உதவிகளை செவ்வனே செய்த பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் கௌரவ.பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சகத்தின் செயலாளர் நாயகம் அவர்கள் வழங்கிய உதவிகளுக்காகவும் மற்றும் வழிகாட்டுதலுக்காக நாங்கள் நன்றி நவில்கின்றோம்.

மேலும், இந்த திட்டத்தின் தயாரிப்புச் செயன்முறைக்காக பல வகையான உதவிகளை மேற்கொண்ட களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை ஆகியவற்றின் கௌரவ. தலைவர்களுக்கும் மற்றும் சம்மந்தப்பட்ட ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் அனைத்து அதிகாரிகளுக்கும் அவர்கள் செய்த பங்களிப்புகளுக்காக எமது விசேட நன்றியினை செலுத்துகின்றோம்.

இந்த திட்டத்தை தயாரிப்பதற்காக பயனுள்ள யோசனைகளையும் ஆலோசனைகளையும் அளித்த அரசு மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த அனைத்து விதமான பங்குதாரர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்ததாக, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவராக செயலாற்றுகின்ற கலாநிதி. ஜகத் முனசிங்க அவர்கள், இந்த களுத்துறை அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிக்கும் படிமுறையினை ஆரம்பித்து வைத்தமைக்கும், பல புதிய எண்ணங்களுடனான திட்டமிடல் மூலோபாயங்கள் மற்றும் அதன் பிரயோகித்தலையும் அறிமுகப்படுத்துவதன் மூலமாக, முழுமையாக வழங்கிய வழிகாட்டலுக்கும், மற்றும் இப்படிமுறை பூராகவும் வழங்கிய தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் ஊக்குவிப்பிற்கும் நாம் நமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அத்தோடு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர். எஸ்.எஸ்.பி.ரத்நாயக்க, மற்றும் முன்னாள் பிரதி பணிப்பாளர் நாயகம் கே.ஏ.டி.சந்திரதாஸ அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் திரு. டி.எம்.பி.ரணதுங்க அவர்களுக்கும், மற்றும் பல்வேறு வகையிலும் உதவிகளை நல்கிய அனைத்து பணியாளர்களையும் இத்தருணத்தில் நினைவு கூற கடமை பட்டிருக்கின்றோம். மேலும் விசேடமாக, மேல்மாகாண பிரிவின் முன்னாள் பணிப்பாளர்.ஜனக் ரணவீர மற்றும் அபிவிருத்தி திட்டமிடல் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் லலித் விஜயரத்ன அவர்களினதும் பங்களிப்பையும் உதவிகளையும் இத்தருணத்தில் நினைவு கூறுவது அவசியமாகும்.

அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு, புவியியல் தகவல் முறைமை பிரிவு, சுற்றாடல் மற்றும் இயற்கை நிலத்தோற்றப் பிரிவு ஆகியன வழங்கிய செயற்றிட்ட உதவியும் இந்த திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கு பெரிது உதவியது என்பதை நாம் மனதளவில் ஏற்றுக்கொள்கின்றோம். ஆகவே அவர்களின் பங்களிப்புக்காக நாம் நன்றி செலுத்துகின்றோம்.

மேலும், இந்த அபிவிருத்தி திட்டத்தினை சிறந்த முறையில் தயார் செய்து முடிப்பதற்கு, நூலினை சிறந்த முறையில் கட்டமைத்து வடிவமைப்பதற்கு உதவிய மூனியெக் நிறுவனத்திற்கும் மற்றும் பல்வேறு வகையிலும் தங்களது உதவிகளையும், பங்களிப்பினையும் நல்கிய அனைவருக்கும் இத்தால் நன்றி நவில்கின்றோம்.

# கௌரவ . அமைச்சரின் செய்தி



1978 ஆம் ஆண்டின் 41ம் இலக்க சட்டத்தினை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையானது தற்போது அதன் 40வது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளமை மட்டுமல்லாமல், நாட்டில் நகர்ப்புற அபிவிருத்தித் துறைக்கு தொடர்ச்சியாக பெரும் சேவை ஆற்றிவருகின்றது. வெகுவிரைவில் அபிவிருத்தியடைந்து வரும் இவ் உலகில், வலிமையான பொருளாதார நாடாக இலங்கையினை மாற்றுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையானது பெரிதும் முயற்சிக்கின்றது. அதற்கு இணங்கியவாறு, நாட்டின் அபிவிருத்திச் சூழலை முன்னெடுத்துச் செல்வது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதானப் பொறுப்பாகக் காணப்படுகின்றது. இச்சட்டத்தின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் நகர அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சராக செயற்படும் நான் அறிவிக்கின்ற பகுதிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களை தயார் செய்வது மட்டுமின்றி, அத் திட்டங்களின் மூலம் திட்டமிடல் பிரதேசத்தின் பௌதிக அபிவிருத்தியானது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஒழுங்குபடுத்தப்படும்.

களுத்துறை பிரதேசச் செயலகப் பகுதிக்குள் காணப்படும் களுத்துறை நகர சபை மற்றும் பிரதேச சபை பிரதேசத்திற்காக 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. களுத்துறை நகரம், மாவட்டத்தின் பிரதான நிர்வாக மையமாக செயற்பட்டு வருவதன் காரணமாக, இப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவிலானதொரு பௌதீக அபிவிருத்தியினை அடைந்துள்ளது. இந்த அபிவிருத்தித் தன்மையானது களுத்துறை பிரதேச சபையிலும் மிகவும் வெகுவாகப் பரவிவருகின்றது. எனவே, ஒட்டுமொத்த பிரதேச சபைப் பகுதிகளும் இந்தத் திட்டத்தின் உள்ளடக்கப்படுகின்றன அத்தோடு முதல் முறையாக இந்தப் பகுதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் பிரகாரம், அனைத்து விதமானத் துறைகளிலும் நிலையான அபிவிருத்தி ஏற்படுத்த சமூக – பொருளாதார, பௌதீக ரீதியான பல்வேறு விதமான செயல் திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

எனது பார்வையில், இந்த அபிவிருத்திதிட்டமானது தொழிலறிஞர்களுடனான விரிவான ஆலோசனைகளுடனும், நுண்ணறிவாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடனும், நவீன முறைகள், நுட்பமுறைகள் மற்றும் புதிய அணுகுமுறைகளைப்பயன்படுத்தி தயார் செய்யப்பட்டதாகும். அந்தவகையில், இந்த அபிவிருத்தி திட்டத்தை சிறப்புற தயாரித்து நிறைவு செய்வதற்கு பல்வேறு வகையில் உதவிகளையும் தமது பங்களிப்பையும் நல்கிய யாவருக்கும்,விசேடமாக,நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், பணிப்பாளர் நாயகம்,திட்டமிடல் குழுவினர், மற்றும் தமது பங்களிப்பை வழங்கிய நகர அபிவிருத்தி அதிகாரச சபையின் அனைத்து பணிப்பாளாகளுக்கும் நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், களுத்துறை அபிவிருத்தி திட்டத்திற்கு உதவிகளையும், பங்களிப்பினையும் வழங்கி வெற்றிப்பாதைக்கு இட்டுச்சென்ற குறித்த உள்ளூர் நிர்வாக சபைகளுக்கும், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்

பாட்டலி சம்பிக்க ரணவக்க
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

# தலைவரின் உரை



இன்றைய காலகட்டத்தில், திட்டமிடல் மற்றும் அமுலாக்கம் என்பவற்றை நடைமுறைப்படுத்தல், இலங்கை தேசத்தின் நகர்புற சூழலின் நிலையை நிர்வகித்தல் போன்றன நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முக்கிய கடமையாகும். 1978 ஆம் ஆண்டில் இந்த சபை நிறுவப்பட்டதோடு, நகர்புறங்களில் வாழும் மக்கள் யாவரும் பொது நன்மையை பெற்றுக்கொள்ளும் பொருட்டு, அபிவிருத்தி செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் சீர்படுத்துவதற்காகவும் ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் அமுலாக்குதலை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டிருந்தது .

திருத்தியமைக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டின் 4 வது இலக்க சட்டத்தின் படி ( பாகம் II இன் பகுதி 8அ (I) வது பிரிவின் படி)நகர அபிவிருத்தி அதிகாரசபையானது நகர அபிவிருத்திகளை மேற்கொள்ள பொருத்தமான பிரதேசமாக அமைச்சரினால் அறிவிக்கப்படும் பிரதேசத்தில் அபிவிருத்தி திட்டங்களை உருவாக்குதல் தொடர்பான அதிகாரத்தைக் கொண்டுள்ளதுஅந்த வகையில் ., மேற்குறிப்பிட்ட சட்ட ஏற்பாட்டின்படி களுத்துறை அபிவிருத்திதிட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது களுத்துறை பிரதேசமானது, அபிவிருத்திக்கு உகந்த பிரதேசமாக அறிவிக்கப்பட்டதனை தொடர்ந்து, பௌதீக,சமூக,வர்த்தக மற்று சூழல் போன்ற அடிப்படை அம்சங்களைக் கருத்திற்கொண்டு, நகர அபிவிருத்தி அதிகார சபையானது, களுத்துறை அபிவிருத்தித்திட்டத்தை தயார் செய்துள்ளது.

திட்டத்தை அமுல்படுத்தும் செயற்பாட்டை நோக்குகையில் அது இலகுவான காரியம் அல்ல என்பதையும் மிக கடினமான மற்றும் சவால் நிறைந்த உறுதியற்ற பாதை என்பதும் மறுப்பதற்கல்ல ஆயினும், தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபையானது, அவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்க தேவையான உபகரணங்கள், அமைப்புகள், மூலோபாயங்களை தன்னகத்தே கொண்டு நிச்சயமற்ற சவால் நிறைந்த பாதையை எதிர்த்து நின்று, களுத்துறை பிரதேசத்தை “தென்மேற்கு கடற்கரையின் பிரதம இடை நிறுத்தம்” என்ற அடிப்படையிலான பிரதேசமாக மாற்றியமைக்கும் என்றால் அது மிகையாகாது.

மேலும், நான் இத்தருணத்தில், இந்த அபிவிருத்தி திட்ட தயாரிப்பில் பங்குபற்றி தமது கடின உழைப்பை நல்கிய குழுவினருக்கும், இத்திட்டத்தை சிறந்த முறையில் நிறைவு செய்வதற்கு பல்வேறு வகையில் உதவியையும், பங்களிப்பினையும் நல்கிய யாவருக்கும் நன்றி நவிழ்வதோடு, தொடர்ந்து இதே உதவி மற்றும் பங்களிப்பை இத்திட்ட அமுல்படுத்துதல் செயற்பாட்டிலும் வழங்குவீர்கள் என நினைக்கின்றேன்.

ஜகத் முனசிங்க
தலைவர், நகர அபிவிருத்தி அதிகாரசபை

# உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்களின் செய்தி




களுத்துறை நகர சபை மற்றும் பிரதேச சபை பிரதேசத்திற்கான ஒரு ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தினை தயாரித்து அமுல்படுத்தவுள்ள பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நகர அபிவிருத்திச் சபைக்கு எமது மனமார்ந்த பாராட்டுதல்களை நாம் பதிவு செய்கிறோம். களுத்துறை பிரதேச செயலகப் பகுதி, இயற்கையுடன் கூடிய அழகு நிரம்பிய நிலப்பரப்பினை கொண்டு அமைந்து காணப்படும் ஒரு தனித்துவமான பிரதேசமாக விளங்குகின்றது. சிவனொளி பாத மலைச் சிகரத்தின் நீர் ஊற்றுடன் ஆரம்பமாகி பாய்ந்து வரும் களு கங்கையின் பெருநீர்ப்பரப்பிற்கு இடையே தனித்துவ அடையாளங்களுடன் அமைந்து காணப்படுகின்றது. களுத்துறை நகரானது வரலாற்று சிறப்புத் தன்மைமிக்க பிரம்மாண்டமான சைத்தியம் மற்றும் புனித போதி மர வளாகம் ஆகியவற்றை பிரதான நில அடையாளங்களாகக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு புனித நகரமாக திகழ்கின்றது. களுத்துறை நகரம் பண்டைய காலத்தில் இருந்தே நவீன நகர அம்சங்களுடன் உருவாக்கப்பட்டு தற்போது அது துரிதமான அபிவிருத்திப் போக்கிற்கு மாறியிருக்கிறது.

களுத்துறை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொருளாதார அபிவிருத்தி முன்னேற்றங்கள் மற்றும் களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் காணப்படும் குடியிருப்பு சார்ந்த மக்கள் தொகை பெருக்கம் என்பவற்றை கணக்கில் எடுத்து நோக்கும் போது, களுத்துறை பிரதேசச் செயலக பகுதியானது துரித அபிவிருத்தியை அடைய வேண்டிய அவசியத் தன்மை ஏற்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தியை நிலையான முறையில் நிர்வகிக்கும் தேவையை நாம் இனங்கண்டுள்ளோம்.

களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில், 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கான ஒருங்கிணைந்த இந்த திட்டத்தை தயாரித்ததன் மூலமாக நகர அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பது என நகர அபிவிருத்திச் சபையினால் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், இந்தத் திட்டத்தின் மூலம் சில முக்கிய மூலோபாயத் திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன என்பது பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. இந்த திட்டத்தின் மூலமாக களுத்துறை நகரப் பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கும் மற்றும் ஏனைய அனைவருக்கும் இந்த திட்டங்கள் மூலம் சிறந்த சேவைகளை வழங்க வழி வகுக்கும் என்பது தெள்ளத்தெளிவாக விளங்குகின்றது.

இறுதியாக, களுத்துறை நகர சபை மற்றும் பிரதேச சபையின் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் இப் பகுதியில் உள்ள பொது மக்கள் சார்பில், இந்த திட்டத்தை தயாரிப்பதற்கு முனைப்பு காட்டிய நகர அபிவிருத்திச் சபையின் அனைத்து விதமான அதிகாரிகளுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

அமீர் நஸீர்
தலைவர்
களுத்துறை நகர சபை.

சஞ்சீவ ஆரியரத்ன
தலைவர்
களுத்துறை பிரதேச சபை

# முன்னுரை

2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கான களுத்துறை அபிவிருத்தித் திட்டமானது, 1978ம் ஆண்டின் 41ம் இலக்க சட்டத்தினை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக தயார் செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தின் திட்டமிடல் அதிகாரப் பகுதிகளாக களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் அமைந்து காணப்படும் களுத்துறை நகர சபை பகுதி மற்றும் களுத்துறை பிரதேச சபை பகுதி ஆகிய இரு உள்ளூராட்சி சபைப் பகுதிகளும் விளங்குகின்றன.

2018 ஆம் ஆண்டு வரையில் கிடைக்கப்பெற்ற தரவுகளே பெரும்பாலும் இந்த திட்டத்தை தயார் செய்யப் பயன்படுத்தப்பட்டன. குறிப்பிட்டு கூறுவதானால், இந்த திட்டத்திற்கான தரவுகள் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், நில அளவையியல் திணைக்களம் மற்றும் பிற அரச அமைப்புகளிடமிருந்து சேகரிக்கப்பட்டதோடு இந்த திட்டத் தயாரிப்பு செயன்முறையில் பலவிதமான வழிகளில் அவை பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு, இந்தத் தரவுகளை அடிப்படையாக கொண்டு இந்தத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள அனைத்து விதமான பகுப்பாய்வுகளும் செய்யப்பட்டன.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்காக இந்தத் திட்டம் தயார் செய்யப்பட்டது. தரவுகளின் பகுப்பாய்வு மூலம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு, இந்தத் திட்டத்திற்கான தொலைநோக்குப் பார்வை வகுக்கப்பட்டது மற்றும் அந்த தொலைநோக்கை எட்டுவதற்காக, முக்கியமான 03 இலக்குகள் வகுக்கப்பட்டன. அத்தோடு இந்த திட்டத்தின் கீழ் முக்கியமான 09 மூலோபாயங்கள் கண்டறியப்பட்டன. இந்த மூலோபாயங்களை அடிப்படையாக கொண்டு, 04 முக்கிய மூலோபாய திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. அவையாவன; உட்கட்டமைப்பு வசதிகள் சார் அபிவிருத்திக்கான மூலோபாயத் திட்டம், பொருளாதார அபிவிருத்திக்கான மூலோபாயத் திட்டம், நிலைதகு சுற்றுச்சூழல் முகாமைத்துவ மூலோபாயத் திட்டம் அத்தோடு கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவ மூலோபாயத் திட்டம் என்பன உள்ளடங்குகின்றன. இவ் மூலோபாயத் திட்டங்கள் சில செயல் திட்டங்களுடன் இணைந்தாக தயார் செய்யப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கான களுத்துறை அபிவிருத்தித் திட்டமானது, முதலாம் தொகுப்பு மற்றும் இரண்டாம் தொகுப்பு என்ற உள்ளடக்கங்களை அடிப்படையாக கொண்டு வெளியிடப்படுகிறது. இதன் முதல் தொகுப்பானது, முதலாம் பிரிவு மற்றும் இரண்டாம் பிரிவு ஆகிய இரண்டு உப பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதலாம் பிரிவானது அறிமுகம், பின்னணிக் கற்கை, திட்டத்திற்கான தேவைப்பாடு ஆகிய அம்சங்கள் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது மற்றும் இரண்டாம் பிரிவில், திட்டத்திற்கான தொலைநோக்கு பார்வை, இலக்குகள் மற்றும் நோக்கங்கள், கருத்தாய்வுத் திட்டம் மற்றும் சுவோட் (SWOT) பகுப்பாய்வு மற்றும் அபிவிருத்திற்காக முன்னெடுக்கப்படவுள்ள செயல் திட்ட மூலோபாயங்கள் ஆகியவை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

இந்த திட்டத்தின் இரண்டாம் தொகுப்பானது, 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இப் பிரதேசம் சார்ந்த பகுதிகளுக்குள் முன்னெடுக்கப்படும் நிலம் மற்றும் கட்டிடங்கள் சார் அபிவிருத்திகளுக்கான வலய மண்டல ஒழுங்குமுறைகள் மற்றும் அனைத்து விதமான பிற பொது ஒழுங்குமுறை என்பவற்றை கொண்டு ஒருங்கமைந்துள்ளது.

உள்ளடக்கம்

சமர்ப்பணங்கள் ..... III

கௌரவ . அமைச்சரின் செய்தி ..... IV

தலைவரின் உரை ..... V

உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்களின் செய்தி ..... VI

முன்னுரை ..... VII

அபிவிருத்தி திட்டத்தின் பின்னணி ..... 1

1.1.அறிமுகம் ..... 2
1.2.அபிவிருத்தி திட்டத்தின் பங்குதாரர்கள் ..... 2
1.3.அபிவிருத்தி திட்டத்தின் நோக்கம் ..... 4
1.4.திட்ட செயன்முறை ..... 7
1.4.1.பின்னணி கற்கை ..... 8
1.4.2.விடய பரப்பு ..... 8
1.4.3.அபிவிருத்திக்கு பாதகமான பிரச்சினைகளை இனங்காணல். ..... 8
1.4.4.தொலை நோக்குப் பார்வை, இலக்குகள், மற்றும் குறிக்கோள்களை தயார் செய்தல். 9
1.4.5.விளக்க பகுப்பாய்வு ..... 9
1.4.6.மூலோபாயங்கள் மற்றும் திட்ட உருவாக்கம் ..... 9
1.4.7.நீதி மற்றும் ஒழுங்கு முறைகள் தயார் செய்தல் ..... 10
1.4.8.வரைவுத் திட்டம் தயார் செய்தல் மற்றும் இணக்கம் பெறுதல். (Consent) ..... 10
1.4.9.இணக்கம் பெற்றுக் கொள்ளப்பட்ட வரைவு திட்டத்தை முன்வைத்தல். ..... 10
1.4.10.அனுமதி மற்றும் அமுலாக்கம் செயற்பாடுகள் ..... 10

முதற் கட்ட கற்கை ..... 11

2.1கற்கைக்கு உட்படுத்தப்பட்ட பிரதேசம் ..... 12
2.2திட்டமிடல் மற்றும் பௌதீக சூழல் ..... 12
2.3.திட்டமிடல் பிரதேச எல்லை வரையறை ..... 23
2.3.1.செயற்பாட்டு பிராந்தியம் (Functional Region) ..... 23
2.3.2.புவியியல் பிராந்தியம் (Geographic Region) ..... 23
2.3.3.நிர்வாக எல்லைகள் (Administrative Region) ..... 23

நகர அபிவிருத்தி தி3ட்டத்திற்கான அவசியம் ..... 27

3.1.பிரச்சினை 01 ..... 28
3.2.பிரச்சினை 02 ..... 29
3.3.பிரச்சினை 03 ..... 31
3.4.பிரச்சினை 04 ..... 31
3.5.பிரச்சினை 05 ..... 34

அமைச்சரின் ஒப்புதல் ..... 36

வர்த்தமானி அறிவித்தல் ........ 37
அபிவிருத்தித் திட்டத்திற்கான வரைச்சட்டம் ........ 39
4.1.அபிவிருத்தித் திட்டத்திற்கான தொலைநோக்குப் பார்வை ........ 40
4.2.தொலைநோக்கு பார்வை தொடர்பான அறிக்கை ........ 40
4.3.அபிவிருத்தித் திட்டத்தின் இலக்குகள் ........ 41
4.4.அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்களை ........ 42
அபிவிருத்தித் திட்டத்திற்கான வரைச்சட்டம் ........ 43
.5.1சுவோட் பகுப்பாய்வு சுருக்கம் ........ 44
.5.2விரிவான முறையில் சுவோட் (SWOT) பகுப்பாய்வு ........ 50
திட்டம் ........ 77
6.1 கருத்தாக்கத் திட்டம் ........ 77
6.1.கருத்தாக்கத் திட்டம் ........ 78
6.2.முன்மொழியப்பட்டுள்ள நிலப் பயன்பாட்டு திட்டம். ........ 81
6.3.உள்கட்டமைப்பு அபிவிருத்திக்கான மூலோபாயச் செயல் திட்டம் ........ 87
6.3.1 சேவை முகாமைத்துவத் திட்டம் ........ 87
6.3.2.வீதிகள் மற்றும் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம். ........ 88
6.3.3.நீர் வழங்கல் திட்டம் ........ 90
6.3.4.மின் வழங்கல் திட்டம் ........ 93
6.3.5.கழிவுநீர் முகாமைத்துவத் திட்டம் ........ 94
6.3.6.திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டம் ........ 97
6.4.பொருளாதார அபிவிருத்தி மூலோபாய திட்டம் ........ 103
6.4.1.பொருளாதார அபிவிருத்தித் திட்டம் ........ 103
6.4.2.சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் ........ 104
6.5.நிலைதகு சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாயத் திட்டம் ........ 107
6.5.1.சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டம் ........ 107
6.5.2. நிலத்தோற்றத் திட்டம் ........ 112
6.5.3. அனர்த்த முகாமைத்துவத் திட்டம் நிலைதகு சுற்றுச்சூழல் அபிவிருத்தி ........ 112
6.5.4. பொது திறந்த வெளி மற்றும் பொழுதுபோக்கு செயல்பாடுகளுக்கான நிலத் திட்டம் 117
6.5..5.விவசாய திட்டம் ........ 121
6.6. கலாசாரம், மதம் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவ திட்டம். ........ 122
.6.6.1சில பௌத்த தளங்கள் ........ 122
6.6.2. கலாசார நிகழ்வுகள். ........ 122
6.6.3. பாதுகாப்பு பிரதேசங்கள். ........ 124
6.7. குடியிருப்பு அடர்த்தி மற்றும் பரம்பல் திட்டம் ........ 124
6.8. செயல் திட்ட அமுலாக்கத்திற்கான மூலோபாயத் திட்டம் ........ 128
6.8.1.மூலோபாயத் திட்டங்கள் ........ 138
6.8.2.நிறுவன அமைப்பு ........ 180

## வரைபடங்கள்

வரைபடம் 2-1 : களுத்துறை பிரதேசத்தின் களுத்துறை பிரதேச செயலக பிரிவு2017 – ....................13
வரைபடம் 2-2 : களுத்துறை பிரதேச செயலக பிரிவிற்கான தேசிய மற்றும் பிராந்திய தொடர்புகள்201) 8.( ....................15
வரைபடம் 2-3 : களுத்துறை  களுத்துறை பிரதேச செயலக வளாகத்தினுள் காணப்படும் நீரோட்ட அமைப்பு 201)8(....................18
வரைபடம் 3-1 : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் துரித அபிவிருத்தி(2018 )....................32
வரைபடம் 3-2 : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் சுற்றுச்சூழல் உணர் திறன் தன்மை(2018) ....................33
வரைபடம் 5-1 – : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் நிர்வாக கட்டிட அடர்த்தி201)  8(....................60
வரைபடம் 5-2 : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் சனத்தொகை வளர்ச்சி வேகம் (2001-2011).................... 61
வரைபடம் 5-3 : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் ஈர நிலப் பரம்பல்(2018) .................... 62
வரைபடம்  5-4  :களுத்துறை கடலோர அச்சுறுத்தல் வலயம் (2018).................... 67
வரைபடம் 5-5 : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் கடல் நீர் மட்ட அதிகரிப்பு வலயம் (2025)....................68
வரைபடம் 5-6 : புகையிரத மற்றும் பெறும் தெருக்களின் பரவல்  (2018) ....................71
வரைபடம்  6-1 : முன்மொழியப்பட்ட நில பயன்பாட்டு திட்டம்(2030 ) ....................86
வரைபடம்  6-2 : திட்டமிடல் பிரதேசத்தின் நீரோட்ட அமைப்பு) .2018) .................... 92
வரைபடம்  6-3 : கழிவு நீர் முகாமைத்துவ திட்டத்திற்கு உட்பட்ட பிரதேசம்(2018) ....................96
வரைபடம் 6-4 : பொஹோரவத்தை கழிவு முகாமைத்துவ நிலைய உருவாக்கம். (2018) ....................102
வரைபடம் 6-5 : சுற்றுலா அபிவிருத்தி திட்டம்(2018 ) ....................106
வரைபடம் 6-6 : ஈர நில வலயமைப்பு திட்டம்(2030  – 2019) ....................109
வரைபடம் 6-7 : களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தின் அனர்த்த தணிப்பு வலையமைப்பு திட்டம். 2018....................116
வரைபடம் 6-8 : களுத்துறை திட்டமிடல் பிரதேசத்திற்கான பொது திறந்த வெளிகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் தொடர்பான திட்டம் (2019 -2030) ....................120
வரைபடம்  6-9 : களுத்துறை திட்டமிடல் பிரதேசத்திற்கான குடியிருப்பு அடர்த்தி மற்றும் குடிப்பரம்பல்  (2019 – 2030) ....................127

## உருக்கள்

உரு 2-1 : திட்டமிடல் பிரதேசத்தின் சுருக்க விபரணங்கள்....31
உரு 2-2 : களுத்துறை நகரின் வரலாற்று சிறப்புமிக்க புகைப்படங்கள்.... 24
உரு 2-3 : களுத்துறை நகரின் வரலாற்று சிறப்புத் தன்மைமிக்க புகைப்படங்கள்....25
உரு 3-1 : காலிடோ கடற்கரை பகுதியில் காணப்படும் மணல் மேட்டின் உருவ வேறுபாடு.... 28
உரு 5-1 : களுத்துறை நகரிற்கு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் இடங்களது அமைவிடங்கள்....52
உரு 5-2 : முறையற்ற நிலபயன்பாட்டுடன் கூடிய பரம்பல் ....53
உரு 5-3 : மேல் மாகாணத்திற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டமைப்புத் திட்டம் ....55
உரு 5-4 :தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை2040 – ....55
உரு 5-5 : கொழும்பு பெருநகர கட்டமைப்புத் திட்டம்1998 – .... 56
உரு 5-6 : காலிடோ கடற்கரைப்பகுதியானது முன்னதாக காணப்பட்ட நிலைமை(2005) ....57
உரு 5-7 : காலிடோ கடற்கரைப்பகுதியின் தற்போதைய நிலைமை201) 8(.... 58
உரு 5-8 : உலர் காலப்பகுதியிலான நீர் மின் கடத்தும் திறன்....64
உரு 5-9 : உத்தேசிக்கப்பட்டுள்ள பாணந்துறை வரையிலான மின்மயமாக்கல் புகையிரதப்பாதை .... 65
உரு 5-10 : களுத்துறை புகையிரத நிலையம் மற்றும் பேருந்து தரிப்பிடம் அமைவிடம் ....70
உரு 5-11 : புகையிரத சேவை சார்ந்த தகவல்கள் ....70
உரு 5-12 : பாதசாரி நடைபாதையுடன் கூடிய வீதிகள்....72
உரு : 13-5தெற்கு அதிவேக கடுகதி பாதையில் பெல்பொல இடைமாற்ற நிலையம் மற்றும் களுத்துறை தொடக்கம் ஹொரண வரையிலான வீதிக்கு இடையிலான தொடர்பு.... 74
உரு 5-14 : தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்ட பின்னரான வீதியமைப்பு தொடர்புகள் ....75
உரு 6-1 : கருத்தாக்க திட்டம் ....80
உரு 6-2 : குறுக்குவெட்டுத் தேற்றம்) 1 A –A ( .... 83
உரு 6-3 : குறுக்குவெட்டுத் தேற்றம்) 2 B –B( .... 83
உரு 6-4 : குறுக்குவெட்டுத் தேற்றம்) 2 C –C(.... 84
உரு 6-5 : குறுக்குவெட்டுத் தேற்றம்) 2 D –D(.... 85
உரு 6-6 : இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார கம்பனி தனியார் நிறுவனம் ஆகியவற்றின் மின்சார விநியோக நிலையங்கள்.... 93
உரு 6-7 : களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தில் நாளாந்த திண்மக்கழிவுகள் உருவாக்கம் தொடர்பான விபரங்கள்97
உரு 6-8 : நாளாந்த திண்மக்கழிவுகளின் வகைகள்.... 98

## அட்டவணைகள்

அட்டவணை 2-1 : களுத்துறை பிரதேச செயலக பிரிவிற்கான மக்கள் தொகை அபிவிருத்தி விகிதம் – 2001) (2030 ........ 19

அட்டவணை 2-2 : களுத்துறை போதிய அமைவிடத்திற்கு ஈர்க்கப்படும் மக்கள் தொகை. ........ 20

அட்டவணை 2-3 : நீர் மூலங்கள் ........ 21

அட்டவணை 5-1 : பிரதான ஆற்றுப் படுகைகளுக்கு அருகில் உள்ள அபிவிருத்திகள் ........ 51

அட்டவணை 5-2 : தாழ்வான நிலகளின் வகைப்பாடு ........ 59

அட்டவணை 6-1 : திட்டமிடல் பகுதியில் காணப்படும் ஆறு, கால்வாய்கள் மற்றும் ஏனைய நீரோடைகளின் இட ஒதுக்கீடுகள் தொடர்பான விபரம். ........ 110

அட்டவணை 6-2 : 2014– 2018 க்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் களுத்துறை பிரதேச செயலக பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலை பற்றிய விபரங்கள் ........ 113

அட்டவணை 6-3 : 2014 முதல் 2018 வரையிலான காலப்பகுதியில் களுத்துறை பிரதேச செயலக பகுதியில் இடம்பெற்ற குடிநீர்ப் பிரச்சினை பற்றிய விபரங்கள் ........ 114

அட்டவணை 6-4 : களுத்துறை திட்டமிடல் பகுதியில் காணப்படும் நேரடி பொழுதுபோக்குப் பகுதிகள் ........ 117

அட்டவணை 6-5 : களுத்துறை திட்டமிடல் பகுதியில் 2019 – 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலபகுதிக்கான அபிவிருத்திக்காக முன்மொழியப்பட்டுள்ள பொழுதுபோக்கு மற்றும் திறந்த வெளி பிரதேசத்திற்கான நிலத் திட்டம். ........ 118

அட்டவணை 6-6 : களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படுகின்ற வரலாற்று மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடங்கள் ........ 124

அட்டவணை 6-7 : பல்வேறு விதமான குடியிருப்பு சார் குழுமங்களில் காணப்படும் மக்கள் தொகை அடர்த்தி மற்றும் பரம்பல் தொடர்பான நிலவரங்கள் ........ 126

## பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு 1 : கொழும்பு பாரிய திட்டம்(1978) .......... 200

பின்னிணைப்பு 2 : கொழும்பு கட்டமைப்பு திட்டம்(1998) .......... 201

பின்னிணைப்பு 3 : கொழும்பு மா நகர திட்டம்(2004) .......... 202

பின்னிணைப்பு 4 : தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை. (2011 -2030).......... 203

பின்னிணைப்பு 5 : நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயார் செய்யப்படும் திட்டம்) 2005-2020) .......... 204

பின்னிணைப்பு 6 : தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் தயார் செய்யப்படும் திட்டம்(2050 –2018) ..205

பின்னிணைப்பு 7 : நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயார் செய்யப்படும் மேல் மாகாண கட்டமைப்பு திட்டம் 2018 .......... 206

பின்னிணைப்பு 8 : களுத்துறை நகரின் தோற்றப்பாடு.......... 207

பின்னிணைப்பு 9 : களுத்துறை பிரதேச செயலக பிரிவு வளாகத்தின் சனத்தொகை வளர்ச்சி வேகம் – 2001) . 2011(.......... 208

பின்னிணைப்பு 10 2001 : ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் திட்டமிடல் வளாகத்தின் சனத்தொகை அடர்த்தி வேறுபாடு. .......... 209

பின்னிணைப்பு 11 : களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் காணப்படும் நில பயன்பாடு(2018) .......... 210

பின்னிணைப்பு 12 : திட்டமிடல் பிரதேசத்தின் நில பெறுமதி(2018) .......... 211

பின்னிணைப்பு 13 : களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் சுகாதார சேவைகள் தொடர்பான செயற்பாடுகள்...212

பின்னிணைப்பு 14 : களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் கல்விச்சேவை தொடர்பான செயற்திட்டம்(2018) . ...213

பின்னிணைப்பு 15 : குடா வஸ்கடுவ மற்றும் மஹா வஸ்கடுவ பிரதேசங்களின் மழை நீர் முகாமைத்துவ செயற் திட்டம்(2015) .......... 214

பின்னிணைப்பு 16: 2030 – 2019க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் களுத்துறை பிரதேச செயலக பகுதியில் செயற்படுத்தபடவுள்ள நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதிகளுக்கான திட்டம் .......... 215

பின்னிணைப்பு 17 : களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் தற்போது காணப்படும் திறந்த வெளிகள் பற்றிய விபரங்கள். .......... 217

பின்னிணைப்பு 18 : களுத்துறை பிரதேச செயலக வளாகத்தின் குடியிருப்பு பரவல் தொடர்பான கணிப்பீடு.......... 219

பின்னிணைப்பு 19 : களுத்துறை பிரதேச செயலகத்தினுள் சேவை வழங்கல் சார்ந்த கணிப்பீடு.......... 220

பின்னிணைப்பு 20 : முனைய புள்ளிககளுக்கு இடையிலான பகுப்பாய்வு .......... 221

பின்னிணைப்பு : 21 2019 -2030 வரையான களுத்துறை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள திட்டமிடல் பகுதிக்கான செயல் திட்டங்கள்.......... 222



# முதலாம் பிரிவு

# அத்தியாயம் ஒன



# அபிவிருத்தி திட்டத்தின் பின்னணி

## 1.1.அறிமுகம்

நகர அபிவிருத்தி அதிகாரசபையானது, 1978 ஆம் ஆண்டின் 41ம் இலக்க சட்டத்தினை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டது. அதனை அடிப்படையாக கொண்டு, திருத்தியமைக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 04 இன் படி, நகர அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் காணப்படும் சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் பௌதீக ரீதியான அம்சங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில், அப் பிரதேசங்களுக்கான நகர அபிவிருத்தி திட்டங்களை உருவாக்கும் செயற்பாட்டானது, இவ் அதிகார சபையின் பிரதான பணியாகக் கருதப்படுகின்றது. அந்த நோக்கில் தற்போது தயார் செய்யப்பட்டுள்ள 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கான களுத்துறை அபிவிருத்தி திட்டத்தை, தற்போதைய சூழ்நிலைக்கு உகந்த வகையில், பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான மாற்றங்களை உள்வாங்கி, அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக தெரிவு செய்த பகுதிகளை இணைக்கும் வகையில் களுத்துறை அபிவிருத்தி திட்டத்தை மேம்படுத்த்துதற்கான ஒரு அவசியத் தன்மை உணரப்பட்டுள்ளது.

அந்த வகையில், களுத்துறை அபிவிருத்தி திட்டமானது, (2019 – 2030) பிரதானமாக களுத்துறை நகர சபை மற்றும் பிரதேச சபை பகுதிகள் ஆகிய இரு உள்ளூராட்சி சபைகளை உள்ளடக்கி காணப்படும் களுத்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ளடங்கும் பிரதேசங்களைக் கருத்திற் கொண்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தித் திட்ட எல்லையானது, நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு உகந்த பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னணியை உற்று நோக்கும் போது, களுத்துறை நகர சபை பிரதேசமானது, 1979 ஆம் ஆண்டு 06 மாதம் 01 ம் திகதி எனத் தேதியிடப்பட்ட 38/16 இலக்கத்திலான விசேட வர்த்தகமானி அறிவிப்பின் படியும் மற்றும் களுத்துறை பிரதேச சபை பகுதியின் ஒரு பகுதியானது, 2002 ஆம் ஆண்டு 06 மாதம் 07 ம் திகதி எனத் தேதியிடப்பட்ட 1239/27 இலக்கத்திலான விசேட வர்த்தகமானி அறிவிப்பின் படியும், எஞ்சிய பிரதேசமானது 2005 ஆம் ஆண்டு 05 மாதம் 18 ம் திகதி எனத் தேதியிடப்பட்ட 1393/06 இலக்கத்திலான விசேட வர்த்தகமானி அறிவிப்பின் படியும், கடற்கரை பகுதியிலிருந்து 1 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதிகள் உள்ளடங்கலாக அமையம்பெற்ற மற்றைய பகுதிகள் 1982 ஆம் ஆண்டு 12 மாதம் 17 ம் திகதி எனத் தேதியிடப்பட்ட 223/16 இலக்கத்திலான வர்த்தகமானி அறிவிப்பின் படியும், நகர அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு உகந்த பிரதேசங்களாக தெரிவுசெய்யப்பட்டன.

பிரதேசத்தில் காணப்படும் பௌதீக,பொருளாதார மற்றும் சமூக பாங்கினை அடிப்படையாக கொண்டு, அவற்றின் விசேட அம்சங்களான சுற்றுச்சூழல், கலாச்சார, வரலாற்று பெறுமதிமிக்க அம்சங்கள் மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளின் வளங்களின் உச்சகட்டப் பயனைப் பெற்று, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்தல், இப் பிரதேச குடியிருப்பாளர்கள் எதிர்நோக்கும் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு போன்ற அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாத்தல் மற்றும் பிரதேசத்திற்கு வருகைதரும் சகல தரப்பு மக்களுக்கும், யாத்திரீகர்களுக்கும், அனைத்து விதமான குடியிருப்பாளர்களுக்கும் சகல வசதிகளுடனும் கூடிய, வாழ்வதற்கு உகந்த, அனர்த்தங்களிலிருந்து விடுபட்ட சுபீட்சமிக்க அமைவிடமாக 2030ம் ஆண்டில் இந் நகரை மாற்றியமைப்பதே இக் களுத்துறை அபிவிருத்தி திட்டத்தின் பிரதான நோக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில், களுத்துறை அபிவிருத்தி திட்டமானது, 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட 11 வருட காலப்பகுதிக்குரிய வகையில் பிரதேச மட்டத்திற்கான ஒரு அபிவிருத்தி திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது.

## 1.2.அபிவிருத்தி திட்டத்தின் பங்குதாரர்கள்

களுத்துறை பிரதேச செயலகத்திற்குரிய, 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்டக் காலப்பகுதிக்கான இந்த அபிவிருத்தி திட்டத்தை தயார் செய்யும் காலகட்டத்தின் போது 2017 ஆம் ஆண்டு 12 மாதம் 04 ம் திகதி அன்று பங்குதாரர்களுடனான கூட்டமானது இடம்பெற்றதோடு, நகர அபிவிருத்தி அதிகாரசபையின், பணியாளர்களுக்கு மேலதிகமாக குறிப்பிட்ட அபிவிருத்தி மேற்கொள்ளப்படும், அனைத்து விதமான பிரதேசங்களையும், நிறுவனங்களையும் பிரதிநிதித்துவம் படுத்தும் வகையில் பல பங்குதாரர்கள் கலந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் இந்த செயன்முறையின் மூலம் இப் பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் ஏனைய வளங்கள் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன. இந் நிகழ்வில் கீழ்வரும் உறுப்பினர்கள் மற்றும் பங்குதாரர்கள் ஆகியோர் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## பிரதான பங்குதாரர்கள்

களுத்துறை நகர சபை
களுத்துறை பிரதேச சபை

## ஏனைய பங்குதாரர் நிறுவனங்கள்

1. களுத்துறை மாவட்ட செயலக அலுவலகம்
2. களுத்துறை பிரதேச செயலக அலுவலகம்
3. அனர்த்த முகாமைத்துவ நிலையம்
4. மத்திய சுற்றாடல் அதிகாரசபை
5. இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்.
6. கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம்
7. மாகாண வீதி அதிகாரசபை
8. மாகாண நீர் பாசன திணைக்களம்
9. களுத்துறை போதி அறக்கட்டளை
10. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
11. வீதி அபிவிருத்தி அதிகாரசபை
12. மிஹிசரு திட்ட அலுவலகம்
13. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை
14. தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்
15. மாவட்ட கடல் சுற்றுச்சூழல் அதிகாரசபை – களுத்துறை
16. விமானப்படை முகாம் – கட்டுகுறுந்த
17. உடல்நல மருத்துவ அலுவலகர் அலுவலகம் – களுத்துறை
18. பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகம்
19. பொலிஸ் நிலையம் களுத்துறை வடக்கு பிராந்தியம்
20. பொலிஸ் நிலையம் களுத்துறை தெற்கு
21. பொலிஸ் நிலையம் களுத்துறை (போக்குவரத்து பிரிவு )
22. இலங்கை மின்சார சபை
23. புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம்
24. இலங்கை மின்சார கம்பனி தனியார் நிறுவனம்
25. வீதிப் பாதசாரிகள் போக்குவரத்து அதிகாரசபை
26. ஸ்ரீலங்கா டெலிகொம் ( Sri Lanka Telecom)
27. பிராந்திய பொறியியலாளர்கள் அலுவலகம் – களுத்துறை
28. இலங்கை போக்குவரத்து சபை
29. தபால்கந்தோர் பணிப்பாளர் அலுவலகம்
30. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
31. கமநல சேவைகள் உதவி ஆணையாளர் அலுவலகம்
32. வேளாண்மைத் திட்ட அலுவலகம்
33. தொழில் துறை அபிவிருத்தி வாரியம்
34. மாவட்ட மதிப்பீட்டாளர் அலுவலகம் – களுத்துறை
35. மாவட்ட மீன்வள அலுவலகம் – களுத்துறை
36. நில அளவைக் கண்காணிப்பாளர் அலுவலகம்
37. இலங்கை அரசாங்க புகையிரத சேவை (CGR)
38. தென்னை அபிவிருத்தி வாரியம்
39. வடிப்பாலைகள் நிலையம் – களுத்துறை
40. "புல்லெர்டோன்" கைத்தொழில் வலய அலுவலகம் – களுத்துறை
41. தேசிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி – பேருந்துதுன் ரட்ட
42. தேசிய சுகாதார நிறுவனம்
43. இலங்கை காவல் பயிற்சிக் கல்லூரி
44. மாகாண கல்வி அலுவலகம்

45. தொழில்நுட்பக் கல்லூரி – களுத்துறை
46. தேசிய இளைஞர் பேரவை
47. கடற்படை முகாம்
48. சிறப்பு அதிரடிப்படை பயிற்சி மையம்
49. வர்த்தக சங்கம் – களுத்துறை

### இந்த திட்டத்திற்கான வள நபர் விபரம்

பேராசிரியர். ரங்கிக உமேஷ் ஹல்வதுர ( சிவில் பொறியியல் பீடம் – மொரட்டுவைப் பல்கலைக்கழகம்)

### நகர அபிவிருத்தி அதிகாரசபையின் களுத்துறை மாவட்ட அலுவலகத்தின் திட்டமிடல் குழு பற்றிய விபரம்.

களுத்துறை அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பில் ஈடுபட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் குழு பற்றிய விபரம்

1. திரு ஜனக் ரணவீர, பணிப்பாளர், ( மேல் மாகாணம்), நகர அபிவிருத்தி அதிகாரசபை
2. திட்டமிடலாளர் திருமதி. எம்.ஹேமந்தி, பிரதிப் பணிப்பாளர் – திட்டமிடல், நகர அபிவிருத்தி அதிகாரசபை
3. திருமதி. இமாலி ஹேரத், திட்டமிடல் உத்தியோகத்தர் , நகர அபிவிருத்தி அதிகாரசபை
4. திருமதி.சமிந்திர ஹெட்டியாராச்சி, திட்டமிடல் உத்தியோகத்தர், நகர அபிவிருத்தி அதிகாரசபை
5. திருமதி.தனதுஜா இம்புலாகொட, திட்டமிடல் உத்தியோகத்தர் நகர அபிவிருத்தி அதிகாரசபை
6. செல்வி. எ.ஜி.டி.டி. ரட்னாயக்க, உதவி திட்டமிடல் உத்தியோகத்தர் நகர அபிவிருத்தி அதிகாரசபை
7. திரு.எஸ்.டி.யு.ஜயம்பத், உதவி திட்டமிடல் உத்தியோகத்தர் நகர அபிவிருத்தி அதிகாரசபை
8. செல்வி.ஜி.டி.எஸ்.குலசூரிய, உதவி திட்டமிடல் உத்தியோகத்தர் நகர அபிவிருத்தி அதிகாரசபை
9. செல்வி.சி.எல்.ஜெயசேகர, உதவி திட்டமிடல் உத்தியோகத்தர், நகர அபிவிருத்தி அதிகாரசபை

### உதவிய ஏனைய பிரிவுகள்

.1 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு – நகர அபிவிருத்தி அதிகாரசபை.
.2 சுற்றாடல் மற்றும் இயற்கை நிலத்தோற்றப் பிரிவு – நகர அபிவிருத்தி அதிகாரசபை.
.3 அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு – நகர அபிவிருத்தி அதிகாரசபை.
.4 புவியியல் தகவல் முறைமை பிரிவு – நகர அபிவிருத்தி அதிகாரசபை.

### 1.3.அபிவிருத்தி திட்டத்தின் நோக்கம்

களு கங்கையின் அருகாமையில் அமைந்து காணப்படும் இக் களுத்துறை பிரதேசமானது, இலங்கையின் தலைநகராக விளங்கும் கொழும்பில் தொடங்கி காலி வரை விரிவடைந்து செல்லும் A 2 பிரதான வீதியின் ஒரு மத்திய அமைவிடமாக விளங்குகின்றது.

2018 ம் ஆண்டு தொடக்கம் 2040 ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள தேசிய பௌதீக அபிவிருத்தி திட்டத்திற்கு (National physical plan) இணங்க களுத்துறை நகரமானது, பொருளாதார வலயத்திற்குள் அமைந்து காணப்படும் ஒரு பிரதேசமாகவும், கடற்கரை பகுதியை அண்மித்த சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதி வலயத்திற்குள் அமைந்த பிரதேசமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வடிவமைக்கப்பட்டுள்ள மேல் மாகாண கட்டமைப்பு திட்டத்தின் படி (Proposed Western Structure Plan, 2018 – 2030), அளுத்கமை பிரதேசம் தொடக்கம் நீர்கொழும்பு பிரதேசம் வரை நீடித்து செல்லும் சுற்றுலா வலயத்திற்கு உட்பட்ட நகரமாகவும் இது அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறாக, தயார் செய்யப்பட்டுள்ள தேசிய மட்டத்திலான அபிவிருத்தி திட்டங்களை கருத்தில் கொண்டு களுத்துறை மாவட்டத்தை முழுமையாக கற்கைக்கு உரிய எல்லையாக கருத்தில் கொண்டதோடு, முழுமையாக களுத்துறை மாவட்டத்தை மையப்படுத்தி அபிவிருத்தி திட்டத்தை மேற்கொள்ளுவதில் ஏற்படும் சிரமத்தின் நிமித்தமாகவும் களுத்துறை பிரதேசத்தின் அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள எல்லை மாத்திரம் போதுமானதல்ல என்பதனாலும், மேலும் களுத்துறை நகர சபையை சுற்றி பிரதேச சபை அமைந்திருப்பதோடு, இவை இரண்டிற்கும் இடையில் சிறந்த தொடர்பு காணப்படுவதனாலும், களுத்துறை பிரதேச சபை வளாகத்தை உள்ளடக்கிய வகையிலான களுத்துறைப் களுத்துறை பிரதேச செயலகத்தை உள்ளடக்கிய பகுதியானது, களுத்துறை அபிவிருத்தி திட்டத்தை உருவாக்குவதற்கான எல்லையாக தெரிவு செய்யப்பட தீர்மானிக்கப்பட்டது.

அதனை அடிப்படையாக கொண்டு, இந்த அபிவிருத்தி திட்ட தயாரிப்புச் செயற்பாட்டின் போது பொருளாதார அபிவிருத்தி மூலோபாய திட்டம் (கட்டுப்பாட்டமைவு இடைநிறுத்தம் – Console caesura), உட்கட்டமைப்பு வசதிகள் சார் அபிவிருத்தி மூலோபாய திட்டம் ( ஒருங்கிணைந்த இடைநிறுத்தம் – Conjoined caesura) , குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் பரம்பல் மூலோபாய திட்டம் ( சௌகரியமான இடைநிறுத்தம் – Cushy caesura) , நிலைத்திருக்கத்தக்க சுற்றுச்சூழல் ரீதியான மூலோபாய திட்டம் (பசுமை இடைநிறுத்தம் – Cyan Caesura), கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவ மூலோபாய திட்டம் போன்ற பல திட்டங்களின் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் இந்த பிரதேசத்தில் காணப்படக் கூடிய பௌதீக, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு அமைவான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ், அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ள பிரதேசமானது உப வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த வலய மண்டல திட்டத்தினை தயார் செய்யும் போது, நில பயன்பாட்டு முறை மற்றும் அடர்த்தி போன்ற அம்சங்கள் கருத்திற் கொள்ளப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி மூலோபாய திட்டமானது, பிரதானமாக இரண்டு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன; பொருளாதார அபிவிருத்தி திட்டம் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி திட்டம் என்பனவாகும். அந்த வகையில் சுற்றுலா அபிவிருத்தி திட்டத்தினை நோக்கும் போது, களுத்துறை பிரதேசத்திலுள்ள சுற்றுலா தளங்களை மற்றும் கண்கவர் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் சம்மந்தமான பிரச்சினைகள் இதன் மூலம் இனங்காணப்பட்டு, அத் தளங்களுக்கிடையிலான பிணைப்பினை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு களுத்துறை பிரதேச செயலக பகுதியில் பொருளாதார ரீதியாக பெற்றுக்கொள்ளப்படும் அபிவிருத்தி சார் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், களுத்துறை பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலா தளங்களான; பௌத்த வணக்கஸ்தளம் (களுத்துறை போதி வளாகம்) , காலிடோ கடற்கரையோரப் பகுதி, ரிச்மன்ட் கோட்டைக் கட்டிட வளாகம் போன்ற சுற்றுலா தளங்களின் கவர்ச்சியை அதிகரிப்பதன் மூலம் களுத்துறை பிரதேசத்தின் சுற்றுலா சார் வருமானத்தை அதிகரித்தல் பிரதான நோக்கமாகும். பொருளாதார அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்படுகின்ற நிர்வாக மற்றும் சுகாதார துறைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தியை (Agglomerated Economic Development) ஏற்படுத்துவது நோக்கமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக, உட்கட்டமைப்பு வசதிகள் சார்ந்த மூலோபாய திட்டத்திற்கு ஊடாக இந்த பிரதேசத்தில் தற்போது காணப்படும், பிரதான வீதிகள், சிறு வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் என்பன முன்மொழியப்பட்ட அபிவிருத்திகளுக்கு அமைய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றிற்கான அணுகும் தன்மையினை (Accessibility) அதிகரித்தலை நோக்கமாக கொண்டுள்ளது. மேலும் இந்த திட்டத்தின் மூலம் புகையிரத நிலையம் மற்றும் பேருந்து தரிப்பிடங்களை ஒருங்கிணைத்து பல்மைய போக்குவரத்து நிலையமாக களுத்துறை பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல் நோக்கமாகவுள்ளது. அதுமட்டுமல்லாது, களுத்துறை பிரதேசத்திற்கு வருகை தருகின்ற யாத்திரையாளர்கள், தங்களது நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்ய நகரத்திற்கு வருகை தருகின்ற பொதுமக்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்செயற்பாட்டின் மூலம் பிரதான வர்த்தக மையங்களிலிருந்து களுத்துறை நகரிற்கு முதலீட்டாளர்களை கவர்ந்து கொள்ள முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மேலும் இந்த திட்டத்தின் மூலம் 2030ம் ஆண்டளவிற்கான எதிர்வு கூறப்பட்டுள்ள மக்கள் தொகையினருக்கு நீர் வழங்கல் திட்டம்,மின்சாரம் மற்றும் தகவல் திட்டம்,திண்ம கழிவு முகாமைத்துவம் மற்றும் கழிவு நீர் கட்டமைப்பு சார்ந்த திட்டங்கள் பற்றி கருத்தில் கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

குடியிருப்பு மற்றும் அடர்த்தி சார்ந்த மூலோபாய திட்டத்தின் மூலம் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு, கடலரிப்பு அபாய பிரதேசங்களில் மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாக்கப்படக் கூடிய வலயங்களுக்குள் குடியிருப்பு அடர்த்தியை குறைப்பதன் மூலம் பரவலான குடியிருப்பு அமைப்பொன்றை ஏற்படுத்தவும், ஏனைய பிரதேசங்களில் குடியிருப்பு அடர்த்தியை அதிகரிப்பதற்கும் தேவையான, புதிய ஒழுங்குமுறைகள் உருவாக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலைத்திருக்கத்தக்க சுற்றுச்சூழல் சார்ந்த மூலோபாய திட்டத்தின் மூலம், அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான பிரதேசங்களில், திண்ம கழிவு முகாமைத்துவம், தாழ் நில பாதுகாப்பு,கடலோர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கும் விதம் மற்றும் 2030ம் ஆண்டளவில், எதிர்வு கூறப்பட்டுள்ள மக்கள் தொகைக்கு தேவையான திறந்த வெளியிடங்கள், இளைப்பாறக் கூடிய அமைவிடங்கள் சார்ந்த திட்டம் மற்றும் முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதனை அடிப்படையாக கொண்டு, களுத்துறை அபிவிருத்தி பிரதேசத்தில் சமூக , பொருளாதார , பௌதீக மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான நிலைத்திருக்கத்தக்க மற்றும் சமநிலை மிக்க ஒரு அபிவிருத்தியை அடைவதே இந்த திட்டத்தின் நோக்கமாகவுள்ளது.

இந்த திட்ட தயாரிப்புச் செயற்பாட்டின் போது, குறித்த பிரதேசத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பிரதான பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை மட்டுமல்லாமல், சில பிரச்சினைகளில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் பூரணமாக சம்மந்தப்பட முடியாத காரணத்தினால், அவ்வாறான பிரச்சினைகளுக்கு திட்ட எல்லை ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த வகையில் நோக்கும் போது களுத்துறை பிரதேசத்தின் குடி நீரில் உப்பு கலக்கப்படும் பிரச்சினையானது, பிரதேசத்தின் மொத்த குடிமக்கள் தொகையில் 56% மானவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் கூட , இதில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு முழுமையாக சம்மந்தப்படுதல் சிரமமான விடயமாகும். மேலும், “காலிடோ” கடற்கரையைச் சார்ந்து கடலரிப்பு ஏற்படுதல் என்பது பாரிய பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, அதில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் முழுமையாக சம்மந்தப்பட முடியாமையினால், திட்ட எல்லைப் பரப்பின் மூலம் இது அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 1.4.திட்ட செயன்முறை

**பின்னணிக் கற்கை**

தகவல் சேகரிப்பு (கணக்கெடுப்பு ஆய்வுகள், கூகுள் வரைபடம் (Google Map), புகைப்படங்கள் மூலம் முதன்மை மற்றும் இரண்டாம் நிலைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன)

**விடய பரப்பு**

வெவ்வேறு விதமான தகவல் பகுப்பாய்வு முறைகளின் மூலம், தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதோடு, தகவல் கோவைகள் தயார் செய்யப்பட்டன. உதாரணம் : Excel, புவியியல் தகவல் முறைமை ( Arc GIS)

**அபிவிருத்திக்கு பாதகமான பிரச்சினைகளையும் பிரதேசத்தின் வளங்களையும் இனங்காணல்.**

பங்குதாரர்களின் கருத்துக்களின் மூலம் அடையாளம் காணப்பட்ட பிரகுச்சனைகள் மற்றும் சாதகங்கள் அடையாளம் காணப்பட்டதோடு மேலும், திட்டமிடல் சார்ந்த மூல தர்மங்களுக்கு அடிப்படையில் பல்வேறான பகுப்பாய்வு முறைகளின் மூலமாக அவை மேலும் உறுதிப்படுத்தப்பட்டன.

**தொலை நோக்குப் பார்வை, இலக்குகள், மற்றும் குறிக்கோள்களை தயார் செய்தல்**

முன்னுரிமையினை அடிப்படையாக கொண்டு பிரதேசத்தின் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு, அதன் மூலம் அப் பிரச்சினைகளை இல்லாதொழிக்கும் அடிப்படைச் செயற்பாடுகளுடனான பிரதேசத்தின் தொலை நோக்குப் பார்வை, இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**விளக்கப் பகுப்பாய்வு**

அடையாளம் காணப்பட்ட இலக்குகளுக்கு ஏற்ப சாதகங்கள், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் அடையாளம் காணப்பட்டதோடு, அத்துடன் விஞ்ஞான முறையுடன் கூடிய பகுப்பாய்வு முறைகளும் மேற்கொள்ளப்பட்டன. உ+ம் வீதி வலயமைப்புகளுக்கிடையிலான தொடர்புகளை மதிப்பாய்வு செய்தல், அபிவிருத்தியின் நிலைத்தகு தன்மையை மதிப்பிடுதல், மற்றும் சுற்று சூழல் உணர் திறன் தன்மையை மதிப்பிடுதல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

**மூலோபாயங்கள் மற்றும் திட்ட உருவாக்கம்**

அடையாளம் காணப்பட்டுள்ள இலக்குகளை அடையும் பொருட்டு மூலோபாயங்கள் மற்றும் திட்டங்கள் தயார் செய்யப்பட்டன

**நீதி மற்றும் ஒழுங்கு முறைகள் தயார் செய்தல்**

பிரதேசத்தின் கருத்து திட்டத்திற்கு அமைய, வலய மண்டல வரைபடம் தயார் செய்யப்பட்டு, திட்டத்தை சட்ட ரீதியாக அமுலாக்குவதற்கு தேவையான ஒழுங்கு முறைகள் தயார் செய்யப்பட்டன

**வரைவுத் திட்டம் தயார் செய்தல் மற்றும் இணக்கம் பெறுதல்.**

வரைவு திட்டத்தை பொது மக்கள் பார்வைக்கு உட்படுத்துதல்

**தயார் செய்யப்பட்ட வரைவு அபிவிருத்தி திட்டமானது பங்குதாரர்களின் கருத்துககளை பெற்றுகொள்வதற்காக முன்வைக்கப்படுதல்.**

தயார் செய்யப்பட்ட வரைவு திட்டத்தை பங்குதாரர்களின் கருத்துகளுக்காக உட்படுத்துதல்

**பங்குதாரர்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துகளின் அடிப்படையில்**

வரைவு திட்டத்தை பிரதான திட்டமிடல் குழுவினருக்கு முன்வைத்தல்

### 1.4.1.பின்னணி கற்கை

களுத்துறை பிரதேச செயலக வளாகத்திற்கான அபிவிருத்தி திட்ட தயாரிப்புச் செயற்பாட்டின் போது, பல்வேறான முறைகளின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டதோடு, பிரதானமாக முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தகவல் முறைகளின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

அதனை அடிப்படையாக கொண்டு தேசிய மட்டம், மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களை அடிப்படையாக கொண்டு களுத்துறை பிரதேசத்திற்கு அமைவான அமைவிடங்கள் மற்றும் அவற்றிலுள்ள விசேட தன்மைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் கணக்கெடுப்பு முறை மூலம் இரண்டாம் நிலை தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேலும்,களுத்துறை பிரதேசத்திற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை வேறு நிறுவனங்களினால் காலத்திற்கு காலம் தயார் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களும் கணக்கில் எடுக்கப்பட்டன. விசேஷமாக கொழும்பு பாரிய திட்டம் – 1978 (Colombo Master Plan – 1978), கொழும்பு பெருநகர பிராந்திய கட்டமைப்பு திட்டம் – 1998 (Colombo Metropolitan Regional Structure Plan – CMRSP – 1998), நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ஏற்கனவே தயார் செய்யப்பட்ட 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட களுத்துறை அபிவிருத்தி திட்டம், தேசிய பௌதீக திட்டம் (National physical plan, 2018– 2030) , மேலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயார் செய்யப்பட்ட முன்மொழியப்பட்ட மேல் மாகாண கட்டமைப்பு திட்டம் (Proposed Western Region Structure Plan 2018–2030) ஆகிய திட்டங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. மேலும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்தும் தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அவையாவன; களுத்துறை பிரதேச செயலகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பெருந்தெருக்கள் அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை,தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை மற்றும் கடலோர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றை குறிப்பிடலாம்.

இந்த வழியில் சேகரிக்கப்பட்ட தரவுகளில் வரலாறு, இருப்பிடம், நில பயன்பாடு மற்றும் வீதி அமைப்பு அமைப்பு மற்றும் பிற உள்கட்டமைப்பு, பொருளாதாரம், சமூக சூழல், கலாச்சாரம் போன்றவை உள்ளடங்கும். அத்தோடு அவற்றின் இந்த துறையின் சமீபத்திய போக்குகள் தொடர்பாகவும் கணக்கிலெடுக்கப்பட்டது.

### 1.4.2.விடய பரப்பு

முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தகவல் சேகரிப்பு முறைகளின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களை முதலாவதாக, வெவ்வேறான அடிப்படை பகுப்பாய்வுகளை மேற்கொண்டதோடு, இலகுவில் பாவனையை மேற்கொள்ளும் முகமாக கோவைகள் தயார் செய்யப்பட்டன. அதுமட்டுமல்லாது, களுத்துறை பிரதேசத்தில் தற்போது காணப்படும் பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பௌதீக பண்புகள் மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு ஆய்வின் முடிவுகள் மேலும் உறுதிப்படுத்திக்கொள்ளப்பட்டதோடு, அந்த தகவல்களுக்கு அமைய பூகோள வரைபடங்கள் தயார் செய்யப்பட்டன.

### 1.4.3.அபிவிருத்திக்கு பாதகமான பிரச்சினைகளை இனங்காணல்.

இது தொடர்பாக பிரதேசத்திலுள்ள வளவாளர்கள், பங்குதாரர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் போன்றவற்றை தொடர்பு படுத்தி 2017 ஆம் ஆண்டு 12ம் மாதம் 04ம் திகதி அன்று பங்குதாரர்களுடனான கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்தின் போது அங்கத்தவர்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டனர்.

1. சுற்றுச்சூழல், தொழிற்துறை மற்றும் வணிக துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் குழு.
2. நிர்வாக துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் குழு.
3. உட்கட்டமைப்பு வசதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் குழு.

இந்த கூட்டத்தின் போது அங்கத்தவர்களினால் வழங்கப்பட்ட கருத்துக்கள் யாவும் அபிவிருத்தி திட்ட தயாரிப்பின் போது கருத்திற் கொள்ளப்பட்டதோடு, பிரதேசத்தின் பிரச்சினைகள் யாவும் முன்னுரிமையின் படி அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும்,களுத்துறை பிரதேசத்திற்கு அபிவிருத்தி திட்டத்தின் அவசியத் தன்மைகள் யாதெனவும் தீர்மானிக்கப்பட்டதோடு, அபிவிருத்தி திட்ட தயாரிப்புச் செயற்பாட்டின் போது முதலாவதாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய துறை யாதெனவும் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 1.4.4.தொலை நோக்குப் பார்வை, இலக்குகள், மற்றும் குறிக்கோள்களை தயார் செய்தல்.

முன்னுரிமையினை அடிப்படையாக கொண்டு அடையாளம் காணப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முறைகள் கருத்தில் கொள்ளப்பட்டதோடு, களுத்துறை பிரதேசத்தின் எதிர்கால தொலை நோக்கு பார்வையும் தயார் செய்யப்பட்டதோடு, அதை அடைந்து கொள்ளும் முகமாக கருத்து திட்டம் ஒன்றும் தயார் செய்யப்பட்டது.

மேலும் தயார் செய்யப்பட்ட தொலை நோக்கு பார்வையின் (Vision) அடிப்படையாக கொண்டு 03 இலக்குகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, ஒவ்வொரு இலக்கிற்கும் குறிக்கோள்களும் தயார் செய்யப்பட்டன. இதன் பிரதான நோக்கமாவது, களுத்துறை பிரதேச அபிவிருத்தி திட்டத்தை சீரான முறையில் நிலைபடுத்தி கொள்ளுதலாகும்.

அந்த வகையில், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொலை நோக்கு பார்வையான “திட்டமிடப்பட்ட, நிலைத்திருக்கக் கூடிய, சிறப்பான நகர அபிவிருத்தியை நோக்கி ” என்ற அம்சங்களை களுத்துறை அபிவிருத்தி திட்டத்திற்கு ஊடாக அடைவதற்கும் இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.4.5.விளக்க பகுப்பாய்வு

இங்கு அடையாளம் காணப்பட்டுள்ள மூன்று இலக்குகளுக்கும் வெவ்வேறாகத் தனித்தனி விளக்க பகுப்பாவு மேற்கொள்ளப்பட்டது. அது மட்டுமன்றி, ஒவ்வொரு இலக்கிற்கும் தனி தனியாக அவ் இலக்கை அடைவதற்கான சாதகங்கள், பலவீனங்கள், வாய்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்ற காரணிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், அதன் மூலம் பெறப்பட்ட முடிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளும் முகமாக தொழிநுட்ப ரீதியான சில முறைகளின் மூலம் விளக்க பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அம் முறைகளாவன ;

1. அபிவிருத்தி அழுத்த தாக்கத்தின் பாங்கு (Development Pressure)
2. சுற்றுச்சூழல் உணர்திறன் சார் பகுப்பாய்வு (Environmental Sensitivity Analysis)
3. வீதி இணைப்புகளை கண்டறியும் பகுப்பாய்வு (Connectivity Analysis)
4. போக்குவரத்து நெரிசல்களை கண்டறியும் பகுப்பாய்வு (Space Syntax).
5. போக்குவரத்து முனைய பகுப்பாய்வு (Node Analysis).

இறுதியாக ஒவ்வொரு சாதகங்கள், பலவீனங்கள், வாய்புகள் மற்றும் அச்சுறுத்தல்கலுக்கும் விஞ்ஞான முறை சார்ந்த படி பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### 1.4.6.மூலோபாயங்கள் மற்றும் திட்ட உருவாக்கம்

பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள பிரதான பிரச்சினைகளை இழிவாக்கி காணப்படக் கூடிய வளங்களை உச்சமாக பயன்படுத்தி,அடையாளம் காணப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்குரிய மூலோபாயங்கள் மற்றும் திட்டங்கள் இப்படிமுறையில் தயார் செய்யப்பட்டன.

அதனை அடிப்படையாக கொண்டு, பிரதான 5 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவையாவன ;

1. உட்கட்டமைப்பு வசதிகள் சார் அபிவிருத்தி மூலோபாய திட்டம்.
   - சேவைகள் முகாமைத்துவ திட்டம் ( சுகாதார மற்றும் கல்வி வசதிகள்)
   - பெருந்தெருக்கள் மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம்.
     - பெருந்தெருக்கள் அபிவிருத்தி திட்டம்.
     - போக்குவரத்து அபிவிருத்தி திட்டம்.
   - நீர் வழங்கல் திட்டம்.
   - மின்சார வழங்கல் திட்டம்.
   - மலசல மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ திட்டம்.
   - திண்ம கழிவு முகாமைத்துவ திட்டம்.
2. பொருளாதார அபிவிருத்தி மூலோபாய திட்டம்.
   - பொருளாதார அபிவிருத்தி திட்டம்.
   - சுற்றுலா அபிவிருத்தி திட்டம்.
3. நிலைத்திருக்கத்தக்க சுற்றுச்சூழல் சார்ந்த மூலோபாய திட்டம்.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டம்.
- இயற்கை நிலத்தோற்ற முகாமைத்துவ திட்டம்.
- அபாய முகாமைத்துவ திட்டம்.
- பொது மக்களுக்கான திறந்தவெளி மற்றும் பொழுதுபோக்கு அமைவிட உருவாக்கல் திட்டம்.
- விவசாய திட்டம்.

4. குடியிருப்பு மற்றும் அடர்த்தி மூலோபாய திட்டம்
5. கலாச்சாரம், சமய மற்றும் பாரம்பரிய முகாமைத்துவ மூலோபாய திட்டம்.

பின்னர் பல்வேறான பகுப்பாய்வு முறைகளுக்கு ஊடாக நடைமுறை படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் யாதெனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

### 1.4.7.நீதி மற்றும் ஒழுங்கு முறைகள் தயார் செய்தல்

அபிவிருத்தி திட்டத்தை சட்ட ரீதியாக அமுலாக்குவதற்கு தேவையான நீதி, ஒழுங்கு முறைகள் மற்றும் நில பயன்பாட்டு முறை சம்மந்தமான நீதி, ஒழுங்கு முறைகள் போன்றவற்றை தயார் செய்தலும், திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள தொலை நோக்கு பார்வையை அடைந்து கொள்ளுவதற்கு தடையாக அமையக் கூடிய பிரச்சினைகள் மற்றும் தற்போது பிரதேசத்தில் காணப்படக் கூடிய பிரச்சினைகளை குறைத்தல் சம்மந்தமான நீதி மற்றும் ஒழுங்கு முறைகளை தயார் செய்தல் போன்றன பிரதான நோக்கங்களாக அடையாளமிடப்பட்டன.

அதன் நிமித்தமாக, தயார் செய்யப்பட்ட கருத்தாக்கத் திட்டத்தில் (Concept Plan) குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை உள்வாங்கிய வகையில் அபிவிருத்தி பிரதேசத்தை பிரதான சில வலயங்களாக பிரித்ததன் மூலமாக வலய மண்டல வரைபடமானது( Zoning Map) தயார் செய்யப்பட்டது. மேலும் இங்கு, ஒவ்வொரு குறித்த வலயத்திற்கும் வெவ்வேறாக நீதி, ஒழுங்கு முறைகள் தயார் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### 1.4.8.வரைவுத் திட்டம் தயார் செய்தல் மற்றும் இணக்கம் பெறுதல். (Consent)

அபிவிருத்தி திட்ட தயாரிப்புச் செயற்பாட்டின் பின்னர் பொது மக்கள் பார்வைக்கு உட்படுத்தி அவர்களின் அனுமதியை மற்றும் விமர்சனங்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை இப் படிமுறையில் இடம் பெறும்.

### 1.4.9.இணக்கம் பெற்றுக் கொள்ளப்பட்ட வரைவு திட்டத்தை முன்வைத்தல்.

இணக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அத் திட்டத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபையின், பிரதான திட்டமிடல் குழுவினருக்கு முன்வைத்து மேலும் உறுதிப்படுத்தி கொள்ளுதல் இந்த கட்டத்தில் இடம் பெறும்.

### 1.4.10.அனுமதி மற்றும் அமுலாக்கம் செயற்பாடுகள்

பங்குதாரர்கள் மற்றும் சம்மந்தபட்ட பிரதான திட்டமிடல் குழுவினர்களின் கருத்துக்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த திட்டத்தை அரச வர்த்தமானியில் அறிக்கையிடல் தொடர்பான அனுமதியை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அமுலாக்குதல் மற்றும் நடைமுறை படுத்துதல் போன்றன இப் படிமுறையில் இடம் பெறும்.

# அத்தியாயம் இரண்டு



## முதற் கட்ட கற்கை

## 2.1கற்கைக்கு உட்படுத்தப்பட்ட பிரதேசம்

இக் களுத்துறை அபிவிருத்தி திட்டத்தின் படி, களுத்துறை பிரதேச செயலக வளாகமானது அபிவிருத்தி உட்பட்ட பிரதேசமாக கருதப்படுவதோடு, அதன் எல்லையானது களுத்துறை நகர சபை வளாகம் மற்றும் களுத்துறை பிரதேச சபை வளாகத்திலும் இணைந்த பிரதேசத்தோடு நிர்ணயிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் களுத்துறை நகர சபையின் நில அளவானது, 7.85 சதுர கிலோ மீட்டருக்கு உட்பட்ட பிரதேசமாகவும், களுத்துறை பிரதேச சபை நில அளவானது, 63.85 சதுர கிலோ மீட்டருக்கு உட்பட்ட பிரதேசமாகவும், களுத்துறை பிரதேச செயலகத்தின் மொத்த நில அளவானது, 71.7 சதுர கிலோ மீட்டருக்கு உட்பட்ட பிரதேசமாகவும் காணபடுகின்றது.

வரைபட இலக்கம் 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, வடக்கு திசையில் களுத்துறை பிரதேச செயலக பிரிவையும், கிழக்கு திசையில் பண்டாரகம மற்றும் தொடங்கம களுத்துறை பிரதேச செயலக பிரிவு பகுதியையும், தெற்கு திசையில் பேருவளை பிரதேச செயலக பிரிவையும், மேற்கு திசையில் இந்து சமுத்திரப் பரப்பை எல்லையாகக் கொண்டு அமைந்து காணப்படும் களுத்துறை பிரதேச செயலக பிரிவு வளாகமானது, கொழும்பு காலி நகர்களை இணைக்கும் பிரதான வீதியிலும், கடற்கரை காட்சியுடன் தொடர்புற்ற அமைந்து காணப்படும் புகையிரத சேவையைக் கொண்டதாகவும் , கண் கவர் கழு கங்கையின் மூலம்வும் சூழப்பட்டு அமைந்து காணப்படுகின்றது.

## 2.2திட்டமிடல் மற்றும் பௌதீக சூழல்

களுத்துறை அபிவிருத்தித் திட்ட தயாரிப்புச் செயற்பாட்டின் போது தேசிய மற்றும் பிராந்திய தொடர்புகள், மற்றும் களுத்துறை பிரதேசத்தை மையப்படுத்தி ஏற்கனவே தயார் செய்யப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் சம்மந்தமாகவும் கவனத்தில் கொள்ளப்பட்டது. அத் திட்டங்களாவன;

கொழும்பு பாரிய திட்டம் – 1978 (Colombo Master Plan Project – 1978), கொழும்பு பெருநகர பிராந்திய கட்டமைப்பு திட்டம் (Colombo Metropolitan Regional Structure Plan – CMRSP – 1998), மேல் மாகாண பிராந்திய திட்டம் – 2004 (Western Region Megapolis Plan – CESMA – 2004) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ஏற்கனவே தயார் செய்யப்பட்ட 2005 தொடக்கம் 2020 வரைக்குமான திட்டம் (Urban Development Authority Plan), களுத்துறை அபிவிருத்தி திட்டம், 2018 – 2050 காலப்பகுதிக்கான தேசிய பௌதீக திட்டம் (National Physical Plan – 2018– 2050), மேலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயார் செய்யப்பட்ட முன்மொழியப்பட்ட மேல் மாகாண பிராந்திய கட்டமைப்பு திட்டம் (Proposed Western Region Structure Plan – 2018) ஆகிய திட்டங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. அந்த வகையில் களுத்துறை அபிவிருத்தி திட்ட தயாரிப்பிற்கு உள்ள சாதகங்கள் மற்றும் ஆலோசனைகள் பின்வருமாறு அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் நோக்கும் போது, 1978ம் ஆண்டு தயார் செய்யப்பட்ட கொழும்பு பாரிய திட்டத்தின் (Colombo Master Plan – 1978) பின்னிணைப்பு – 01 இன் படி, அபிவிருத்திக்கு உகந்த பிரதேசமாக தெரிவு செய்யப்பட்ட பகுதியில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களும், களுத்துறை மாவட்டத்தில் ஒரு பகுதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த திட்டத்தின் முழுமையான அபிவிருத்தி பகுதியானது,இரண்டு பிரதான வலயங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன; மத்திய உப பிராந்தியம் (Central Sub Region) மற்றும் வெளி பிராந்தியம் (Outer Region) என்பனவாகும். அந்த வகையில் நோக்கும் போது, களுத்துறை நகரமானது வெளி பிராந்திய பகுதிக்குள் உள்ளடக்கப்படுகின்றது.

கொழும்பு பெருநகர பிராந்திய கட்டமைப்பு திட்டம் (Colombo Metropolitan Regional Structure Plan – CMRSP – 1998) பின்னிணைப்பு – 02 இன் படி, மேல் மாகாணத்தின் நகர குணாம்சங்களை அடிப்படையாக கொண்டு நோக்கும் போது, களுத்துறை நகரமானது, சுற்றுலா துறைக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய அமைவிடங்கள் அமைந்த அம்சத்தினை அடிப்படையாக கொண்டு இரண்டால் நிலைக்குரிய பிரதேசமாகவும் மற்றும், பிரதேசத்தின் மத்தியில் அமைந்து காணப்படும் (Regional Center) மற்றும் அதிகளவில் கடலரிப்பிற்கு முகங்கொடுக்ககூடிய நகரமாகவும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றது.

பரவலாக்கல் தொடர்ப்பான கருத்தாக்கம்(Decentralization Concept), தோட்டப் பெருநகரம் கருத்தாக்கம் (Garden cityConcept & Green Finger Concept ) ஜிவித்தல், விளையாட்டு மற்றும் பணியாற்றுதல் தொடர்பான கருத்தாக்கம் (Live, Play & Work Concept) மேல் மாகாண பாரிய நகர திட்டம் - 2004 (Colombo Megapolis Plan – CESMA-2004) (பின்னிணைப்பு 03) வெளிவட்டச் நகரியம் (Outer Ring Town Ship) பிராந்திய மையம் (Regional Centre ) போன்ற விடயங்கள் அபிவிருத்தித் திட்ட தயாரிப்புச் செயற்பாட்டின் போது கருத்தில் கொள்ளப்பட்டது




வரைபடம் 2.1 : களுத்துறை பிரதேசத்தின் களுத்துறை பிரதேச செயலக பிரிவு – 2017
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

2011 ஆம் வருடம் கார்த்திகை மாதம் 07 ஆம் நாள் அன்று என தேதியிடப்பட்ட இலக்கம் 1729/15 இலான வர்த்தகமானி மூலம் அரச வர்த்தமானியிடப்பட்ட தேசிய பௌதீக திட்டத்தின் படி 2011– 2030 (National Physical Plan 2011 – 2030) (குறிக்கோள் 04) இன் படி, எதிர்காலத்தில் நாட்டின் எல்லா பகுதிகளையும் அடையாளப்படுத்தும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள பெரு பிராந்திய வலயத்தில், களுத்துறை நகரமானது மேல் மாகாணத்தில் உள்ள பிரதான நகரமொன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தோடு, அழகிய கடற்கரை பிரதேசத்தை உள்ளடக்கிய சூழல் ரீதியான உணர் தன்மை மிக்க ஒரு நகரமாகவும், கட்டுகுறுந்த விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய செய்வதற்கு உகந்த பிரதேசமாகவும் இப் பிரதேசம் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும், களுத்துறை பிரதேசத்தின் கடற்கரையை அண்டிய பகுதியானது, மிகுந்த சூழல் ரீதியான உணர் தன்மையுடையதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தோடு, அதிக அளவில் கடலரிப்பு இடம் பெறக் கூடிய பகுதி எனவும் இது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் (2005 – 2020) காலப்பகுதியை மையமாக கொண்டு, களுத்துறை நகர அபிவிருத்தி சார் பிரதேசத்தை மையப்படுத்தி 09 வலயங்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ள (பின்னிணைப்பு – 05) அபிவிருத்தி திட்டமானது, பிரதேசத்தின் பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சூழல் அம்சங்களை ஒரு சீரான மட்டத்தில் நடத்திச் செல்லும் நோக்கில் உருவாக்கப்பட்டதோடு, அந்த அபிவிருத்தி திட்டமானது தற்போது, காலாவதியாகி உள்ளது. எனவே, தற்போதயை நிலைமை மற்றும் தேவைகளை அடிப்படையாக கொண்டு அத் திட்டத்தை திருத்தி அமைப்பதற்கான தேவைப்பாடும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

2018 – 2050 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியை மையப்படுத்தி, தேசிய பௌதீக திட்டமிடற் திணைக்களத்தினால் திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டுள்ளதுடன், (பின்னிணைப்பு – 06) அத் திட்டத்தில் களுத்துறை பிரதேசமானது பொருளாதார வலயத்திற்குள் அமைந்து காணப்படும் ஒரு நகரமாகவும், கடலோர சூழல் உணர்திறன் தன்மை மிக்க வலயத்திற்குள் அமைந்து காணப்படும் ஒரு பிரதேசமாகவும் அடையாளமிடப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயார் செய்யப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட மேல் மாகாண பிராந்திய கட்டமைப்பு திட்டத்தின் 2018 (Proposed Western Region Structure Plan 2018) ( பின்னிணைப்பு – 07) படி, அழுத்கம தொடங்கி நீர் கொழும்பு வரை நீளும் சுற்றுலா வலயத்திற்குள் அமைந்து காணப்படும் ஒரு பிரதேசமாகவும் களுத்துறை அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும், தற்போது சுற்றுலா துறை சார்ந்த சாதகங்களை மையமாக கொண்டு அத்துறையின் அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி தொடர்பில் அடையாளம் காணப்பட்டுள்ளமையும் ஒரு சிறப்பம்சமாகும்.

வரைபடம் 2.2 இல் காட்டப்பட்டுள்ள, களுத்துறை நகர் மற்றும் அதற்கிடையிலான தேசிய மற்றும் பிராந்திய தொடர்புகளை அடிப்படையாக கொண்டு நோயக்குமிடத்து,களுத்துறை நகரமானது, கொழும்பு மற்றும் வெள்ளவாய பிரதான வீதியில் அமைந்து காணப்படுகின்றது. அத்தோடு, இலங்கையின் தலை நகரான கொழும்பு நகரிற்கு (40 கிலோ மீட்டர் ) அருகாமையிமும், ஏனைய பிரதான உப நகரங்களான, பாணந்துறை, பண்டாரகம, நேபோட, மதுகம மற்றும் பேருவளை ஆகிய பிரதேசங்களுக்கு, வரிசை கிரமப்படி 15 கிலோ மீட்டர், 17.5 கிலோ மீட்டர், 28 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர், 23 கிலோ மீட்டர் மற்றும் 14 கிலோ மீட்டர் ஆகிய தூரங்களை கொண்டு மிக அருகாமையில் அமைந்து காணப்படுகின்றது. மேலும், களுத்துறை – ஹொரண, களுத்துறை – பண்டாரகம, களுத்துறை – மதுகம, களுத்துறை – நேபோட ஆகிய பிரதான வீதிகளை தொடர்பு படுத்திய வகையில், இப் பிரதேசங்களானவை , ஒரு சிறந்த வீதி அமைப்பின் மூலம் பிரதான கொழும்பு வெள்ளவாய வீதிக்கு (A 2) இணைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, களுத்துறை நகரிற்கு அண்மையில் (18 கிலோ மீட்டர்) களனிகம தெற்கு அதிவேக கடுகதி பாதை இடமாற்றமும், 13 கிலோ மீட்டர் என்றளவிலான தொலைவில் தொடங்கம தெற்கு அதிவேக கடுகதி பாதை இடமாற்றமும் அமைக்கப்பட்டு காணப்படுவதன் விளைவாக, பிராந்திய ரீதியிலான தொடர்புகளை அதிகரித்துக்கொள்வதற்கு உதவியாக உள்ளது. அதுமட்டுமல்லாது, மருதானை முதல் பேலியத்த பிரதேசம் வரை கடற்கரை காட்சியுடன் நீளும் புகையிரத பாதையின் அருகே களுத்துறை புகையிரத நிலையம் அமைக்கப்பட்டிருப்பதனால், போக்குவரத்து அம்சத்தில் ஒரு பிரதான இடத்தை தன்னகத்தே பிடித்துக்கொண்டுள்ளது மட்டுமல்லாது, சந்தைப்படுத்தல், நிர்வாகம், கல்வி, கலாச்சாரம் மற்றும் களுத்துறை மாவட்டத்தினுள் உள்ள சேவை மத்திய நிலையமாகவும் களுத்துறை அமைந்து காணப்படுகின்றது. அத்தோடு, சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




வரைபடம் 2.2 : களுத்துறை பிரதேச செயலக பிரிவிற்கான தேசிய மற்றும் பிராந்திய தொடர்புகள் (2018).
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை( 2018)

களுத்துறை பிரதேச செயலக பிரிவின் 2018 ஆம் ஆண்டை மையப்படுத்தி தயார் செய்யப்பட்ட "சம்பத் பெத்திகட" என்னும் வள விபரண அறிக்கையின் பிரகாரம் நோக்குகையில், புராணம் தொடங்கி 18 ஆம் நூற்றாண்டுகள் வரையில் சில பாய் மர கப்பல்கள் இப் பிரதேசத்திற்கு வருகை தந்துள்ளமைக்கான சான்றுகள் உள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, "காலதித்த" என்று இப் பிரதேசம் பெயர் பெற்றதோடு, காலப்போக்கில் களுத்துறை என்று பெயர் பெற்றதாகவும், கணிப்பிடப்படுகின்றது.

அதனை அடிப்படையாக கொண்டு நோக்கும் போது, களுத்துறை பிரதேசத்தில் வைக்கப்பட்டுள்ள புனித போதி மரமானது, அனுராதபுரத்தத்தில் அமைந்து காணப்படும் ஶ்ரீ மகா போதியின் ஒரு கிளையாக நம்பப்படுகின்றது. 2 ஆம் நூற்றாண்டுகளின் போது தொலமியினால் வரையப்பட்ட புராண உலக வரைபடத்தில், இலங்கை நாட்டினுள் குறிக்கப்பட்டுள்ள நுபரத்த எனும் பிரதேசமானது களுத்துறை நகரை குறிப்பதாக அனுமானிக்கப்பட்டுள்ளது. மேலும் களு கங்கையின் மத்தியில் அமைந்து காணப்படும் பளுங்கல என்னும் பிரதேசத்தில், பிராமணர்களினால் கி. பி 5 ஆம் நூற்றாண்டுகளில், எழுதப்பட்டுள்ள கடிதங்கள் என கிடைக்கப்பெற்ற, தற்போது தொல்பொருளியல் திணைக்களத்தினால் பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ள பிரதேசமானது, அக்காலத்தில் இப் பிரதேசத்தில் வாழ்ந்த குடியிருப்பாளர்கள் விவசாயத்தை தமது முக்கிய வாழ்வாதாரமாக கொண்டிருந்தமையை வெளிப்படுத்துகின்றது. மேலும், அக்காலத்தில் வாழ்ந்த மக்கள், சமய பின்னணியை அடிப்படையாக கொண்டே விவசாயம் மற்றும் வணிக செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என்பதும் வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் இங்கு, கடல் நீரேரியை அண்டிய வடக்கு மற்றும் தெற்கு திசை பகுதியில் 02 மீனவ கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு, குறுக்கு வழி பாதைகள் நிர்மாணிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுவதோடு, பேருவளை நகரை சேர்ந்த சில வியாபாரிகளினால், களு கங்கைக்கு ஊடாக சபரகமுவை பிரதேசத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்கள் பண்டமாற்று செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும், களுத்துறை நகரமானது நூறு வருடங்களுக்கு மேலாக காலனித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன், போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தின் போது ( 1505 – 1655), களுத்துறை நகரின் இயற்கை ரீதியான பாதுகாப்பு அமைவிடத்தை கருத்திற் கொண்டு, அவர்களால் கோட்டை நிர்மாணிக்கப்பட்டதோடு, மத நடவடிக்கைகளுக்காக ஆலயங்களும் கட்டுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன், ஒல்லாந்தரின் ஆட்சி காலத்தின் (1655– 1796), 1655 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது, களு கங்கைக்கு குறுக்காக புதிய பாலம் ஒன்று கட்டுவிக்கப்பட்டதோடு, அதன் மூலம், சில வர்த்தக மற்றும் சேவைகள் இடம் பெற்றதாக வரலாற்று சான்றுகள் எடுத்திக் காட்டுகின்றன.

அதே வேளை, நிர்வாக செயற்பாடுகள் பரவலாக்கப்பட்டதோடு, சுயாதீன சுகாதார நிறுவனமானது 1878 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மேலும், அரச முகவர் பதவியானது 1915 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுடன், நகர சபையானது 1923 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மேலும் , 1933 மற்றும் 1940 ஆம் காலப்பகுதிகளில் மின்சாரம் மற்றும் நீர் வழுங்கல் சம்மந்தமான சில முன்னேற்ற நடவடிக்கைகள் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டன.

நகர்புற மைய பரவலாக்கம் பற்றி நோக்கும் போது , களுத்துறை பிரதான நகரிற்கு மேலதிகமாக, உப நகரங்களாக களுத்துறை வடக்கு பிராந்திய மற்றும் தெற்கு பகுதி அத்துடன் கட்டுகுறுந்த ஆகிய பிரதேசங்கள் கருதப்பட்டதுடன், அக்காலத்தில் வாழ்ந்த நடுத்தர வர்க்கத்தினர், களுத்துறையின் வடக்கு திசையை வாழ்வதற்காக தெரிந்தெடுத்துள்ளனர்.

சுதந்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் (19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டு காலப்பகுதி) 1910 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பௌத்த ஆலயங்களை "போதிய" பாதுகாப்பதில் சிரமங்களை எதிர்நோக்கிய போதும், 1980 களில் தூபிகளை கட்டுவித்தமையினால், அது பௌத்த மதத்திற்கான ஒரு மறு மலர்ச்சி காலமாக கருதப்பட்டது. மேலும், 1990 காலப்பகுதியில், களுத்துறை வடக்கு பிராந்தியம் மற்றும் தெற்கு பகுதிகளில், புதிய பாலம் மற்றும் பிரதேசத்தினுள் வீதி வலையமைப்புகள், கால்வாய் வடிவமைப்புகள் போன்ற அமைக்கப்பட்டன. அதன் பிற்பட்ட காலத்தில், களுத்துறை நகர சபை வளாகமானது, நகர அபிவிருத்தி அதிகாரசபையினால், அபிவிருத்திக்கு உகந்த பிரதேசமாக 38/16 என்ற அரச வர்த்தமானி இலக்கத்தின் படி, 1979 ஆம் ஆண்டு 06 ம் மாதம் 01 ம் திகதி சுவீகரிக்கப்பட்டது. அது மட்டுமன்றி, அந்த பிரதேசத்தின் ஒரு பகுதியானது, பட்டினமும் நாடும் திட்டமிடல் நிறுவனத்தினால், புனித பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. களுத்துறை பிரதேச சபை வாளாகமானது, 223/16 எனும் விசேட வர்த்தமான அறிவித்தல் இயக்கத்தின் படி, 1982 ஆம் ஆண்டு 12 ம் மாதம் 17 ம் திகதி சுவீகரிக்கப்பட்டது. கடற்கரையிலிருந்து சுமார் 1 கிலோ மீட்டர் பிரதேசமானது, அரச வர்த்தமானி இலக்கம் 1239/27 இன் படி, 2002 ஆம் ஆண்டு 06 ம் மாதம் 07 ம் திகதி சுவீகரிக்கப்பட்டதோடு, களுத்துறை நகர சபை வளாகமானது, 6/1393 எனும் அரச வர்த்தமானி

இலக்கத்தின் படி, 2005 ஆம் 05 ம் மாதம் 18 ம் திகதி நகர அபிவிருத்திக்கு உகந்த பிரதேசமாக சுவீகரிக்கப்பட்டது. களுத்துறை நகரின் பரிணாம அபிவிருத்தியினை எடுத்து இயம்பும் புகைப்படங்கள் சில உரு இலக்கம் – 2.2 மற்றும் 2.3 இல் காட்டப்படுகின்றது. ( பக்கம் 26 மற்றும் 27 ஐ பார்க்கவும்).

களுத்துறை பிரதேசத்தின் காலநிலை மற்றும் இடவியல்பை நோக்கும் போது, குறை நாட்டு ஈர வலய மண்டலத்திற்குள் உள்ளடங்குக்கின்றது. சராசரி மழை வீழ்ச்சியானது, 2500 மி. மீ – 3000 மி. மீ ஆக பதிவாகியுள்ளதுடன், சராசரி வெப்பநிலையானது, 24. 26 செல்சியஸ் ஆகவும் சார்ந்த ஈரப்பதமானது, 80 – 85% மான ஆகவும் குறிப்பிடப்படுகின்றது.

சமனல உச்சியிலிருந்து (சிவனொளி பாத மலை) ஆரம்பமாகி, நீர் வீழ்ச்சிகள், நீரூற்றுக்களுடன் பாய்ந்து இறுதியில் களுத்துறை முகத்துவாரத்தின் மூலம் கடலுடன் சங்கமிக்கும், களு கங்கையே, களுத்துறை பிரதேசத்தின், முழு களுத்துறை பிரதேச செயலக பிரிவிற்குமான பிரதான நீர் மூலமாக விளங்குகின்றது. களு கங்கையுடன் இணையும் பாரிய பல கால்வாய்கள் களுத்துறை பிரதேச செயலக பகுதிக்குள் விரிவடைந்து செல்கின்றது. அதில் பிரதானமாக, ஹீனேட்டியங்கல கால்வாய், மொரன்துடுவ கால்வாய் மற்றும் வடக்கு திசையில் அமைக்கப்பட்ட புதிய கால்வாய் என்பன விளங்குகின்றன. இவற்றிற்கு மேலதிகமாக, பொல்கொட ஏரியானது, திட்டமிடல் பிரதேசத்தின் வடக்கு திசையில் அமைந்திருப்பதோடு, அதன் காரணமாக, இப் பகுதியானது முழு வருடமும் நீர் வளத்தினால் நிறைவடைந்துள்ளது. மேலும் இப் பகுதியானது சமதள சதுப்பு நிலத்தை கொண்டிருப்பதனால், வருடம் முழுவதும், கால நிலையை சீர் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.




வரைபடம் 2.3 : களுத்துறை களுத்துறை பிரதேச செயலக வளாகத்தினுள் காணப்படும் நீரோட்ட அமைப்பு (2018)
மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை( 2018)

மக்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி, 2001 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளை ஒப்பிட்டு அவதானிக்கும் போது, மக்கள் தொகை மற்றும் அபிவிருத்தி விகிதம் குறைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. 2001 ஆம் ஆண்டின் படி மக்கள் தொகையானது, 37,946 ஆகவும், 2011 ஆம் ஆண்டளவில் 31,987 ஆக குறைந்து செல்வதோடு, 2017 ஆம் ஆண்டில் 29,626 ஆக கணிசமாக குறைந்து செல்லும் போக்கை அவதானிக்க முடிகின்றது. மேலும் 2001 – 2011 ஆம் ஆண்டு வரையிலான அபிவிருத்தி விகிதத்தை நோக்கும் போது, 1.69% மான வரை குறைந்து செல்வதாக அறியப்படுகின்றது. ஆயினும் களுத்துறை பிரதேச சபை வளாகத்துடன் அதே கணிப்பீட்டின் படி ஒப்பிட்டு அவதானிக்கும் போது, 2.0% மான ஆகவும், களுத்துறை பிரதேச செயலக வளாகத்துடன் ஒப்பிடுகையில், அதே காலப்பகுதியில் 1.13% மான ஆகவும் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடற்கரைக்கு பின்னிலமாக அமைந்து காணப்படும் பகுதி (hinterland) முதல் கடற்கரையை அண்டிய பிரதேசம் வரையிலான மக்கள் தொகை அபிவிருத்தி விகிதமானது, பின்னிணைப்பு – 09 ல் காட்டப்படுகின்றது.

அதன்படி, நகர சபையின் அதிகார எல்லைக்குள் இடம்பெறும் மக்கள் தொகை வளர்ச்சி கீழே அட்டவணை 2-1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1 : களுத்துறை பிரதேச செயலக பிரிவிற்கான மக்கள் தொகை அபிவிருத்தி விகிதம் (2001 – 2030)

| பிரதேசம் | 2001 | 2011 | மக்கள் தொ அபிவிருத் விகிதம் 200 2011 | 2017ஆம் ஆண்டிற்க முன்மொழிவு | 2030ஆம் ஆண்டிற்கான முன்மொழிவு |
|---|---|---|---|---|---|
| நகர சபை | 37,946 | 31,987 | – 1. 69 | 29,626 | 26,214 |
| பிரதேச சபை | 104,740 | 127,710 | 2. 0 | 141,209 | 173,640 |
| களுத்துறை பிரதேச செ வளாகம் | 142,686 | 159,697 | 1. 13 | 170,835 | 199,854 |

மூலம் : மக்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் ( 2001 – 2011).

மேற்குறிப்பிட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு, கிராம சேவக பிரிவுகளில், புலேர்டன் (Pulerton) மேற்கு பகுதியே அதிகளவு மக்கள் தொகை அபிவிருத்தியை 7.7% மான கொண்டுள்ளமையை காணலாம் மற்றும் கித்துள்ளவ 6.3% மான, தேக்கவத்த 3.3% மான ஆகவும் காணப்படுகின்றது. அதிக மக்கள் தொகை அபிவிருத்தி விகிதம் காணப்படுவதற்கான பிரதான காரணமாக, சுனாமி அனர்த்தத்திற்கு பின்னர் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டமை மற்றும் நில தொகுதி பிரிக்கப்பட்டமையே காரணமாக கொள்ளப்படுகின்றது.

மக்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு நோக்கும் போது, களுத்துறை பிரதேச செயலக பிரிவின் வீட்டுப் பங்கு (housing stock) ஆனது முறையே; 2001 – 34,391 , 2011 – 39,876, மற்றும் 2017 – 43,591 ஆக பதிவாகியுள்ளது. மக்கள் தொகை அபிவிருத்தி விகிதத்தினை அடிப்படையாக கொண்டு வீட்டு அலகுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து சென்றுள்ளமையை அவதானிக்கலாம். அதிகபட்ச மக்கள் தொகை அடர்த்தியானது 2017 ஆம் ஆண்டில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 18,722 மக்கள் என்ற அடிப்படையாக கொண்டு மஹவத்த கிராம சேவகர் பிரிவில் காணப்பட்டுள்ளதோடு, குறைந்தபட்ச மக்கள் தொகையானது , ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 487.15 என்ற வகையில் குடாகோனாடுவ என்ற கிராம சேவகர் பிரிவிலும் காணப்பட்டுள்ளது. 2001 மற்றும் 2030 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் தொகை அடர்த்தியில் ஏற்பட்ட வித்தியாசங்களாவன, பின்னிணைப்பு – 10 இல் காட்டப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டின் தொகை மதிப்பு அறிக்கையின் படி, மொத்த மக்கள் தொகையில் 52% மான ஆனவர்கள் பெண்கள், 48% மான ஆனவர்கள் ஆண்கள் ஆவர். 0 – 14 வயது வரையுள்ள தொகையினர் 24% மான ஆகவும், 15 – 59 வயது வரம்பிற்குரியவர்கள் 63% மான ஆனவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும் 91% மான ஆன பெரும்பான்மையினர் சிங்களவர் ஆவர்.

களுத்துறை நகரானது, களுத்துறை மாவட்டத்தின் ஒரு தலை நகராகவும்,நிர்வாக மையமாகவும் காணப்படுகின்றது. அதே சந்தர்ப்பதில், சமய, கலாச்சார மற்றும் போக்குவரத்து துறைகளில் ஒரு தனித்துவ தன்மையையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. அதன் காரணமாக, பயணிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

புகையிரத நிலைய தகவலினை அடிப்படையாக கொண்டு நோக்கும் போது, அதி வேக புகையிரதங்கள் நிறுத்துமிடமாக காணப்படுவதனால், நாளாந்த பயணிகளின் எண்ணிக்கையானது 6000 என பதிவாகியுள்ளது. கல்வி மற்றும் வர்த்தக துறை சார் பிரிவுகளில் சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு நோக்கும் போது, 25,0000 மற்றும் 20,000 நபர்கள் அவர்களின் கல்வி மற்றும் வணிக தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதாக வருகை தருகின்றமை புலப்படுகின்றது. நாகொட வைத்திய சாலையில் சேகரிக்கப்பட்ட தகவலினை அடிப்படையாக கொண்டு, 5000 நோயாளிகள் தங்களது வைத்திய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வருகை தருவதோடு, 5000 ற்கும் மேற்பட்ட நபர்கள் தமது நிர்வாக தேவைகளுக்காக வருகின்றனர் என்பதும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

களுத்துறை போதி அறக்கட்டளை மற்றும் பொது மக்களுக்கான அறக்கட்டளை என்பவற்றில் சேகரிக்கப்பட்ட தகவலை நோக்கும் போது, குறிப்பிட்ட மக்கள் தொகையினர், களுத்துறை போதி, காலிடோ மற்றும் ரிச்மன்ட் கோட்டைக் கட்டிட வளாகம் போன்றவற்றை பார்வையிடுவதற்காக நாளாந்தம் வருகை தருகின்றமை புலப்படுகின்றது. இந்த எண்ணிக்கையானது, வருடத்திற்கு வருடம் மாற்றமடைவதோடு, பிரதானமாக, போதிய அமைவிடத்தை பார்வையிட வருகைதரும் மாக்கள் தொகையின் எண்ணிக்கையின் மாற்றங்குடனான எண்ணிக்கை பற்றிய விபரம் பின்வருமாறு;

அட்டவணை 2.2 : களுத்துறை போதிய அமைவிடத்திற்கு ஈர்க்கப்படும் மக்கள் தொகை.

| | |
|---|---|
| சாதரணமான நாட்களில் வருகைதரு எண்ணிக்கை | 1000 – 1500 |
| சாதாரணமான போயா நாட்க வருகைதருவோர் எண்ணிக்கை | 3500 – 4000 |
| விஷேட போயா நாட்களில் வருகைதரு எண்ணிக்கை | 8000 அல்லது அதற்கு மேலாக |

மூலம் : களுத்துறை போதி அறக்கட்டளை – ( 2018 )

இங்கு காணப்படும் விடுதி வசதிகளின் அடிப்படையிலேயே பயணிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டின் வள அறிக்கையின் படி, 5 நட்சத்திர விடுதிகளும், 50 சாதாரண தர விடுதிகளும் இப் பிரதேசத்தில் காணப்படுகின்றதாக குறிப்பிடப்படுகின்றது. 900 விடுதி அறைகள் காணப்படுவதோடு அவை பெரும்பாலும், கரையோரத்தை அண்டிய பிரதேசங்களையே மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன. டெங்ஜெரின் கடற்கரை விடுதி (Tangerine Beach Hotel ), அவானி களுத்துறை உல்லாச விடுதி (Avani Kalutara Resort), அனந்தரா (Anantara Kalutara Resort), துர்யா (Turyaa Kalutara) மற்றும் சிட்ரஸ் (Citrus Waskaduwa) போன்றவையே மேல் குறிப்பிடப்பட்ட பிரதான ஐந்து நட்சத்திர விடுதிகளாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் நோக்கும் போது, நாளொன்றுக்கு 80,000 மக்கள் தொகையினர் நகர மைய (CBD) பகுதிக்குள் ஈர்க்கப்படுகின்றமை குறிப்பிடப்படுகின்றது.

களுத்துறை பிரதேசத்தில் உள்ள மக்கள், புராதன காலம் முதல், பிரதானமாக விவசாயம் மற்றும் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தமை புலப்படுத்தப்படுவதோடு, 2018 ஆம் ஆண்டின் வள அறிக்கை தகவல்களை நோக்கும் போது; 70% மான ஆன வணிகமானது, சேவை துறையினால் பூர்த்தி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி, பிரதேச செயலாளர் பிரிவில், தனியார் துறையின் பங்களிப்பானது, அதிகபட்சமாக, 39% மான ஆக காணப்பட்டுள்ளதோடு, அபிவிருத்தி பிரதேசத்திற்குள் மீன் பிடி துறையானது, குறைந்தபட்ச எண்ணிக்கையான 7% மான மட்டுமே பதிவாகியுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் , நாளாந்த மக்காத – திண்ம கழிவானது (Non – Degradable) 26 மெட்ரிக் டொன் என்பதோடு, மக்ககூடிய – திண்ம கழிவானது ( Bio Degradable) 4 மெட்ரிக் டொன் எனவும் தகவல்கள் காட்டி நிற்கின்றன. திண்ம கழிவு சேர்த்தல் மற்றும் அகற்றுதல் செயற்பாடானது, களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை மூலம் ஒரு குறித்த திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் களுத்துறை பிரதேச செயலக பிரிவு வளாகத்திற்குள் இதுவரை, மலசல கழிவு அகற்றுவதற்கான ஒரு வழிமுறை இல்லை என்பதோடு, இதன் காரணமாக பல்வேறான சூழல் ரீதியான மற்றும் சுகாதார ரீதியான பல

பிரச்சினைகளிக்கு மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர். இதன் காரணமாக, நகர சபை வளாகத்திற்குள், மலசல கழிவு அகற்றுவதற்கான ஒரு சிறந்த வழி முறையின் தேவை அறியப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டின் வள அறிக்கையின் படி, களுத்துறை பிரதேசத்திற்குள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் மூலமாக, குழாய் நீர் பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதோடு, களு கங்கையே இதன் பிரதான நீர் மூலமாகவும் விளங்குகின்றது. அந்த வகையில் நகர சபை பிரதேசத்திற்குள் வாழும் மக்களில், 99% மான ஆனவர்கள் குழாய் நீர் மூலம் நீரை பெற்றுக்கொள்வதோடு ; பிரதேச சபை வளாகத்தினுள் வாழும் சில குடும்பங்கள், வேறு சில நீர் மூலங்களான, ஆழமற்ற கிணறுகள், நீரோடைகள் மற்றும் ஆற்று நீரின் நீரை பெற்றுக்கொள்கின்றனர். அந்த குடும்பங்களின் நீர் பெற்றுக்கொள்ளும் முறை பற்றிய விபரங்கள் கீழ் வரும் அட்டவணை இலக்கம் 2. 3 இன் மூலம் காட்டப்படுகின்றது.

அட்டவணை 2.3 : நீர் மூலங்கள்

| நீர் மூலங்கள் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| குழாய் நீர் | 24,274 |
| குழாய் கிணறு | 2510 |
| ஆழமற்ற கிணறு | 9992 |
| நீரோடைகள் மற்றும் ஆற்று நீர் | 49 |

மூலம் : வள அறிக்கை – ( 2018)

களுத்துறை பிரதேச செயலக பிரிவிற்குள் 34 அரச பாடசாலைகள் காணப்படுகின்றன. அத்தோடு, 2017 ஆம் ஆண்டின் தகவலின் படி 37,310 மாணவர்கள் கல்வி பயில்வதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அந்த வகையில் களுத்துறை பிரதேசத்தில் காணப்படும் பிரதான பாடசாலைகளாக; களுத்துறை மஹா வித்தியாலயம், களுத்துறை மகளிர் பாடசாலை, திஸ்ஸ மத்திய பாடசாலை, கானோதய மஹா வித்தியாலயம் மற்றும் களுத்துறை இஸ்லாம் கல்லூரி என்பவற்றை குறிப்பிடலாம். மேல் குறிப்பிடப்பட்ட அரச பாடசாலைகளுக்கு மேலதிகமாக, நூர் தனியார் பாடசாலை, விதுர கல்லூரி மற்றும் பேராயர் நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற சிரிகுருச வித்தியாலயம், ஹோலி பாமிலி கொன்வென்ட் போன்ற தனியார் கல்லூரிகளும் காணப்படுகின்றன. மேலும், பேருந்துடுனரட்ட என்னும் பிரதேசத்தில் தேசிய கவி கல்லூரி, திறந்த பல்கலை கழகத்தின் கிளை போன்ற சில உயர் கல்வி கல்லூரிகளும் இந்த பிரதேசத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவற்றிற்கு மேலதிகமாக, பாதுகாப்பு கல்வி நிறுவனம், காவலர் பயிற்சி கல்லூரி, STF பயற்சி மையம், கடற்படை பயிற்சி முகாம், விமான படை பயிற்சி முகாம், தொழில் பயிற்சி நிறுவனங்கள், தொழிநுட்ப கல்லூரிகள், தாதியர் பயிற்சி பாடசாலைகள் மற்றும் கடற் சூழலியல் பல்கலை கழகம் போன்ற இன்னோரன்ன தேசிய நிலை பயிற்சி நிறுவனங்கள் பல இப் பிரதேசத்தில் காணப்படுகின்றமை முக்கியமான ஒரு அம்சமாக விளங்குகின்றது.

நாகோட ஆதார வைத்தியசாலையானது, 1,865 பணியாளர்களையும், 258 வைத்தியர்களையும் கொண்ட ஒரு பிரதான மருத்துவ மனையாக விளங்குகின்றது. அதே நேரம் இப் பிரதேசத்தின் வெளி நோயாளர்கள் பிரிவில் நாளொன்றுக்கு 1,900 நோயாளிகள் வருகை தருகின்றதோடு, கிழமைக்கு 6,979 வெளி நோயாளர்கள் மருத்துவ சேவை பெற வருகை தருகின்றனர். மேலும் 859 படுக்கைகள் இந்த வைத்தியசாலையில் காணப்படுவதோடு, அதற்கு மேலதிகமாக, 02 தனியார் வைத்திய சாலைகள் காணப்படுவதோடு, 01 செவிலியர் அலுவலகமும், 08 ஆரம்ப சுகாதார நலன் பேணும் அலகுகளும் இப் பிரதேசத்தில் கானப்படுகின்றதாக தகவல்கள் எடுத்தியம்புகின்றன.

மேல் குறிப்பிடப்பட்ட தகவல்களுக்கு மேலதிகமாக, முக்கியமான சில தகவல்கள் உரு இலக்கம் – 2.1 இல் காட்டப்படுகின்றது.

## நிலப்பயன்பாடு




## பாலின அடிப்படையிலான மக்கள் தொகை




## மத அமைப்பு

பௌத்த மதம் **85%**

இஸ்லாம் மதம் **8%**

ரோமன் கத்தோலிக்கம் **6%**

இந்து மதம் **1%**

## கல்வி கலவை

ஆரம்ப நிலை **18%**

இரண்டாம் நிலை **40%**

சாதாரண தரம் **20%**

உயர் தரம் **17%**

பட்டம் மற்றும் உயர் கல்வி **3%**

கல்வி தகைமை அற்றோர் **2%**

## சராசரி மாத மழை வீழ்ச்சி




## மக்களின் பொருளாதார பங்களிப்பு




## மாதாந்த சராசரி மழை வீழ்ச்சி



## 2.3.திட்டமிடல் பிரதேச எல்லை வரையறை

களுத்துறை நகர அபிவிருத்தி திட்டத்தின், திட்டமிடல் பிரதேச எல்லையை வரையறை செய்யும் போது கீழ்வரும் மூன்று பிரதான விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன.

### 2.3.1.செயற்பாட்டு பிராந்தியம் (Functional Region)

களுத்துறை நகரமானது, வர்த்தக மையமாகவும் மற்றும் சேவை வழங்கும் பிரதான பகுதியாகவும் காணப்படுகின்றது. இந் நகரானது, மதம் சார் நடவடிக்கைகள், நிர்வாக சேவைகள், சுகாதாரம், தேசிய மட்ட அளவில் செயல்பட்டு வரும் கல்வி சார் நிறுவனங்கள் போன்ற பல்வேறு வித அடிப்படையிலான சேவைகள் என்பவற்றை மையப்படுத்தி பிரதான வீதி வலையமைப்புகளோடு தொடர்புபட்ட விதமாக பேருந்து நிலையப் பகுதியைச் சூழ்ந்து விரிவடைந்துள்ளது.

சுற்றுலா பயணிகளுக்கான வசதிகள் ( விடுதி, உணவகம்) போன்றவை, கடற்கரை பகுதிகளை அண்டி காணப்படுகின்றது. மேலும் அநேகமான சுற்றுலா தளங்களும் இப் பகுதியை சுற்றி அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அபிவிருத்தி அழுத்த பகுப்பாய்வு (Development pressure analysis) மற்றும் சுற்று சூழல் உணர்திறன் பகுப்பாய்வு(Sensitivity index) ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்து பார்க்குமிடத்து, அபிவிருத்தி போக்கானது, பிரதான வீதிகளை நோக்கி நகர்வதை வெளிப்படையாக காட்டி நிற்கின்றது. அந்த வகையில் , இவ்வாறான சூழல் உணர்திறன் மிக்க பகுதிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் மற்றும் தற்போது பிரதேசத்தில் காணப்படுகின்ற செயற்பாடுகளை மையமாகக் கொண்டும் களுத்துறை பிரதேச செயலகப் பிரிவின் முழு பகுதியையும் உள்ளடக்கிய வகையில் அபிவிருத்தித் திட்டத்தின் எல்லையானது நிர்ணயிக்கபட்டிருக்கின்றது.

### 2.3.2.புவியியல் பிராந்தியம் (Geographic Region)

இலங்கையின் விசாலமான களு கங்கையை அண்மித்து அமைந்து காணப்படும் களுத்துறை நகரமானது ஒரு திசையில் கடற் பகுதியை எல்லையாகக் கொண்டுள்ளது. அதே சமயம் களுத்துறை பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் களு கங்கையின் கிளைகள் அனைத்து விதமான பரந்து காணப்படுகின்றன. இவ்வாறாக, பிரதேசம் முழுவதுமாக பரவிக் காணப்படுகின்ற சதுப்பு நிலம், நீரோடைகள், சுற்றுச் சூழல் உணர்திறன் மிக்க வலயங்கள் போன்ற அனைத்து விதமான புவியியல் காரணிகளையும் கருத்தில்கொண்டு அனைத்து விதமான களுத்துறை பிரதேச செயலக எல்லைகளையும் உள்ளடக்கியதாக அபிவிருத்தித் திட்டமிடல் பகுதியின் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன.

### 2.3.3.நிர்வாக எல்லைகள் (Administrative Region)

களுத்துறை பிரதேச செயலகப் பகுதியானது இரண்டு நிர்வாக வலயங்களை உள்ளடக்கி காணப்படுகின்றது. அவை பின்வருமாறு;

- களுத்துறை நகர சபை பகுதி.
- களுத்துறை பிரதேச சபை பகுதி.

இந்த இரு பகுதிகளும் "நகர்ப்புற அபிவிருத்திப் பகுதிகள்" என்று நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டிருப்பதன் காரணமாக, இந்த இரண்டு வலயங்களையும் உள்ளடக்கிய வகையில் களுத்துறை அபிவிருத்தித் திட்ட எல்லை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது.

உரு 2.1 : களுத்துறை நகரின் வரலாற்று சிறப்புமிக்க புகைப்படங்கள்



மூலம் : lankapura. com

உரு 2.2 : களுத்துறை நகரின் வரலாற்று சிறப்புத் தன்மைமிக்க புகைப்படங்கள்



மூலம் : கூகிள் தேடுதல் (Google search)

# அத்தியாயம் மூன்று



# நகர அபிவிருத்தி திட்டத்திற்கான அவசியம்

களுத்துறை பிரதேச செயலகப் பிரிவிற்கான நகர அபிவிருத்தி திட்ட தயாரிப்புச் செயற்பாட்டின் போது, ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை தகவல்கள், விசேடமாக 2017 ஆம் ஆண்டு 12 ம் மாதம் 04 ம் திகதி அன்று நடைபெற்ற பங்குதாரர்களுடனான கூட்டத்தின் மூலமும் பல்வேறான தகவல்கள் சேகரிக்கப்பட்டதோடு, அத்தகவல்கள் பல்வேறான பகுப்பாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு, அவ் முடிவுகளின் முன்னுரிமையின் படி, இப் பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகள் மற்றும் வளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும், அந்த பிரச்சினைகள் மற்றும் வளங்களுக்கு ஊடாக 05 பிரதான கூறுகளின் மூலம், அபிவிருத்தி திட்ட தயாரிப்பிற்கான அவசியமானது அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, அது பின்வருமாறு முன்னிலை படுத்தப்பட்டது.

## 3.1.பிரச்சினை O1

### மக்கள் தொகை அதிகமான பகுதிகள் மற்றும் சுற்று வளாகத்தில் காணப்படும், ஒழுங்கற்ற பயன்பாடுகள்.

களுத்துறை நகரமானது, பிரதான ஆற்று படுக்கையுடன் இணைக்கப்பட்டிருப்பதோடு, பல்வேறான ஈர்க்கக் கூடிய அழகியல் காட்சிகளை கொண்டு, மாற்றுப்பாதையில் மையமாகவும், சுற்றுலா துறையுடன் நெருங்கிய தொடர்புடைய பல்வேறான சுற்றுலா விடுதிகளை தன்னகத்தே கொண்டு, உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகளுக்கும், யாத்திரையாளர்களுக்கும் உகந்த ஒரு நகரமாக காணப்படுகின்றது. ஆயினும், பயணிகளை கவர்ந்திழுக்க வேண்டிய நில பயன்பாடுகளானது, ஒழுங்கற்ற முறையிலும், வருகைதரும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யாத வகையிலும் காணப்படுவதோடு, களுத்துறை நகரத்திற்கு எந்த வகையிலும் வருமானத்தை ஈட்டித்தருவதில்லை என்பது வருத்தத்திற்குரிய உண்மையாகும். அவையாவன; களுத்துறை போதி மற்றும் மாற்று பாதை அமைந்த சுற்று வளாகம் (பேருந்து தரிப்பிடம் மற்றும் களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதி), கலிடோ கடற்கரையை நோக்கிய பாதை மற்றும் கலிடோ கடற்கரைக்கு சமமாக டென்ஜரின் ஹோட்டல் வரையில் அமைந்து காணப்படும் கடற்கரையை அண்டிய வீதி போன்றவையாகும்.

களுத்துறை போதி வளாகம் மற்றும் போக்குவரத்து மாற்று பாதை மையம் ஆகிய சுற்று வளாகம் மற்றும் பிரதான வீதியிலிருந்து 20 மீட்டர் வலயத்திற்கு உட்பட்ட நில பயன்பாடுகளை கருத்திற் கொள்ளுமிடத்து, 20% மான ஆன நிலங்கள் பொது நிறுவனங்களுக்காகவும், 26% மான ஆனவை வர்த்தக பயன்பாடுகளுக்கும், 15% மான ஆனவை மதம் சார்ந்த செயற்பாடுகளுக்காகவும், 06% மான மலர் கடைகளுக்காகவும், 19% மான ஆன பகுதியானது,போக்குவரத்து துறை சார்ந்த தேவைகளுக்காகவும் மிகுதி 10% மான ஆன பகுதியானது தற்போது பல்வேறான கட்டுமான பணிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் அதிகபட்சமான நில பகுதியானது அரச சார் நிறுவங்களின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுவதோடு, இந்நிலப்பயன்பாடுகள் குறித்த பிரதேசத்திற்கு பொருத்தமற்ற பயன்பாடுகளாவதோடு, கலிடோ கடற்கரைக்கு அணுகும் கடற்கரை வீதி மற்றும்,கலிடோ கடற்கரைக்கு சமமாக, டென்ஜரின் ஹோட்டல் வரை நீளும் பாதைக்கு மத்திய கோட்டிலிருந்து 10 மீட்டரிற்கு உட்பட்ட வலயத்தை நோக்கும் போது, மொத்த நில பகுதியில் 78% மானமற்றும் 60% மானஆன நிலப்பகுதியானது குடியிருப்பு பாவணைக்காக பயன்படுத்தப்படுவது அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தோடு, அப்பயன்பாடானது இப் பகுதிக்கு பொருத்தமற்ற பயன்பாடாகவும் அமைந்து காணப்படுகின்றமையை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இவ்வாறாக பொருத்தமற்ற நில பயன்பாடுகள் காணப்படுவதனால், சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்வதற்கு, தேவையான வசதிகளை வழங்குவதற்கு மற்றும் வருமானத்தை அதிகரிப்பதற்கும் பல்வேறான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் மக்களை பிரதேசத்திற்கு கவர்ந்திழுப்பதற்கு இது பாரிய பிரச்சினையாக இருப்பதோடு, அபிவிருத்தி வேகத்தையம் கணிசமாக

குறைக்கின்றமை பாரிய பிரச்சினையாகும். எனவே; இந்த பிரச்சினையை இனங்கண்டு தீர்வை பெற்று கொள்வதற்கு ஒரு திட்டத்திற்கான அவசியம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 3.2.பிரச்சினை 02

களுத்துறை பகுதியில் நிலவும் சுற்று சூழல் சீர்கேடுகள்.

சுற்று சூழல் சீர்கேடுகளை இல்லாதொழிப்பதற்கு, அபிவிருத்தி திட்ட தயாரிப்புச் செயற்பாட்டின் தேவைப்பாடு உணரப்பட்டது. அந்த வகையில் பிரதானமாக கீழ்வரும் சுற்று சூழலுக்கு தீங்கிழைக்கும் செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- வறண்ட காலங்களில் களு கங்கை நீரில் உப்பு கலக்கப்படுகின்றமை. ( தை மாதம், மாசி மாதம், பங்குனி மாதம், ஆவணி மாதம் மற்றும் புரட்டாதி மாதம்) மொத்த மக்கள் தொகையில் 56% மான ஆன மக்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். அந்த வகையில் நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் தரவுகளை அடிப்படையாக கொண்டு, இது ஒரு பாரிய பிரச்சினையாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

- பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் மிகவும் கவர்ச்சிகரமான கண் கவர் காலிடோ கடற்கரை பகுதியானது, படிப்படியான மோசமடைந்து வருகின்றமை.
- வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு அபாயங்களினால் பாதிக்கப்படும் பகுதிகளை இனங்காணல்.

களு கங்கை நீரில் உப்பு கலக்கப்படும் பிரச்சினையானது, களுத்துறை பிரதேச செயலக பகுதியில் 56% மான ஆன மக்களுக்கும், நகர சபை பிரதேசத்தில் 99% மான ஆன மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஒரு பாரிய பிரச்சினையாகும். களு கங்கையானது, இப் பிரதேசத்தின் பிரதான நீர் மூலமாக காணப்படுகின்றது. இந்த காலக்கட்டத்தில், நீரில் காணப்படும் மின்சார கடத்து திறனானது ( Electrical conductivity) 750 MS/cm அல்லது அதற்கும் மேலதிகமாகும். 750 MS/cm அளவிற்கு மேற்படுமிடத்து அது குடிப்பதற்கு உகந்த நீரல்ல என நீர் வளங்கள் மற்றும் வடிகால் அமைப்பு சபையினால் தீர்மானிக்கப்படும். இந்த பாரிய பிரச்சினையே களுத்துறை பிரதேச செயலக பிரிவிற்கான அபிவிருத்தி திட்ட தயாரிப்பிற்கான பிரதான காரணமாகும்.

பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் மிகவும் கவர்ச்சிகரமான கண்ணுக்கினிய காலிடோ கடற்கரை பகுதியானது, படிப்படியான மோசமடைந்து வருகின்றமை மற்றும் களு கங்கையில் மண் அகழ்தல் போன்ற செயற்பாடுகள் பிரதேசத்தின் உயிர் பல்வகைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றதோடு, களு கங்கையானது கடலோடு சங்கமிக்கும் பகுதியானது சம நிலையில் காணப்படுவதனால், குடி நீர் பிரச்சினையையும் மேலும் வலுப்படுத்துகின்ற என்றே கூறலாம். சுனாமி ஏற்பட்ட போது, கலிடோ கடற்கரை அமைந்திருந்தமையினாலேயே களுத்துறை நகர் பாதுகாக்கப்பட்டதோடு, தற்போது அதன் மோசமான நிலையானது சுனாமி போன்ற இயற்கை அனர்த்த பாதிப்புக்கு இப் பிரதேசம் உட்படுத்தப்பட ஏதுவாக அமையலாம். இந்த பிரச்சினையை இழிவழவாக்குவதற்கு தேவையான விதி மற்றும் ஒழுங்கு முறைகளை அமுல் படுத்துவதற்கு, அபிவிருத்தி திட்ட தயாரிப்புச் செயற்பாட்டின் தேவை உணரப்பட்டது.

அநேகமாக ஆண்டு தோறும் ஏற்படும் வெள்ளப்பெருக்கானது, இப் பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றது. நீர்ப்பாசன திணைக்களத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு, வருடாந்தம் சிறிய அளவிலான வெள்ளப்பெருக்கிற்கும், ஐந்து வருடங்களிற்கு ஒரு முறை பாரிய வெள்ளப்பெருக்கிற்கும் இப் பிரதேசம் முகங்கொடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆற்று நீர் மட்டமானது 2.5 அடிக்கு மேல் உயருமிடத்து, சிறிய அளவிலான வெள்ளப்பெருக்கு ஏற்படும் எனவும், 5 அடிக்கு மேல் உயருமிடத்து, பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்படும் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்போது காணப்படும் தகவல்களை அடிப்படையாக கொண்டு நோக்கும் போது, களுத்துறை நகரத்தில், பாரிய வெள்ளப்பெருக்கு 2003 ஆம் ஆண்டு (6.2 அடி) , 2008 (7.1 அடி), மற்றும் 2018 (6.8 அடி) அளவில் ஏற்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தகவலைகளை அடிப்படையாக

கொண்டு நோக்கும் போது, 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால், களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட, 43 கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த 11,854 கும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை புலப்படுகின்றது.

கித்துளாவ நிலச்சரிவு அபாயத்திற்கும் வாய்ப்புகள் உள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய தகவல்கள் புலப்படுத்துகின்றன. மேற்கண்ட சிக்கல்கள் அனைத்தும் தற்போதைய மற்றும் அன்றாட வாழ்க்கையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன இதற்கு சரியான தீர்வு இல்லாத காரணத்தால், முழு களுத்துறை நகரமும் நெருக்கடி நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பிரச்சினைகளை நிவர்த்தி செய்து ஒரு ஒரு வசதியான நலன்புரி சூழலை மக்களுக்கு வழங்கும் பொருட்டு களுத்துறை பிரதேச செயலகத்தின் இப்பகுதிக்கு அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்க வேண்டிய அவசியம் அடையாளம் காணப்பட்டது.

உரு 3.1 களிடோ கடற்கரையின் மணல் திட்டுக்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்




மூலம் : கூகுல் புகைப்படம்

## 3.3.பிரச்சினை 03

### நகரத்திற்குள் அமைந்திருக்கும் சுற்றுலா தளங்களுக்குள் பிரவேசிப்பதற்கான இணைப்புகள் போதுமாக இல்லாமை.

களுத்துறை பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலா தலங்களான, களுத்துறை போதி மர வளாகம், காலிடோ கடற்கரை பகுதி, தியகம பெலுனுகல மற்றும் ரிச்மன்ட் கோட்டைக் கட்டிட வளாகம் போன்ற பகுதிகளை சுற்றுலா போக்குவரத்து பாதையின் மூலம் ஒன்றிணைப்பதற்கான சாதகமான தன்மைகள் இப் பிரதேசத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆயினும், சுற்றுலா பயணிகளுக்கான எல்லா வசதிகளையும் ஒருமித்து அமைந்த எந்த ஒரு பகுதியோ, போதுமான அளவு போக்குவரத்து தகவல்கள் மற்றும் வரைபடங்கள் அற்று காணப்படுத்தலானது, சுற்றுலா துறையை விருத்தி செய்வதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

தற்காலத்திலும், களுத்துறை போதி மர வளாகத்தை பார்வையிட வருகை தருபவர்களை ஒப்பிட்டு நோக்கும் போது மற்றைய சுற்றுலா தலங்களுக்கு வருகை தருவது குறைவாகவே காணப்படுகின்றது. இந்த பிரச்சினையை எதிர் நோக்குவதற்கு சுற்றுலா திட்டத்திற்கு ஊடாக செயற்பட வேண்டியதோடு, அபிவிருத்தி திட்டத்திற்கான தேவையும் அடையாளம் காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 3.4.பிரச்சினை 04

### களுத்துறையை சூழ அமைந்து காணப்படும் புறநகர் பிரதேச பகுதிகளில் துரித அபிவிருத்தியை மேற்கொள்வதன் காரணமாக களுத்துறை நகர்புறப பகுதியின் தொடக்க மக்கள் தொகை ஆனது (Threshold Population) குறைந்து செல்லும் நிலைமை காணப்படல்

களுத்துறை நகரின் புறநகர் பகுதியில் மேற்கொள்ளப்படும் துரித அபிவிருத்தி செயற்பாடுகளின் காரணமாக, களுத்துறை நகர்புறப பகுதியின் தொடக்க மக்கள் தொகை ஆனது (Threshold Population) குறைந்து செல்லும் போக்கை அவதானிக்கலாம். உதாரணமாக பின்வரும் புறநகர் அபிவிருத்திகளை குறிப்பிடலாம்; ஹொரண தொழிற்துறைத் அபிவிருத்தி, மத்துகமை நகர்ப்புறப் பகுதியில் இடம் பெற்று வரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் தெற்கு அதிவேக கடுகதிப் பாதை அபிவிருத்தி போன்ற அபிவிருத்திகலானவை, வெளி பிராந்தியங்களில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான சாதக தன்மைகளை ஏற்படுத்துவதோடு, நகரிற்குள் உள்ள மக்கள் தொகை அளவை குறைத்து செல்கின்றது. மக்களை கவர்ந்திழுக்கக் கூடிய களுத்துறை நகரிற்கு இது பாரிய ஒரு அச்சுறுத்தலாக அமைவதோடு, அதை குறைப்பதற்கு தேவையான விதி, ஒழுங்குமுறைகளை அமைப்பதற்கு, களுத்துறை பிரதேச செயலக பிரிவிற்கான ஒரு அபிவிருத்தி திட்டம் தேவை என உணரப்பட்டது.




வரைபடம் 3.1 : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் துரித அபிவிருத்தி( 2018)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை 2018




வரைபடம் 3.2 : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் சுற்றுச்சூழல் உணர் திறன் தன்மை (2018)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை 2018

## 3.5.பிரச்சினை 05

அபிவிருத்தியின் அடர்த்தியானது, தற்போதைய திட்டமிடல் எல்லைக்கு வெளியில், சுற்று சூழல் உணர்திறன் மிக்க பகுதியை நோக்கி பரவலடைந்து செல்கின்றமை.

தற்போது காணப்படுகின்ற (2005 – 2020) காலப்பகுதிக்கு உட்பட்ட அபிவிருத்தி திட்டமானது, நகர சபை வளாகத்தோடு நிறைவு பெறுகின்றது. 3.1 வரைபடத்தின் மூலம் காட்டப்படுகின்றவாறு, தற்போது காணப்படுகின்ற அபிவிருத்தி அடர்த்தியை அடையாளம் காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் மூலம் அபிவிருத்தி அடர்த்தியானது பிரதேச சபை வளாகத்தின் பிரதான வீதிகளை நோக்கி நகர்வதை அவதானிக்கலாம். இல. 3.2, வரைபடத்தில் காட்டப்படுவது போன்று, சுற்று சூழல் உணர்திறன் பகுப்பாய்வின் மூலம், அபிவிருத்தி போக்கானது சுற்று சூழல் உணர்திறன் மிக்க பிரதேசத்தை நோக்கி பயணிப்பதை அவதானிக்கலாம். அதே போல, 2018 ஆம் ஆண்டிற்கான நில பயன்பாட்டு திட்டத்தை நோக்கும் போது, திட்டமிடல் பிரதேசத்தில், 54% மான ஆன நிலப்பகுதியானது, தென்னை, வயல் நிலங்கள், இறப்பர், ஈர நிலங்கள் மற்றும் புதர் காடுகள் போன்ற பயன்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை, பின்னிணைப்பு – 11 இல் காட்டப்படுகின்றது.

2030 ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை முன்மொழிவின் படி, பின்வரும் கிராம சேவகர் பிரிவுகள் அதிக மக்கள் தொகை அபிவிருத்தி விகிதத்தை கொண்டிருப்பது புலப்படுகின்றது. அவையாவன; தேக்கவத்தை ( 3.3% மான), கித்துளாவ (6.3% மான) மேற்கு புலேர்டன் (Pulerton) (7.7% மான) மற்றும் டெல்துவ (6.5% மான) என்பதோடு, குறிப்பாக தேக்கவத்தை மற்றும் கித்துளாவ ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கும், கித்துளாவ நிலச்சரிவு அபாயத்திற்கும் வாய்ப்புகள் உள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய தகவல்கள் புலப்படுத்துகின்றன. மேலும், நில பெறுமதி குறைந்து செல்வதன் காரணமாக மக்கள் அதிகளவில், பிரதேசத்திற்கு சற்று தொலைவான நிலங்களை ஆக்கிரமிக்கும் போக்கு ஏற்பட்டு வருகின்றது. கடற்கரையை அண்டிய பகுதிகள் மற்றும் காலி பிரதான வீதிக்கு இரு மருங்கிலும், அதிக நில பெறுமதியும், சற்று தொலைவில் குறைவான நில பெறுமதியும் பதிவாகியுள்ளது. இப் பிரதேசத்தின் நில பெறுமதியானது, பின்னிணைப்பு – 12 இல் காட்டப்படுகின்றது.

அபிவிருத்தி செயற்பாடுகள் தற்போதைய திட்டமிடல் எல்லையை கடந்து, சுற்று சூழல் உணர்திறன் மிக்க பகுதிகளை நோக்கி நகர்வத்தினாலும், பிரதேசத்தில் காணப்படும் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு அபாயங்களினாலும், களுத்துறை நகர சபை மற்றும் பிரதேச சபை வளாகங்கள் இரண்டையும் உள்ளடக்கிய வகையில், முழு களுத்துறை பிரதேச செயலக பிரிவையும் உள்ளடக்கிய வகையிலான அபிவிருத்தி திட்டத்தை தயார் செய்வதன் தேவை உணரப்பட்டுள்ளது.



# இரண்டாம் பிரிவு

# அமைச்சரின் ஒப்புதல்

**களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய களுத்துறை நகர அபிவிருத்தி பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டத்திற்கான அனுமதி**

2019.06.28 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினால் பரிந்துரைக்கப்பட்டதற்கு அமைய, 1982 ஆம் ஆண்டின் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (திருத்தப்பட்ட) சட்ட இல:4, கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய களுத்துறை நகர அபிவிருத்தி பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டத்திற்கு மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான் இத்தால் அங்கீகாரம் வழங்குகின்றேன்.

---------------------------------------------
**பாட்டலி சம்பிக்க ரணவக்க**
**மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர்**

**மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு**
**17 மற்றும்18 ஆம் மாடிகள்,**
**"சுஹுரூபாய"**
**ஸ்ரீ சுபத்திபுர வீதி, பத்தரமுல்லை**

**திகதி : 2019.06.28**

# வர்த்தமானி அறிவித்தல்

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2129/94 - 2019 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2019.06.28
2129/94 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை, கடுவலை மாநகர சபை, மஹரகமை நகர சபை மற்றும் கொட்டிக்காவத்தை - முல்லேரியா பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய தலைநகர அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதிக்கான அறிவித்தல்**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டம் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின் உப பிரிவு 8F இன் பிரகாரம், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இந்தச் சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார் செய்யப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை, கடுவலை மாநகர சபை, மஹரகமை நகர சபை மற்றும் கொட்டிக்காவத்தை - முல்லேரியா பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய தலைநகர அபிவிருத்தித் திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதி வழங்குகிறேன் என்பதை, சட்டத்தின் உப பிரிவு 8G இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

**களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய களுத்துறை நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதிக்கான அறிவித்தல்**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டம் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின் உப பிரிவு 8F இன் பிரகாரம், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இந்தச் சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார் செய்யப்பட்ட களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய களுத்துறை நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதி வழங்குகிறேன் என்பதை, சட்டத்தின் உப பிரிவு 8G இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

# அத்தியாயம் நான்கு



# அபிவிருத்தித் திட்டத்திற்கான வரைச்சட்டம்

## 4.1.அபிவிருத்தித் திட்டத்திற்கான தொலைநோக்குப் பார்வை

“The prime caesura of South west coast”
An enshrined autarchic city rising by the estuary of kaluganga as a midway haven for all journeyers

"தென்மேற்கு கடற்கரையின் பிரதம இடை நிறுத்தம் "

களு கங்கையின் கழிமுகப் பகுதியிலே தோற்றம் பெற்று காலப்போக்கில் வெகுவாக முன்னேற்றம் அடைந்து காணப்படும் இந்த தனித்துவமான புனிதப்படுத்தப்பட்ட வல்லாட்சி நகரமானது, அனைத்து தரப்புப் பயணிகளுக்கும் மற்றும் மக்களுக்கும் உகந்த வகையில் தென்மேற்கு மத்திய பகுதியில் அமையப்பெற்ற ஒரு புகலிடமாக திகழ்கின்றது.

## 4.2.தொலைநோக்கு பார்வை தொடர்பான அறிக்கை

இந்த களுத்துறை நகரமானது ஒரு தனித்துவமான நிலப்பரப்பை கொண்டு விளங்குகின்றது. இந் நகரின் அமைவிடமானது, பரந்து விரிந்து காணப்படும் இந்தியப் பெருங்கடலுக்கும் மற்றும் சிவனொளி பாத மலை சிகரத்தின் நீர் ஊற்றுடன் ஆரம்பமாகி பாய்ந்து வரும் களு கங்கையின் பெருநீர்ப்பரப்பிற்கும் இடையே காணப்படுவதுடன் அதற்கே உரித்தான சில தனித்துவமான அடையாளங்களுடன் அமைந்து காணப்படுகின்றது. அத்தோடு, களுத்துறை நகரானது வரலாற்று சிறப்புத் தன்மைமிக்க பிரம்மாண்டமான சைத்தியம் மற்றும் புனித போதி மர வளாகம் ஆகியவற்றை பிரதான நில அடையாளங்களாகக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு புனித நகரமாக திகழ்கின்றது. எனவே தான், இந்த ஊரின் புனிதத்தன்மையானது “புனிதப்படுத்தப்பட்ட (enshrined)” என்ற வசனத்தின் மூலம் சித்தரிக்கப்படுகிறது.

களுத்துறை நகரைச் சார்ந்து பல்வேறுபட்ட பௌதிக, சமூக, பொருளாதார மூல வளங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இந் நகரத்தின் பொருளாதாரத்தில் பின்புலத்தில் பிரதானமாக சேவைத் துறை காணப்படுகின்றது, இத் துறையானது, இந் நகருக்கு அன்றாடம் தேவைகளை நிறைவேற்றும் முகமாக வருகை தருகின்ற 81,700 மேற்பட்ட நபர்களினால் நிலைத்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பெருமளவிலான மக்கள் தொகையினை இந் நகரம் ஈர்ப்பதற்கான முக்கிய காரணமாக இந் நகரில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள நிர்வாக, பொருளாதார, கல்வி, சுற்றுலா, சமய மற்றும் போக்குவரத்து வசதிகள் சார்ந்த நடவடிக்கைகளே காணப்படுகின்றன. இவ்வாறான முக்கிய சேவைகள் இந் நகரத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் தன்னிறைவு அகியவற்றிற்கான ஒரு காரணமாக மாறிவிட்டது என்பதையே “வல்லாட்சி நகரம் (Autarchic city)” என்ற பதம் சித்தரிக்கின்றது

அத்தோடு, கொழும்பு– வெல்லவாய (A2) வரையிலான வீதியைப் பிரதானப்படுத்தி அமைந்து காணப்படும் களுத்துறை நகரமானது, இலங்கையின் தலைநகரமான கொழும்பிலிருந்து சுமார் 43 கிலோ மீட்டர் என்றளவிலான தொலைவில் அமைந்து காணப்படுகின்றது. மேலும் மருதானை– மாத்தறை வரையிலான புகையிரத பாதையின் முக்கிய நிலையமாகவும் அமையப்பெற்றதாகவும் உள்ளது. இந் நகரில் அமைந்து காணப்படும் புகையிரத நிலையம் மற்றும் பேருந்து நிலையம் என்பன அருகருகே அமைந்து இருப்பதன் காரணத்தால், அது பன் மாதிரி போக்குவரத்து மையமாக செயல்படும் (TOD மையம்) பாங்கினை கொண்டமைந்துள்ளது மற்றும் இதன் காரணமாக இலங்கைப் போக்குவரத்து அமைப்பில் ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெற்றுள்ளது. இதையே “மத்திய பகுதி புகலிடம் (Midway haven)" என்ற பதம் குறித்து நிற்கின்றது.

களு கங்கை கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும் நதி சார்ந்த நகரமாக இது காணப்படுவதன் காரணமாக, இது அதிக எண்ணிக்கையிலான மக்களை ஈர்க்கும் வகையிலான ஒரு தனித்துவமான புவியியல் மற்றும் நிலத்தோற்ற அமைப்பு அடையாளத்தை பெற்றுள்ளது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள், யாத்ரீகர்கள், பாதசாரிகள் மற்றும் குடியிருப்பாளர்கள் ஆகிய நான்கு பிரிவு மக்கள் தொகையையும் எடுத்துக்காட்டும் முகமாக "அனைத்து விதமான பயணிகள் (All Journeyers)" என்ற பதம் குறிக்கப்படுகிறது.

அதற்கு அமைவாக, இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோளானது, 2030 ஆம் ஆண்டளவில், இடர் அச்சுறுத்தலை அகற்றி, " தென்மேற்கு கடற்கரையின் பிரதம இடை நிறுத்தம் (*Prime caesura of south west coast*) " என்ற இலக்கை அடைந்து பௌதிக, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மூல வளங்களை உச்சகட்ட பயனுள்ள வகையில் பயன்படுத்தி அதன் மூலம் பொது மக்களுக்கு தேவையான வசதிகளுடன் கூடிய நகரை அனர்த்தங்களிலிருந்து விடுபட்ட சுபீட்சமிக்க அமைவிடமாக மாற்றியமைப்பதே ஆகும்.

## 4.3.அபிவிருத்தித் திட்டத்தின் இலக்குகள்

இலக்கு 01

தென் மேற்குக் கடற்கரைப் பகுதியின் எல்லைக்கு உட்பட்டதாகவும் மற்றும் களு கங்கையின் கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும்தாகவும் உள்ள களுத்துறை நகரை யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு உகந்த இடமாக உருவாக்குதல்

இலக்கு 02

களு கங்கைக்கு அருகில் நிரந்தரமான முறையிலும் மற்றும் தற்காலிகமான முறையிலும் வீடுகளை கொண்டுள்ளவர்களுக்கு சௌகரியமான மற்றும் வசதியான நகர வாழ்வியலை ஏற்படுத்தல்.

இலக்கு 03

களு கங்கையின் கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும் களுத்துறை நகருக்கு நாளாந்தம் வரும் பயணிகளுக்கு உகந்த சேவையை வழங்கும் முகமாக சேவை நிலையத்தை (Service center) உருவாக்குதல்



## 4.4.அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்கள

### இலக்கு 01

தென் மேற்குக் கடற்கரைப் பகுதியின் எல்லைக்கு உட்பட்டதாகவும் மற்றும் களு கங்கையின் கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும்தாகவும் உள்ள களுத்துறை நகரை யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு உகந்த இடமாக உருவாக்குதல்

#### நோக்கங்கள்

1. 2030 ஆம் ஆண்டளவிலான காலப்பகுதியில், இப் பகுதியைச் சார்ந்து இடம் பெற்று வரும் சுற்றுலாத் துறையின் போக்கை கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம், கடற்கரை சார் சூழல் மற்றும் பசுமை சூழல் அமைப்புகள் போன்ற முக்கிய சுற்றுலா ஊக்குவிப்பு காரணிகளை அடிப்படையாக கொண்டு பன்முகபட்ட சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்தல்

2. 2030 ஆம் ஆண்டளவிலான காலப்பகுதியில், இந் நகருக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியான மற்றும் சௌகரியமான பிரயாண வசதியை வழங்கும் முகமாக, களுத்துறை போதி மர வளாகம், காலிடோ கடற்கரை மற்றும் ரிச்மண்ட் கோட்டைக் கட்டிட வளாகத்தை (Richmond castle building) ஒருங்கிணைப்பு செய்யும் வகையில் இடைத் தொடர்ப்பை வலுப்படுத்தல்.

### இலக்கு 02

களு கங்கைக்கு அருகில் நிரந்தரமான முறையிலும் மற்றும் தற்காலிகமான முறையிலும் வீடுகளை கொண்டுள்ளவர்களுக்கு சௌகரியமான மற்றும் வசதியான நகர வாழ்வியலை ஏற்படுத்தல்.

#### நோக்கங்கள்

1. 2030 ஆம் ஆண்டளவிலான காலப்பகுதியில், இந்த திட்டமிடல் பகுதியில் உள்ளடங்கும் பிரதேசங்கள் அனைத்துக்குமான 100% மான சுத்திகரிப்பு செய்யப்பட்ட சுகாதாரமான குடிநீரை வழங்குதல்.

2. 2030 ஆம் ஆண்டளவிலான காலப்பகுதியில், திட்டமிடல் பகுதியின் மேற்கு எல்லையில் உள்ள தீரிரகந்த (Dhreerakanda) மாவத்தை தொடக்கம் பயாகல (Payagala) தெற்கு வரையிலாக காணப்படும் சுமார் 13 கிலோ மீட்டர் கடற்கரையோர பகுதியை சார்ந்து காணப்படும் கடல் அரிப்பின் தாக்கத்தை முடிந்தளவு மட்டுப்படுத்தல்

3. சுற்றுச்சூழல் உணர்திறன் வாய்ந்த 1955 ஹெக்டேர் என்றளவிலான நிலப்பகுதிகளில் முறையான முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலமாக 21 கிராமசேவகர் பிரிவுகளில் காணப்படும் வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலை முடிந்தளவு கட்டுப்படுத்தி அப்பிரதேசங்களை மக்கள் வாழ்வதற்கு உகந்த பகுதிகளாக உருவாக்குதல்.

4. 2030 ஆம் ஆண்டளவிலான காலப்பகுதியில், 02 குடியிருப்பு முனையங்கள் (residential nodes), 01 சுகாதார அபிவிருத்தி முனையம் (Health promotion node) மற்றும் 06 சுற்றுப்புற சூழலில் அமைந்து காணப்படும் முனையங்கள் (neighborhood nodes) என்பனவற்றிற்கு தேவையான சேவை வசதிகள், நகரப் பணிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதன் மூலம், பல்வேறு விதமான அடர்த்தி மட்டங்களைக் கொண்ட பிரதான 04 குடியிருப்பு வலயங்களை அபிவிருத்தி செய்தல்.

### இலக்கு 03

களு கங்கையின் கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும் களுத்துறை நகருக்கு நாளாந்தம் வரும் பயணிகளுக்கு உகந்த சேவையை வழங்கும் முகமாக சேவை நிலையத்தை (Service center) உருவாக்குதல்

#### நோக்கங்கள்

1. இந் நகரின் மத்திய பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள சில முக்கிய வீதிப் பிரிவுகளில் (2.3 கிலோ மீட்டர்) பாதசாரிகள் சௌகரியமாகவும் மற்றும் பாதுகாப்புடன் நடந்து செல்வதற்கு ஏற்றவாறான நடைபாதை வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

2. 2030 ஆம் ஆண்டளவிலான காலப்பகுதியில், இந்த நகருக்குள் பொருளாதார பயன்களை வெளிக்கொணரும் நோக்கத்துடன், மக்களுக்கு அவசியப்படும் அனைத்து விதமான நிர்வாகப் பணிகளையும் ஒரே இடத்தில் நிறுவுதலை இலக்காகக்கொண்டு களுத்துறை மாவட்ட செயலகக் கட்டடத்திலிருந்து 500 மீட்டர் சுற்றளவுக்குள் 80% மான நிர்வாக சேவைகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. 2030 ஆம் ஆண்டளவிலான காலப்பகுதியில், களுத்துறை பொது வைத்தியசாலையை சூழவுள்ள சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சுகாதார சேவை வழங்கல் விகிதத்தை 80% மாக உயர்த்த இதன் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது

# அத்தியாயம் ஐந்து



# அபிவிருத்தித் திட்டத்திற்கான வரைச்சட்டம்

## 5.1.சுவோட் பகுப்பாய்வு சுருக்கம்

### இலக்கு 01

தென் மேற்குக் கடற்கரைப் பகுதியின் எல்லைக்கு உட்பட்டதாகவும் மற்றும் களு கங்கையின் கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும்தாகவும் உள்ள களுத்துறை நகரை யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு உகந்த இடமாக உருவாக்குதல்

### S

- சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரீகர்கள் ஆகியோரை ஈர்க்கும் இடங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுதல். உதாரணமாக களுத்துறை போதி மர வளாகம், ரிச்மண்ட் கோட்டை கட்டிட வளாகம் (Richmond castle), காலிடோ கடற்கரை மற்றும் இப் பகுதியில் காணப்படும் ஆடம்பர சுற்றுலா விடுதிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

- இங்கு காணப்படும் அனைத்து சுற்றுலாத் தலங்களும் ஒன்றுகொன்று மிகவும் நெருக்கமான முறையில் (சுமார் 1 – 3 கிலோ மீட்டர்க்குள்) அமைந்து காணப்படல்

- இங்கு அமையப்பெற்றிருக்கும் அனைத்து சுற்றுலாத் தலங்களும் பெரும்பாலும் பிரதான வீதி வலையமைப்புகளை அண்மித்ததாகவே காணப்படுகின்றன உதாரணமாக, களுத்துறை தொடக்கம் ஹொரண வரையிலான வீதி, களுத்துறை தொடக்கம் பண்டாரகம வரையிலான வீதி, களுத்துறை தொடக்கம் மத்துகமை வரையிலான வீதி அல்லது ஏனைய வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கான வீதிகள் (RDA Road)) போன்ற ஏதேனுமொரு வீதியோடு இணைக்கப்பட்டதாகவே உள்ளது.

- இலங்கையில் ஆற்றுப் பள்ளத்தாக்குகளை அடிப்படை மூலமாகக் கொண்டு எழிச்சியடைந்த பல முக்கிய நகரங்களை ஒப்பிட்டு அவதானிக்கும் போது, ஆற்றுப் படுகைகளிலிருந்து சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவிற்குள் நடைபெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் களுத்துறை நகரமே முதலாவதாக விளங்குகின்றது

### W

- களுத்துறை பிரதேசத்தில், பிரதான கண்கவர் இடங்களை சூழ்ந்துகாணப்படுகின்ற பொருத்தமற்ற வகையில் அமையப்பெற்ற நிலப் பயன்பாட்டு வடிவங்கள் (போதி மரத்தைச் சூழவுள்ள பிரதேசம், கால கடற்கரைக்கு இட்டுச் செல்லும் அப்று வீதியை (Abru road) சார்ந்த பிரதேசம், கடற்கரைக்கு சமாந்தரமாக நீளும் டேஞ்சரின் ஹோட்டல் வரை உள்ளபகுதி – சுமார் 2 கிலோ மீட்டர், மற்றும் கடற்கரை வீதி (கெளிடோ வீதி – 600 மீட்டர் சாலை )

- பிரதான சுற்றுலா தலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு காணப்படாமை

## O

- களுத்துறை நகரிலிருந்து 2 கிலோ மீட்டர் என்றளவிலான தொலைவில் அமைந்து காணப்படும் டெங்ஜெரின் கடற்கரை விடுதி தொடக்கம் (Tangerine Beach Hotel) காலிடோ கடற்கரை வரையிலான கடற்கரை பகுதியில் மேற்கொள்ளப்படும் கரையோர அபிவிருத்தித் திட்டங்கள்

- முன்மொழியப்பட்டுள்ள மேல் மாகாண கட்டமைப்பு திட்டத்தின் (Proposed Western Structure Plan, 2018– 2030) கீழ் இந்த திட்டமிடல் பிரதேசமானது சுற்றுலா வலயமாக இனங்காணப்பட்டிருத்தல் (அடையாளம் காணப்பட்டுள்ள சுற்றுலாப்பகுதி அளுத்கம முதல் நீர்கொழும்பு வரை உள்ளது)

- 2050 ஆம் ஆண்டிற்காக தயார் செய்யப்பட்ட தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கையின் (National Physical Planning Policy) அடிப்படையாக கொண்டு, களுத்துறை நகரமானது, பொருளாதார வழித்தட (Economic corridor) அபிவிருத்தி வலயத்தில் உள்ளடங்கும் ஒரு நகரமாக கருதப்படுகின்றது

- கொழும்பு பெருநகர பிராந்திய கட்டமைப்புத் திட்டம் – 1998 மூலம் களுத்துறை  நகரமானது, பிராந்திய மையமாக, சுற்றுலா ஈர்ப்புப் பகுதியாகவும், மேல் மாகாணத்தில் உள்ள நகரங்களின் படிநிலைவழி ஒழுங்கை கருத்திற் கொண்டு இரண்டாம் நிலை ஒழுங்காற்று நகரமாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

- பட்டிணமும் நாடும் திட்டமிடல் திணைக்களத்தினால் (Town and Country Planning Department) 1998 ஆம் ஆண்டு தை மாதம் 29 ஆம் நாள்  திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தலின் மூலம் களுத்துறை போதி மரத்தைச் சூழவுள்ள 10 ஏக்கர் நிலப்பரப்பை புனித பிரதேசமாக பிரகடனபடுத்தியிருக்கின்றமை.

## T

- இப் பிரதேசத்தில் காணப்படும் காலிடோ கடற்கரைப் பகுதி மற்றும் அவ்விடம் சார்ந்த பகுதிகளில் உள்ள மணல் திட்டுகள் பாதிப்புக்குள்ளாக்கப்படுதல்

- களுத்துறையை சூழ அமைந்து காணப்படும் புறநகர் பிரதேச பகுதிகளில் துரித அபிவிருத்தியை மேற்கொள்வதன் காரணமாக களுத்துறை நகருக்குள் மக்களை ஈர்ப்பதில் சிரமம் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படல்.

## இலக்கு 02

களு கங்கைக்கு அருகில் நிரந்தரமான முறையிலும் மற்றும் தற்காலிகமான முறையிலும் வீடுகளை கொண்டுள்ளவர்களுக்கு சௌகரியமான மற்றும் வசதியான நகர வாழ்வியலை ஏற்படுத்தல்

### S

- களுத்துறை மாவட்டத்திற்கான நிர்வாக மற்றும் சுகாதார சேவை வழங்கும் பிரதான நகரமாக இது செயற்படுதல்
- இங்கு வருடாந்தம் ஏற்படும் வெள்ளப்பெருக்கை கட்டுப்பாடுத்தும் நோக்கத்திற்காக மொத்த நிலப்பரப்பில் 55% மான தாழ்வான நிலம் பரப்பைக் கொண்டிருத்தல்.
- இந்த திட்டமிடல் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேச சபை பிரதேசத்தினுள் அதிக மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் ( 2% மான) காணப்படுதல்
- இங்கு காணப்படும் புகையிரத சேவை மற்றும் தெற்கு அதிவேக கடுகதிப் பாதைகள் போன்ற பல் தன்மை போக்குவரத்து முறையின் ஊடாக கொழும்பு வர்த்தக மையத்துடன் பலமான இடை தொடர்பை கொண்டுள்ளமை
- களுத்துறை மாவட்டத்தின் பெரும்பாலான தேசிய மட்ட ரீதியிலான பயிற்சி நிலையங்கள் அமைந்து காணப்படும் பிரதேசமாக களுத்துறை பிரதேச செயலகப் பகுதி இனங்காணப்பட்டிருத்தல்

### W

- வெள்ளப்பெருக்கு பாதிப்புக்கு உள்ளாகும் பிரதேசங்களில் அதிக மக்கள் தொகை வளர்ச்சி வீதம் (தேக்கவத்தை, கித்துளாவ, புலேர்டன் (Pulerton) மேற்கு) இனங்காணப்பட்டிருத்தல்
- இந்த திட்டமிடல் பகுதியில் வசித்துவரும் 56% மான மக்கள், இப் பிரதேசத்தில் வறட்சிக் காலகட்டங்களில் நதி நீருடன் உப்பு நீர் (கடல் நீர்) கலப்பதன் காரணத்தினால் குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது (தை மாதம், மாசி மாதம், ஆவணி மாதம் மற்றும் புரட்டாதி மாதம்)

# O

- தற்போதைய நிலவரத்தின் படி, கொழும்பிலிருந்து பாணந்துறை வரைக்குமான மின்சார புகையிரதப் பாதை ஆரம்பிக்கப்படுவதற்கான முன்மொழிவின் விளைவாக கொழும்பிலிருந்து களுத்துறைக்கான பயண நேரத்தை குறைக்கும் திறன் அதிகரித்து காணப்படுகின்றது.
- களுத்துறை மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால், நதி நீரில் உப்பு கலப்பதை தடுப்பதற்கும் நடவடிக்கையாக களு கங்கையில் தடுப்பு சுவர்களை ஏற்படுத்துவது தொடர்பான முன்மொழிவு காணப்படல்

# T

- இந்த திட்டமிடல் பகுதியின் மேற்கு எல்லையில் உள்ள தீரிரகந்த (Dhreerakanda) மாவத்தை தொடக்கம் பயாகல (Payagala) தெற்கு வரையிலாக காணப்படும் சுமார் 13 கிலோ மீட்டர் கடற்கரையோர பகுதியை சார்ந்து காணப்படும் கடல் அரிப்பின் தாக்கம் சார் பிரச்சினைகள்.
- 2025 ஆம் ஆண்டிற்கான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன் கணிப்பின் பிரகாரம், இப் பகுதியில் கடல் மட்டம் உயர்வு ஏற்படுவதற்கான வாய்ப்பு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

## இலக்கு 03

களு கங்கையின் கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும் களுத்துறை நகருக்கு நாளாந்தம் வரும் பயணிகளுக்கு உகந்த சேவையை வழங்கும் முகமாக சேவை நிலையத்தை (Service center) உருவாக்குதல்

### S

- களுத்துறையில் அமைந்து காணப்படும் புகையிரத நிலையமானது, அதிவேக கடுகதிப் புகையிரத சேவையை வழங்கும் நிலையமாக இருத்தல்
- களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் புகையிரத நிலையமானது, பிரதான பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் (100 மீட்டர்) அமைந்திருத்தல்.
- இப்பிராந்தியத்தில் அமையப்பெற்றுள்ள புறநகர் பிரதேசங்களுக்கான வீதியமைப்பை நோக்குமிடத்து, அவை பிரதான வீதிகளுடன் கூடியதாக முறையான வீதி வலையமைப்பினை கொண்டிருக்கின்றது

### W

- இந் நகர மத்திய பகுதியை சார்ந்து காணப்படும் பெரும்பாலான வீதிகளில் (2.3 கிலோ மீட்டர்) பாதசாரிகள் செல்வதற்கான நடைபாதை வசதிகள் காணப்படாமை

## O

- கொழும்பிலிருந்து பாணந்துறை வரைக்குமான மின்சார புகையிரதப் பாதை ஆரம்பிக்கப்படுவதற்கான முன்மொழிவின் விளைவாக கொழும்பிலிருந்து களுத்துறைக்கான பயண நேரத்தை குறைக்கும் திறன் அதிகரித்து காணப்படுகின்றது

- தெற்கு அதிவேக கடுகதி பாதையில் பெல்பொல ஒரு புதிய பாதை மாற்றமாக முன்மொழிவுப்பட்டிருத்தல் மற்றும் இதனால் களுத்துறை தொடக்கம் ஹொரண வரையிலான வீதிக்கு தொடர்பு ஏற்படுவதற்கான சாத்தியத்தன்மை இருத்தல்

## T

- அதிவேக கடுகதி பாதை நிர்மாணத்தின் போது ஏற்பட்ட துரித அபிவிருத்தி காரணமாக, இந் நகரின் தொடக்க மக்கள் தொகையைப் பெருக்குவதற்கு (Threshold population) சிரமம் ஏற்படுத்தும் சாத்தியத்தன்மை இருத்தல்

## 5.2.விரிவான முறையில் சுவோட் (SWOT) பகுப்பாய்வு

### இலக்கு 01

தென் மேற்குக் கடற்கரைப் பகுதியின் எல்லைக்கு உட்பட்டதாகவும் மற்றும் களு கங்கையின் கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும்தாகவும் உள்ள களுத்துறை நகரை யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு உகந்த இடமாக உருவாக்குதல்

### சாதகங்கள்

சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரீகர்கள் ஆகியோரை ஈர்க்கும் இடங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுதல். உதாரணமாக களுத்துறை போதி மர வளாகம், ரிச்மண்ட் கோட்டை கட்டிட வளாகம் (Richmond castle), காலிடோ கடற்கரை மற்றும் இப் பகுதியில் காணப்படும் ஆடம்பர சுற்றுலா விடுதிகள் என்பவற்றைக் முக்கிய பலமாக குறிப்பிடலாம். (உரு இலக்கம் – 5.1)

களுத்துறை நகரத்தில் சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரீகர்கள் ஈர்க்கும் வகையில் பல இடங்கள் உள்ளன. உரு இலக்கம் – 5.1 இல் காட்டப்பட்டுள்ள களுத்துறை போதி மர வளாகம், ரிச்மண்ட் கோட்டை கட்டிட வளாகம் (Richmond castle), காலிடோ கடற்கரை மற்றும் இப் பகுதியில் காணப்படும் ஆடம்பர சுற்றுலா விடுதிகள் என்பவற்றைக் முக்கிய பலமாக குறிப்பிடலாம். களுத்துறையில் அமைந்து காணப்படும் போதி மர வளாகத்திற்கு பெருந்தொகையான யாத்திரிகர்கள் வழிபடுத்தல் நோக்கத்திற்காக நாள்தோறும் வந்து செல்கின்றனர். இங்கு வருகைதரும் யாத்திரிகர்கள் மற்றும் பார்வையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறு விதமான நேர அடிப்படையிலான குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்களைக் கொண்டதாக அமைகின்றது. அவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு;

- சாதாரண நாட்களில் வருகைதருவோர் எண்ணிக்கை 1000 முதல் 1500 வரை
- சாதாரண போயா நாட்களில் வருகைதருவோர் எண்ணிக்கை 3500 முதல் 4000 வரை
- விஷேட போயா நாட்களில் வருகைதருவோர் எண்ணிக்கை 7000 முதல் 8000 வரை

சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அடிப்படையாக கொண்டு வழங்கப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டு, சுற்றுலா சார் நடவடிக்கைகளுக்காக கிட்டத்தட்ட 40,993 என்ற அளவிலான உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் மற்றும் கிட்டத்தட்ட 371,000 என்ற எண்ணிக்கையிலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் களுத்துறை நகருக்கு வந்து செல்கின்றனர். பலாத்தோட்ட வீதியில் (Palathota road) உள்ள ரிச்மண்ட் கோட்டை கட்டிட வளாகம் (Richmond castle) இங்கு வருகை தரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணிகளுக்கு மத்தியில் பிரபல்யமான கண்கவர் இடமாக விளங்குகிறது.

இங்கு காணப்படும் அனைத்து சுற்றுலாத் தலங்களும் ஒன்றுகொன்று மிகவும் நெருக்கமான முறையில் (சுமார் 1 – 3 கிலோ மீட்டர்க்குள்) அமைந்து காணப்படல்

களுத்துறை நகரத்தைச் சுற்றி அனைத்து சுற்றுலாத் தலங்களும் ஒன்றுகொன்று மிகவும் நெருக்கமான முறையில் அமைந்து காணப்படுகின்றமை (1 தொடக்கம் 3 கிலோ மீட்டர் பகுதிக்குள்) ஒரு பலமாகவே கருத்தப்படுகிறது. அத்தோடு, உரு இலக்கம் – 5.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, ஒருங்கிணைந்த நகர்ப்புர சுற்றுலா வசதியை இங்கு வருகைதரும் பயணிகளுக்கு வழங்கும் பாங்கில் களுத்துறை போதி மர வளாகம், ரிச்மண்ட் கோட்டைக் கட்டிட வளாகம் (Richmond Castle) தியகம பலுனு பாறை (Diyagama Palunu), காலிடோ கடற்கரை மற்றும் சுற்றுலா சார் ஆடம்பர விடுதிகள் போன்ற பகுதிகள் மிகவும் நெருக்கமான முறையில் அமைந்து காணப்படுகின்றன.

இங்கு அமையப்பெற்றிருக்கும் அனைத்து சுற்றுலாத் தலங்களும் பெரும்பாலும் பிரதான வீதி வலையமைப்புகளை அண்மித்ததாகவே காணப்படுகின்றன உதாரணமாக, களுத்துறை தொடக்கம் ஹொரண வரையிலான வீதி, களுத்துறை தொடக்கம் பண்டாரகம வரையிலான வீதி, களுத்துறை தொடக்கம் மத்துகமை வரையிலான வீதி அல்லது ஏனைய வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கான வீதிகள் (RDA Road)) போன்ற ஏதேனுமொரு வீதியோடு இணைக்கப்பட்டதாகவே உள்ளது

கொழும்பு தொடக்கம் வெல்லவாய (A2) வரையிலான வீதி, களுத்துறை தொடக்கம் ஹொரண வரையிலான வீதி, களுத்துறை தொடக்கம் பண்டாரகம வரையிலான வீதி, களுத்துறை தொடக்கம் மத்துகமை வரையிலான வீதி மற்றும் களுத்துறை தொடக்கம் பலதொட்ட வரையிலான வீதி போன்ற பிரதான வீதிகளின் வலையமைப்பிற்கு அருகாமையில் பெரும்பாலான சுற்றுலா தலங்கள் அமைந்திருப்பதன் காரணத்தால் உள்ளூர் யாத்திரிகர்கள் மற்றும் வெளிநாட்டு பயணிகளின் இங்கு வருகை தரும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இலங்கையில் ஆற்றுப் பள்ளத்தாக்குகளை அடிப்படை மூலமாகக் கொண்டு எழிச்சியடைந்த பல முக்கிய நகரங்களை ஒப்பிட்டு அவதானிக்கும் போது, ஆற்றுப் படுகைகளிலிருந்து சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவிற்குள் நடைபெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் களுத்துறை நகரமே முதலாவதாக விளங்குகின்றது.

இலங்கையில் ஆற்றுப் படுகைகளை சார்ந்து அபிவிருத்தி அடைந்த நகரங்கள் என்ற வகையில், மகாவலி ஆற்றுக்கு அருகில் திருகோணமலை நகரம், களனி கங்கைக்கு அருகில் கொழும்பு நகரம், வளவை கங்கைக்கு அருகில் அம்பலாந்தோட்டை நகரம், மற்றும் களு கங்கைக்கு அருகாமையில் களுத்துறை நகரம் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட இந் நகரங்களில் சுமார் 1 கிலோ மீட்டர் என்றளவிலான தொலைவிற்குள் இடம்பெறுகின்ற செயல்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் பின்வரும் அட்டவணை 5.1 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 5.1 : பிரதான ஆற்றுப் படுகைகளுக்கு அருகில் உள்ள அபிவிருத்திகள்

| ஆற்றுப் படுகையின் பெயர் | எழிச்சிபெற்ற நகரம் | நடவடிக்கைகள் (1 கிலோ மீட்டருக்குள்) |
|---|---|---|
| மகாவலி ஆறு | திருகோணமலை | வணிகம், விவசாயம் |
| களனி கங்கை | கொழும்பு | கல்வி, வணிகம், விவசாயம் |
| வளவை கங்கை | அம்பலாந்தோட்டை | கல்வி சார் நடவடிக்கைகள் வணிகம், விவசாயம் |
| களு கங்கைக | களுத்துறை | நிறுவனம் சார் நடவடிக்கைகள் கல்வி, வணிகம், விவசாயம் சுற்றுலா |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

இவ்வாறாக, ஆற்றுப் படுகைகளுக்கு அருகில் அமைந்து காணப்படும் நகரங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒப்பிட்டு அவதானிக்கும் போது, களுத்துறை நகரமே முதலாவதாக திகழ்கின்றது, இதன் காரணமாகவும், பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரீகர்களின் இங்கு தொடர்ச்சியாக வருகை தருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

உரு 5.1 : களுத்துறை நகரிற்கு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் இடங்களது அமைவிடங்கள்




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

## பலவீனங்கள்

பிரதான கண்கவர் இடங்களை சூழ்ந்து காணப்படுகின்ற பொருத்தமற்ற வகையில் அமையப்பெற்ற நிலப் பயன்பாட்டு வடிவங்கள் (போதி மரத்தைச் சூழவுள்ள பிரதேசம், காலிடோ கடற்கரைக்கு இட்டுச் செல்லும் அப்று வீதியை (Abru road) சார்ந்த பிரதேசம், கடற்கரைக்கு சமாந்தரமாக உள்ள டேஞ்சரின் ஹோட்டல் வரையுள்ள பகுதி மட்டும் – சுமார் 2 கிலோ மீட்டர், மற்றும் கடற்கரை வீதி (கெளிடோ வீதி) 600 மீட்டர்.

களுத்துறை என்பது பல விதமமான கவர்ச்சிகரமான அம்சங்களையும் மற்றும் தனித்துவமான பல அடையாளங்களையும் கொண்ட ஒரு அற்புதமான நகரமாக விளங்குகின்றது. ஆனால், இங்கு அமைந்து காணப்படும் சுற்றுலாத் தலங்களைச் சுற்றி காணப்படும் நிலப் பயன்பாட்டு முறையானது பொருத்தமற்றதாகவும் மற்றும் சீரற்றதாகவும் இருப்பதன் காரணத்தால், நகரத்தின் அபிவிருத்திற்குக்கு பெரும் தடையாக மாறியுள்ளது.

உதாரணமாக, உரு இலக்கம் – 5.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு, களுத்துறை போதி மரத்தைச் சூழவுள்ள காணிகளின் மொத்த நிலப் பரப்பில் 24% மான அடிப்படையிலான நிலங்கள் நிர்வாகப் பணிகளுக்கான பயன்படுத்தப்படுகின்றன. இதில், வெறும் 6% மான நிலங்கள் மட்டுமே மதம் சார்ந்த நடவடிக்கைகளுக்கும் மற்றும் இணைக்கப்பட்ட வணிக பயன்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், அந்த வகையில் அதிகபட்சமான நில பகுதியானது அரச சார் நிறுவங்களின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுவதோடு, இந்நிலப்பயன்பாடுகள் குறித்த பிரதேசத்திற்கு பொருத்தமற்ற பயன்பாடுகளாவதோடு, கலிடோ கடற்கரைக்கு அணுகும் கடற்கரை வீதி மற்றும், கலிடோ கடற்கரைக்கு சமாந்தரமாக உள்ள டேஞ்சரின் ஹோட்டல் வரையுள்ள பகுதி மட்டும் – சுமார் 2 கிலோ மீட்டர், மற்றும் கடற்கரை வீதி (கெளிடோ வீதி)600 மீட்டர். கடற்கரைக்கு சமமாக நீளும் பாதைக்கு மத்திய கோட்டிலிருந்து 50 மீட்டரிற்கு உட்பட்ட வலயத்தை நோக்கும் போது, மொத்த நில பகுதியில் 78% மான மற்றும் 60% மான

ஆன நிலப்பகுதியானது குடியிருப்பு பாவணைக்காக பயன்படுத்தப்படுவது அடையாளம் காணப்பட்டுள்ளது. அதே நேரத்தில் சுற்றுலாத் துறையும் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயன்பாடுகளும் சுமார் 10% மான மற்றும் 28% மான என்ற முறையே வரம்புக்குட்பட்டு உள்ளன. இவ்வாறாக பொருத்தமற்ற நில பயன்பாடுகள் காணப்படுவதனால், சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்வதற்கு, தேவையான வசதிகளை வழங்குவதற்கு மற்றும் வருமானத்தை அதிகரிப்பதற்கும் பல்வேறான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் மக்களை பிரதேசத்திற்கு கவர்ந்திழுப்பதற்கு இது பாரிய பிரச்சினையாக இருப்பதோடு, அபிவிருத்தி வேகத்தையம் கணிசமாக குறைக்கின்றமை பாரிய பிரச்சினையாகும்.

பிரதான சுற்றுலா தலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு காணப்படாமை

களுத்துறை பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலா தலங்களான, களுத்துறை போதி மர வளாகம், காலிடோ கடற்கரை பகுதி, தியகம பெலுனுகல மற்றும் ரிச்மன்ட் கோட்டைக் கட்டிட வளாகம் போன்ற பகுதிகளை சுற்றுலா போக்குவரத்து பாதையின் மூலம் ஒன்றிணைப்பதற்கான சாதகமான தன்மைகள் இப் பிரதேசத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆயினும், இங்கு காணப்படும் அனைத்து சுற்றுலா தலங்களுக்கும் இடையே போதுமான இடைத்தொடர்பு இல்லாமை மற்றும் சைகை பலகைகள் (Sign Boards) அல்லது வீதி வரைபடங்கள் (Road Maps) காணப்படாமை போன்ற காரணங்களின் நிமித்தம், இந் நகர் ஊடாகச் செல்லும் பிரயாணிகளுக்கு இந்த சுற்றுலா தலங்கள் சரியான முறையில் புலப்படுவதில்லை மற்றும் இவ்வாறான கண்கவர் தலங்கள் இருக்கிறனவா என்பது கூட தெரியாமல் போகும் நிலைமை காணப்படுகின்றது. இதுபோன்ற காரணிகள் இப் பகுதியின் அபிவிருத்தி போக்கிற்கும் மற்றும் சுற்றுலாத் தொழிலுக்கும் ஒரு தடங்கலாகவே விளங்குகிறது.

உரு 5.2 : முறையற்ற நிலபயன்பாட்டுடன் கூடிய பரம்பல்




மூலம் : “Open Street” புகைப்படம் (2018)

## வாய்ப்புகள்

களுத்துறை நகரிலிருந்து 2 கிலோ மீட்டர் என்றளவிலான தொலைவில் அமைந்து காணப்படும் டெங்ஜெரின் கடற்கரை விடுதி தொடக்கம் (Tangerine Beach Hotel) காலிடோ கடற்கரை வரையிலான கடற்கரை பகுதியில் மேற்கொள்ளப்படும் கரையோர அபிவிருத்தித் திட்டங்கள்

களுத்துறை நகரின் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களாக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் நோக்கில் தற்போது முன்மொழிவு செய்யப்பட்டுள்ள திட்டங்கள் போன்வற்றை குறிப்பிட்டு கூறலாம். எடுத்துக்காட்டாக, காலிடோ கடற்கரை அபிவிருத்தித் திட்டத்தை நாம் அவதானித்தால், இந்த திட்டத்தின் கீழ் கோடைகால குடில்கள், நடைபாதை, படகு சவாரி, விளையாட்டு மைதானம், கடற்கரை கால்பந்து மைதானம், பைன் மரங்களின் (Pine Tree) பூங்காக்கள் வரையான நடைபாதைகள், கடற்கரை பகுதியில் உள்ள ஓய்வு குடில்கள், கழிவறைகள், பாதுகாப்பு குடில் போன்ற அம்சங்கள் மேம்பாட்டிற்காக முன்மொழியப்பட்டுள்ளன.

உரு 5.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, முன்மொழியப்பட்டுள்ள மேல் மாகாண கட்டமைப்பு திட்டத்தின் கீழ் இந்த திட்டமிடல் பிரதேசமானது சுற்றுலா வலயமாக இனங்காணப்பட்டிருத்தல் (அடையாளம் காணப்பட்டுள்ள சுற்றுலாப்பகுதி அளுத்கம முதல் நீர்கொழும்பு வரை உள்ளது)

உரு இலக்கம் – 5.4 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 2040 ஆம் ஆண்டிற்கான அடிப்படையாக கொண்டு தயார் செய்யப்பட்ட தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கையின் பிரகாரம், களுத்துறை நகரமானது, பொருளாதார வழித்தடத்தில் (economic corridor) இடம்பெறுவதாக அமைந்து காணப்படுகின்றது.

அதற்கு அடுத்தப்படியாக, உரு இலக்கம் – 5.5 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 1998 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்ட கொழும்பு பெருநகர பிராந்திய கட்டமைப்புத் திட்டத்தை எடுத்து நோக்கிமிடத்து, இந்த திட்டத்தின் மூலம் களுத்துறை நகரமானது, பிராந்திய முக்கிய மையமாக, சுற்றுலாக் கவர்ச்சிப் பகுதியாக மற்றும் மேல் மாகாணத்தில் உள்ள நகரங்களின் படிநிலைவழி ஒழுங்கை கருத்திற் கொண்டு இரண்டாம் நிலை ஒழுங்காற்று நகரமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு தை மாதம் 29 ஆம் நாள் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பட்டிணமும் நாடும் திட்டமிடல் திணைக்களத்தினால் (Town and Country Planning Department) களுத்துறை போதி மரத்தைச் சூழவுள்ள 10 ஏக்கர் காணி புனிதத்தள பிரதேசமாக பகுதியாக பிரகடனபடுத்தப்பட்டிருத்தல்.

உரு 5.3 : மேல் மாகாணத்திற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டமைப்புத் திட்டம்




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

உரு 5.4: தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை– 2040




மூலம் : தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் (2018)

உரு 5.5 : கொழும்பு பெருநகர கட்டமைப்புத் திட்டம்– 1998




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

## அச்சுறுத்தல்கள்

இப் பிரதேசத்தில் காணப்படும் காலிடோ கடற்கரைப் பகுதி மற்றும் அவ்விடம் சார்ந்த பகுதிகளில் உள்ள மணல் திட்டுகள் பாதிப்புக்குள்ளாக்கப்படுதல்

களுத்துறை நகரினை சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரீகர்களுக்கு உகந்த இடமாக மாற்றுவதற்கு இடையூறாக இந்த பிரதேசத்தில் காணப்படும் மணல் திட்டுகள் அழிவடைதல் மற்றும் அதனோடு சார்ந்த விளைவுகள் என்பன காணப்படுகின்றன. தற்போதைய நிலவரத்தின் படி, பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் மிகவும் கவர்ச்சிகரமான சுற்றுலா தலமாக விளங்கும் காலிடோ கடற்கரையானது மோசமான அழிவுக்கு உள்ளாகி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்தோடு, இது தொடர்பாக உரு இலக்கம் 5.6 மற்றும் உரு இலக்கம் 5.7 ஆகிய படங்களில் காட்டியுள்ளபடி, 2005 ஆம் ஆண்டு மற்றும் 2018 ஆம் ஆண்டு ஆகிய இரு வேறுபட்ட கால அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்ட செய்மதிப் படங்கள் மூலமாக இந்த அழிவின் போக்கினை தெளிவாக அடையாளம் காணப்படலாம். இந்த அழிவு நகரத்தின் அழகியற் காட்சிக்கும் சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

களுத்துறையை சூழ அமைந்து காணப்படும் புறநகர் பிரதேச பகுதிகளில் துரித அபிவிருத்தியை மேற்கொள்வதன் காரணமாக களுத்துறை நகருக்குள் மக்களை ஈர்ப்பதில் சிரமம் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படல்

களுத்துறை நகரின் புறநகர் பகுதியில் மேற்கொள்ளப்படும் துரித அபிவிருத்தி செயற்பாடுகளின் காரணமாக, களுத்துறை நகர்புறப பகுதியின் தொடக்க மக்கள் தொகை ஆனது (Threshold Population) குறைந்து செல்லும் போக்கை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக, தெற்கு அதிவேக கடுகதி பாதையின் அபிவிருத்திக்கு பின்னர் நகரப் பகுதியில் அமைந்து காணப்படும் வீதிகளின் இடைத்தொடர்பு குறைந்து, நகரப் பகுதியின் அபிவிருத்தியை மெதுவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான காரணம், களுத்துறை பிரதேசத்தின் அனைத்து விதமான அபிவிருத்திப் பணிகளும் புகையிரத மற்றும் வீதி அமைப்பை பிரதானமாகக் கொண்டு இடம்பெறுகின்றன. இதன் காரணமாக, தெற்கு அதிவேக கடுகதி பாதையின் அபிவிருத்தியினால் தேற்றுவிக்கபட்ட இடைமாற்றத்தைக் கொண்டுள்ள நகரத்தை நோக்கிய அடிப்படையாக கொண்டு உருவாகியுள்ள ஒரு அபிவிருத்திப் போக்கினை அவதானிக்கலாம் அத்தோடு இந்த அபிவிருத்தி போக்கானது களுத்துறை நகரை சூழ அமைந்து காணப்படும் புறநகர் பிரதேசங்களுக்கு கடத்தப்படுகின்றது.

ஹொரண நகரைச் சூழ்ந்து கைத்தொழில் வலயங்களை அபிவிருத்தி செய்தல், மத்துகமை நகரை அபிவிருத்தி செய்தல், பாணந்துறை வரை மின்சார மையபடுத்திய புகையிரதப் பாதைக்கான வசதியை மேம்பாடு செய்தல் போன்ற விடயங்களின் தாக்கத்தினால் களுத்துறை நகரின் தொடக்கநிலை மக்கள் தொகையை (Threshold Population) குறைந்துபோவதற்கான சந்தர்ப்பம் காணப்படல்.

உரு 5.6 : காலிடோ கடற்கரைப்பகுதியானது முன்னதாக காணப்பட்ட நிலைமை (2005)



மூலம் :"Google Earth" புகைப்படம்(2018)

உரு 5.7 : காலிடோ கடற்கரைப்பகுதியின் தற்போதைய நிலைமை (2018)



மூலம் : “Google Earth” புகைப்படம் (2018)

**இலக்கு 02**

களு கங்கைக்கு அருகில் நிரந்தரமான முறையிலும் மற்றும் தற்காலிகமான முறையிலும் வீடுகளை கொண்டுள்ளவர்களுக்கு சௌகரியமான மற்றும் வசதியான நகர வாழ்வியலை ஏற்படுத்தல்

## சாதகங்கள்

களுத்துறை மாவட்டத்திற்கான நிர்வாக மற்றும் சுகாதார சேவை வழங்கும் பிரதான நகரமாக இது செயற்படுதல்

மாவட்டத்தில் பிரதான சேவை வழங்கும் நிறுவனங்கள் பெரும்பாலும் களுத்துறை களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் அமைந்து காணப்படுகின்றன. அவற்றில் நிருவாக மற்றும் சுகாதார நிறுவனங்கள் பிரதான நிறுவனங்களாகின்றன. இந்த சேவைகளைப் பெறுவதற்காக களுத்துறை பிரதேச செயலகப் பகுதிக்கு வரும் நாளாந்த மக்கள் தொகை சுமார் 80,000 பேர் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரைபடம் 5.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, களுத்துறை மாவட்ட அலுவலகம் மற்றும் பல நிருவாக நிறுவனங்கள் இந்த அமைவிடத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இந் நகரம் களுத்துறை மாவட்டத்தின் நிர்வாக மையமாக செயல்பட்டு வருகின்றது. ஆதார வைத்தியசாலையும் களுத்துறை பிரதேச செயலகப் பகுதிக்குள்ளேயே அமைந்து காணப்படுகின்றது.

இங்கு வருடாந்தம் ஏற்படும் வெள்ளப்பெருக்கை கட்டுப்பாடுத்தும் நோக்கத்திற்காக மொத்த நிலப்பரப்பில் 55% மான தாழ்வான நிலம் பரப்பைக் கொண்டிருத்தல்.
மழை வெள்ளத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு, நீர் தேங்கும் தன்மையுள்ள பகுதிகளாக, திட்டமிடல் பகுதியில் அமைந்து காணப்படும் நெல் வயல்கள், சதுப்பு நிலங்கள் மற்றும் ஈரநிலப்பகுதிகள் செயல்பட்டு வருகின்றன. நில பரப்பில் குறைந்த சாய்வுத் தன்மை இருப்பதன் காரணத்தால், மழைநீர் வெளியேறும் போது, இந்த பகுதியில் ஓரளவு சிக்கல் ஏற்படுகிறது. எனினும், இந்த தாழ்வான நிலங்கள் நீர் தேக்க தேவைக்கு பயனுள்ளதாக இருக்கும். களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் தாழ்வாகக் காணிகளின்

பரம்பல் வரைபடம் 5.3 இல் காட்டப்பட்டுள்ளது. இதன் பரப்புகள் தொடர்பான விபரங்கள் அட்டவணை இலக்கம் – 5.2 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5.2 : தாழ்வான நிலகளின் வகைப்பாடு

| நிலபயன்பாடு | நில பரப்பு ( ஹெக்டர்) |
|---|---|
| நெல் பயிரிடப்பட்டுள்ள பகுதி | 471.72 |
| சாதாரண ஈரநில பாதுகாப்பு பிரதேசங்கள் | 1484.74 |
| ஈரநிலப் பிரதேசங்கள் | 75.87 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

இந்த திட்டமிடல் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேச சபை பிரதேசத்தினுள் அதிக மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் ( 2% மான) காணப்படுதல்

குறிப்பாக மக்கள் தொகை அபிவிருத்தி விகிதம், தேக்கவத்தயில் 3.3% மான, கிதுலவாவில் 6. 3% மான, புலேர்டன் (Pulerton) தெற்கில் 6. 5% மான மற்றும் டெல்துவவில் 7.7% மான, போன்ற அடிப்படையாக கொண்டு காணப்படுகின்றன. வரைபட இலக்கம் 5.2 இல் காட்டப்பட்டுள்ள போக்கின் பிரகாரம் நகர அபிவிருத்தியானது உயிரோட்டமான மற்றும் செயல்பாட்டு நகரமாக வளர முடியும். இதனால் மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் வேலைவாய்ப்பும் அதிகரித்தல் என்பன இடம்பெறும்.

இங்கு காணப்படும் புகையிரத சேவை மற்றும் தெற்கு அதிவேக கடுகதிப் பாதைகள் போன்ற பல் தன்மை போக்குவரத்து முறையின் ஊடாக கொழும்பு வர்த்தக மையத்துடன் பலமான இடை தொடர்பை கொண்டுள்ளமை

நாட்டின் வர்த்தக மையமாக காணப்படுகின்ற கொழும்பு நகரமானது , புகையிரத மற்றும் ஏனைய விதிகளின் மூலம் இணைக்கப்பட்டு சுமார் 43 கிலோ மீட்டர் என்ற குறுகிய தூரத்தில் அமைந்து காணப்படுகின்றது. அத்தோடு, களுத்துறை பிரதேச செயலகப் பிரதேசத்திற்கு அருகாமையில் தெற்கு அதிவேக கடுகதி பாதைக்கான நுழைவாயில்களான களனிகம, (14 கிலோ மீட்டர்) தோடொன்கோடை (18 கிலோ மீட்டர்), பெல்பொல நுழைவாயில் (15 கிலோ மீட்டர். ) எனபன காணப்படுகின்றன. இவ்வாறு களுத்துறை நகரம், தெற்கு அதிவேக கடுகதி பாதையின் மூலம் கொழும்பு மாநகரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் பெரும்பாலான தேசிய மட்ட ரீதியிலான பயிற்சி நிலையங்கள் அமைந்து காணப்படும் பிரதேசமாக களுத்துறை பிரதேச செயலகப் பகுதி இனங்காணப்பட்டிருத்தல்

ஏனைய களுத்துறை பிரதேச செயலகப் பகுதிகளுடன் ஒப்பிட்டு அவதானிக்கும் போது, பல தேசிய மட்ட பயிற்சி நிலையங்கள் களுத்துறை களுத்துறை பிரதேச செயலகப் பிரிவிற்குள் அமைந்திருந்தமை மிகவும் முக்கியமான அம்சமாகும்.

- தேசிய தாதியர் பயிற்சிப் பாடசாலை
- தேசிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
- நெல் ஆராய்ச்சி நிறுவனம்
- உள்ளக விமானப் படை முகாம்
- அதிரடிப்படை பயிற்சி நிலையம்
- காவல் பயிற்சிக் கல்லூரி




வரைபடம் 5.1 : – களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் நிர்வாக கட்டிட அடர்த்தி (2018)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)




வரைபடம் 5.2 : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் சனத்தொகை வளர்ச்சி வேகம் (2001-2011)
மூலம்:நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)




வரைபடம் 5.3 : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் ஈர நிலப் பரம்பல் (2018)
மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

## பலவீனங்கள்

வெள்ளப்பெருக்கு பாதிப்புக்கு உள்ளாகும் பிரதேசங்களில் அதிக மக்கள் தொகை வளர்ச்சி வீதம் (தேக்கவத்தை, கித்துளாவ, புலேர்டன் (Pulerton) மேற்கு) இனங்காணப்பட்டிருத்தல்

களுத்துறை நகரமானது, வைகாசி மாதம், புரட்டாதி மாதம் மற்றும் ஐப்பசி போன்ற மாதங்களில் பெரும்பாலும் வெள்ளப் பெருக்கிற்கு உள்ளாகின்றது. அதிலும், வெள்ளப்பெருக்கு பாதிப்புக்கு உள்ளாகும் பிரதேசங்கள் பெரும்பாலும் அதிக மக்கள் தொகை வளர்ச்சி வீதம் கொண்டவையாகவே காணப்படுகின்றன. உதாரணமாக, தேக்கவத்தை (3.3%), கித்துளாவ (6.3%), புலேர்டன் (Pulerton) மேற்கு (7.7%) போன்ற இடங்களில் அதிக மக்கள் தொகையினரைக் கொண்ட பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட அதிக வாய்ப்புகள் வாய்ப்புகள் உள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய தகவல்கள் புலப்படுத்துகின்றன இதனால், வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலகட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்படும் நிலைமை உருவாகின்றது மற்றும் இவ்வாறான பாதிப்புகளின் நிமித்தம் திட்டமிடல் பகுதி முழுவதுவதுக்குமான அபிவிருத்தி நடவடிக்கைகள் தடங்கல் அடையும் அபாயம் நிலைமையும் இங்கு காணப்படுகின்றது.

இந்த திட்டமிடல் பகுதியில் வசித்துவரும் 56% மான மக்கள், வறட்சிக் காலத்தில் நதியில் உப்பு நீர் கலப்பதன் காரணத்தினால் குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் (தை மாதம், மாசி மாதம், ஆவணி மாதம் மற்றும் புரட்டாதி மாதம்)

இந்த திட்டமிடல் பகுதியின் முக்கிய குடிநீர் ஆதாரமாக களு கங்கையின் நிர்ப்பரப்பு காணப்படுகின்றது. எனவே, களு கங்கையில் ஏற்படக் கூடிய உப்பு நீர்க் கலப்பானது, இப் பகுதி முழுவதும் குடிநீர் பிரச்சினையை உருவாக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. நகர சபை பகுதியில் வசிக்கும் 100% மான மக்கள் குடிநீர்க் குழாய் மூலம் நீரைப் பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு, களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் உள்ள 56% மான மக்கள் குடிநீர்க் குழாய் மூலம் நீரைப் பயன்படுத்துகின்றனர். ஆகவே, வறட்சியான பருவத்தில் குறிப்பாக மாசி மாதம், பங்குனி மாதம் , ஆவணி மாதங்களில் நீர் மட்டம் குறைவாக இருக்கும் போது, கடல் நீரேரி நீரானது ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும் காரணத்தால் உப்புத் தன்மை ஆற்றில் உயர்கிறது.

உரு இலக்கம் – 5.8 படத்தில் உள்ளவாறு, வறட்சியான காலங்களில், நீரில் காணப்படும் மின்சார கடத்து திறனானது (Electrical conductivity) 750 MS/cm அல்லது அதற்கும் மேலதிகமாகும். 750 MS/cm அளவிற்கு மேற்படுமிடத்து அது குடிப்பதற்கு உகந்த நீராக இருக்காது அத்தோடு இது நீரின் உயர்ந்த உப்பின் அளவை பிரதிபலிக்கிறது. இது சுற்றுச்சூழலின் உணர்திறன் கொண்ட சூழலைப் பாதித்து, விலங்கினங்களை பாதிக்கும் அத்தோடு உணவு சங்கிலி மற்றும் அமைப்புகளை சிறப்பாக சேதப்படுத்துகிறது. இதனால் உயிர்பல்வகைமை பெருக்கம் குறைந்து, அதன் சமநிலை குழப்பமடையும்.

உரு 5.8 : உலர் காலப்பகுதியிலான நீர் மின் கடத்தும் திறன்




மூலம் :தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு அதிகாரசபை (2018)

## வாய்ப்புகள்

தற்போதைய நிலவரத்தின் படி, கொழும்பிலிருந்து பாணந்துறை வரைக்குமான மின்சார புகையிரதப் பாதை ஆரம்பிக்கப்படுவதற்கான முன்மொழிவின் விளைவாக கொழும்பிலிருந்து களுத்துறைக்கான பயண நேரத்தை குறைக்கும் திறன் அதிகரித்து காணப்படுகின்றது.

கொழும்பிலிருந்து பாணந்துறை வரைக்குமான மின்சார புகையிரத பாதையை மின்மயமாக்குவதன் மூலம் போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கும் என்பதுடன், 2030 ஆம் ஆண்டளவில், இந் நகருக்கு நாளாந்தம் சுமார் 80,000 மக்கள் தொகையினை ஈர்க்கும் எனவும் இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. எந்தவொரு சிரமமும் இல்லாமல் தகுந்த போக்குவரத்து தேவைப்பாடுகளை முறையாக வழங்க முடியும். மேலும், இது களுத்துறை களுத்துறை பிரதேச செயலகப் பகுதியிலிருக்கும் மக்கள் தமது நாளாந்த வேலைக்காக இலங்கையின் பிரதான வர்த்தக தலைநகரான கொழும்பினை இலகுவில் சென்றடையும் வகையிலான வசதியை ஏற்படுத்தும் என கணிக்கப்படுகின்றது.

இந்த புதிய போக்குவரத்து முறைமையின் மூலம், வர்த்தக தலைநகரான கொழும்பிலிருந்து ஏனைய பிரதான நகர மையங்களுடனான இடை தொடர்பையும் அதிகரிக்கக் கூடியவாறான வாய்ப்பு காணப்படுகின்றது.

தற்போதை சூழ்நிலையின் பிரகாரம், கொழும்பிலிருந்து களுத்துறைக்கு அதிவேக கடுகதி புகையிரத்தின் மூலம் பயணிக்க சுமார் ½ மணித்தியாலங்கள் வரை ஆகின்றது மற்றும் சாதாரண புகையிரதத்தில் 1½ மணித்தியாலங்கள் ஆகின்றன. இவ்வாறான காரணிகளை கருத்திற்கொண்டு மின்சார புகையிரத சேவையானது களுத்துறை வரை விஸ்தரிக்கப்பட கூடிய வாய்ப்பும் காணப்படுகின்றது. மேலும், குறிப்பிட்டுகாட்டிய பயண நேரங்களின் காலஅளவுகளை உரு இலக்கம் – 5.9 இல் காட்டப்பட்டுள்ளவாறு மேலும் குறைக்க முடியும்.

களுத்துறை மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால், நதி நீரில் உப்பு கலப்பதை தடுப்பதற்கும் நடவடிக்கையாக களு கங்கையில் தடுப்பு சுவர்களை ஏற்படுத்துவது தொடர்பான முன்மொழிவு காணப்படல்.

நில மேற்பரப்பு நீரோட்டத்தை நோக்கி உப்பு நீர் பாய்வதைத் தடுக்கும் வகையில், களுத்துறை மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பிரேரணை ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. அதனூடாக, களுத்துறை பாலத்திற்கு அருகாமையில் தடுப்பு சுவர்களை நிர்மாணிக்க தீர்மானித்துள்ளது. இந்த செயல்

திடத்திற்காக சுமார் 300,000,000 ரூபாய்கள் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இதற்கான சாத்தியகூறு பற்றிய ஆய்வு (Feasibility Study) மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. களுத்துறை நகரில் வசிப்பவர்களுக்கு சௌகரிய தன்மையையும் மற்றும் வசதியையும் ஏற்படுத்துவதற்கான ஒரு முக்கியமான திட்டமாக இது கருதப்படுகின்றது.

உரு 5.9 : உத்தேசிக்கப்பட்டுள்ள பாணந்துறை வரையிலான மின்மயமாக்கல் புகையிரதப்பாதை




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

## அச்சுறுத்தல்கள்

இந்த திட்டமிடல் பகுதியின் மேற்கு எல்லையில் உள்ள தீரகந்த வீதிக்கு (Dhirakkanada road) அருகில் அமைந்து காணப்படும் இடத்திலிருந்து பயாகல தெற்கு வரை சுமார் 13 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடற்கரையோரத்தில் காணப்படும் மணல் திட்டுகள் அழிவடைதல் சார் பிரச்சினைகள்.

இந்த திட்டமிடல் பகுதியில், பல்வேறுபட்ட வகையிலான தடைகள் மற்றும் இடையூறுகள் இருப்பினும், களுத்துறை நகர அபிவிருத்திக்கு பிரதான தடையாக இருப்பது கடல் அரிப்பே ஆகும். தற்போது காலிடோ கடற்கரையானது மோசமான அழிவுக்கு உள்ளாகி வருகின்றது. மிகவும் கவர்ச்சிகரமான காலிடோ கடற்கரையை அழிப்பதன் காரணத்தினால் சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பும், இயற்கை மதிப்பும் வெகுவாக குறைந்துபோகும் அச்சுறுத்தல் இங்கு காணப்படுகின்றது. மேலும், இது கரையோர சூழல் முறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். வரைபட இலக்கம் 5.4 இல் காட்டியுள்ளபடி, அபாய அளவுகளை கணக்கில் எடுத்து, கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால், களுத்துறை கடற்கரைப் பகுதியானது பின்வருமாறு அடிப்படையில் மூன்று பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது

1) உயர் அபாய வலயம் – டெங்ஜெரின் கடற்கரை விடுதி தொடக்கம் (Tangerine Beach Hotel ) அவானி களுத்துறை உல்லாச விடுதி (Avani hotel) வரையிலான பிரதேசம்
2) நடுத்தரமான இடர் வலயம் – அவானி களுத்துறை உல்லாச விடுதி (Avani hotel) முதல் பயாகல தெற்கு வரையிலான பிரதேசம்
3) குறைந்த இடர் வலயம் – பின்னவத்த புகையிரத நிலையத்திலிருந்து டெங்ஜெரின் கடற்கரை விடுதி (Tangerine Beach Hotel ) வரையிலான பிரதேசம்

2025 ஆண்டிற்கான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணிப்பின் படி, இப் பகுதியில் கடல் மட்டம் உயர்வுத் தன்மை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, களுத்துறை மாவட்டத்திற்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேற்கொண்ட ஆய்வின் படி தயார் செய்யப்பட்ட கடல் மட்ட அதிகரிப்பு மற்றும் அதன் தாக்கம் மாற்றும் அபாய மட்டங்கள் என்பவை தொடர்பான விவரணங்கள் வரைபட இலக்கம் 5.4 இல் கொடுக்கப்பட்டுள்ளன.




கடலோர அச்சுறுத்தல் வலயம்
களுத்துறை பிரதேச செயலக பிரிவு
மூலம் - கடலோர பாதுகாப்பு திணைக்களம்

0 0.45 0.9 1.8 2.7 3.6 கி.மீ.

நகர அபிவிருத்தி அதிகாரசபை
மார்கழி 2018

மேல் மாகாண பிரிவு | களுத்துறை அபிவிருத்தி திட்டம் (2019-2030) | தயாரிப்பு: களுத்துறை மாவட்ட அலுவலகம்

வரைபடம் 5.4 : களுத்துறை கடலோர அச்சுறுத்தல் வலயம் (2018)
மூலம்:நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)




கடல் மட்ட அதிகரிப்பு அச்சுறுத்தல் வலயம். (2025)
களுத்துறை பிரதேச செயலக பிரிவு
மூலம்- அனர்த்த முகாமைத்துவ நிலையம்

0 0.45 0.9 1.8 2.7 3.6 கி.மீ.

நகர அபிவிருத்தி அதிகாரசபை
மார்கழி 2018

மேல் மாகாண பிரிவு | களுத்துறை அபிவிருத்தி திட்டம் (2019-2030) | தயாரிப்பு: களுத்துறை மாவட்ட அலுவலகம்

வரைபடம் 5.5 : களுத்துறை பிரேதேச செயலக பிரிவின் கடல் நீர் மட்ட அதிகரிப்பு வலயம் (2025)
மூலம்:நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

இலக்கு 03

களு கங்கையின் கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும் களுத்துறை நகருக்கு நாளாந்தம் வரும் பயணிகளுக்கு உகந்த சேவையை வழங்கும் முகமாக சேவை நிலையத்தை (Service center) உருவாக்குதல்

## சாதகங்கள்

களுத்துறையில் அமைந்து காணப்படும் புகையிரத நிலையமானது, அதிவேக கடுகதிப் புகையிரத சேவையை வழங்கும் நிலையமாக இருத்தல்

இலங்கையில் செயல்படும் பிரதான புகையிரத நிலையங்களில் ஒன்றாக களுத்துறை புகையிரத நிலையம் காணப்படுகின்றது. அத்தோடு அதிவேக கடுகதி புகையிரதங்கள் மற்றும் சாதாரண வேக புகையிரதங்கள் ஆகிய இரண்டு சேவைகளும் களுத்துறை புகையிரத நிலையத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. இதனால் கொழும்பு நகரிலிருந்து தெற்கு பிராந்தியங்களுக்கு புகையிரத பாதையின் ஊடாக பிரயாணம் செய்யும் பயணிகளுக்கு இது ஒரு வசதிகளாக மாறியுள்ளது. மேலும் இது இரட்டை வரி தண்டவாள புகையிரத நிலையமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசாங்க புகையிரத சேவையில் (CGR) குறிப்பிட்டுள்ளவாறு, களுத்துறை நகருக்கு 6500 பயணிகள் நாளாந்த அடிப்படையில் வருகின்றார்கள் இது தொடர்பான விபரங்கள் உரு இலக்கம் 5.11 இல் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் களுத்துறை பிரதேச செயலகப் பகுதிக்குள் மொத்தமாக நான்கு புகையிரத நிலையங்கள் அமைந்து காணப்படுகின்றன. புகையிரத நிலையம் இலக்கம் 1 / களுத்துறை வடக்கு பிராந்தியம் / களுத்துறை தெற்கு பிராந்தியம் / கட்டுகுறுந்த ஆகிய புகையிரத நிலையங்கள் காணப்படுகின்றன.

களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் வசிக்கும் மக்கள் தமது போக்குவரத்துச் தேவைகளை இலகுவாகப் பூர்த்திசெய்ய முடியும். இது களுத்துறை நகரை போக்குவரத்து இடம்பெயர்வு முனையமாக கொண்ட அபிவிருத்திக்கு ஒரு பலம் திகழ்கின்றது.

களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் புகையிரத நிலையமானது, பிரதான பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் (100 மீட்டர்) அமைந்திருத்தல்.

களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் புகையிரத நிலையம் மற்றும் பேருந்து நிலையம் போன்ற போக்குவரத்து முனையங்களானவை உரு இலக்கம் – 5.10 ல் காட்டப்பட்டுள்ளவாறு ஒன்றுக்கொன்று நெருக்கமாக அமைந்து காணப்படுகின்றன. இதன் காரணமாக, இங்கு வசித்துவரும் மக்கள் மற்றும் அன்றாட பணிகளின் நிமித்தம் இன் நகருக்கு வரும் பயணிகள் போன்றோர் அவர்களுக்கு தேவைப்படும் போக்குவரத்து வசதியை சீராகவும் மற்றும் திறம்பட பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு காணப்படுகின்றது. மேலும், இங்கு கிடைக்கும் போக்குவரத்து வசதியை அடிப்படையாக கொண்டு, போக்குவரத்து சார் அபிவிருத்தி மையம் ஒன்றை அமைக்கவும் வாய்ப்பு உள்ளது.

இப்பிராந்தியத்தில் அமையப்பெற்றுள்ள புறநகர் பிரதேசங்களுக்கான வீதியமைப்பை நோக்குமிடத்து, அவை பிரதான வீதிகளுடன் கூடியதாக முறையான வீதி வலையமைப்பினை கொண்டிருக்கின்றது.

இப்பிராந்தியத்தில் அமையப்பெற்றுள்ள புறநகர் பிரதேசங்களுக்கான வீதியமைப்பு தொடர்பான விபரங்கள் வரைபட இலக்கம் – 5.6 இல் காட்டப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், களுத்துறை தொடக்கம் பண்டாரகம வரையிலான வீதி, களுத்துறை தொடக்கம் ஹொரண வரையிலான வீதி மற்றும் களுத்துறை தொடக்கம் மத்துகமை வரையிலான வீதி போன்ற பிரதான வீதிகளின் இணைப்பின் மூலம் களுத்துறை நகரானது புறநகர் பகுதிகளுடன் பலமான முறையில் இணைக்கப்பட்டுள்ளது.

உரு 5.10 : களுத்துறை புகையிரத நிலையம் மற்றும் பேருந்து தரிப்பிடம் அமைவிடம்




மூலம் : “Open Street” புகைப்படம் (2018)

உரு 5.11 : புகையிரத சேவை சார்ந்த தகவல்கள்




மூலம் : பட்டிணமும் நாடும் திட்டமிடல் பிரிவு (Town and Country Planning Department) , மொரட்டுவை பல்கலைக்கழகம், 2005




வரைபடம் 5.6 : புகையிரத மற்றும் பெறும் தெருக்களின் பரவல் (2018)
மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## பலவீனங்கள்

இந் நகரின் மத்திய பகுதியை சார்ந்து காணப்படும் பெரும்பாலான வீதிகளில் (2.3 கிலோ மீட்டர்) பாதசாரிகள் செல்வதற்கான நடைபாதை வசதிகள் காணப்படாமை.

இந் நகர மத்திய பகுதியை சார்ந்து காணப்படுகின்ற ஒழுங்கற்ற நிலப்பயன்பாட்டின் காரணமாகவும் மற்றும் நகரின் மத்திய பகுதியில் பாதசாரிகள் நடைபாதைகள் வசதி இன்மை என்பவை காரணமாகவும் நடைத்திறன் (walkability) மிகுந்த சூழல் முறைமை ஒன்று இங்கு காணப்படவில்ல என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு, இங்கு நாளந்த தேவைகளுக்காக வருகை தருவோருக்கு இது ஒரு இடையூறான விடயமாகவே கருதப்படுகின்றது. இவ்வாறான பிரச்சினைகளோடு கண்டறியப்பட்ட வீதிகள் உரு இலக்கம் – 5.12 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| களுத்துறை கடிகார கோபுர மூன்று வழி சந்திப்பு | – | 850 மீட்டர் |
| புரையிரத நிலைய வீதி | – | 180 மீட்டர் |
| குட் ஷெட் வீதி | – | 338 மீட்டர் |
| சாரானந்தா வீதி | – | 270 மீட்டர் |
| சமலி குணவர்தன மாவத்தை | – | 190 மீட்டர் |
| ஞானோதய மாவத்தை | – | 180 மீட்டர் |
| கிரகோரி வீதி | – | 348 மீட்டர் |

உரு 5.12 : பாதசாரி நடைபாதையுடன் கூடிய வீதிகள்




மூலம் : “Open Street” புகைப்படம் (2018)

## வாய்ப்புக்கள்

கொழும்பிலிருந்து பாணந்துறை வரைக்குமான மின்சார புகையிரதப் பாதை ஆரம்பிக்கப்படுவதற்கான முன்மொழிவின் விளைவாக கொழும்பிலிருந்து களுத்துறைக்கான பயண நேரத்தை குறைக்கும் திறன் அதிகரித்து காணப்படுகின்றது.

முன்மொழியப்பட்டிருக்கும் கொழும்பு பாணந்துறை வரையிலான மின்மயமாக்கிய புகையிரத சேவையானது களுத்துறை வரை விரிவுபடுத்தும் சாத்தியம் இருப்பதன் காரணத்தால், களுத்துறை நகரை அனைத்து விதமான பயணிகளுக்கு உகந்த நகரம் என அபிவிருத்தி செய்ய முடியும் மற்றும் போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கும் என்பதுடன் அதிகளவிலான மக்கள் தொகையினை ஈர்க்கும் எனவும் இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. எந்தவொரு சிரமமும் இல்லாமல் தகுந்த போக்குவரத்து தேவைப்பாடுகளை முறையாக வழங்க முடியும்.

தெற்கு அதிவேக கடுகதி பாதையில் பெல்பொல ஒரு புதிய பாதை மாற்றமாக முன்மொழிவுப்பட்டிருத்தல் மற்றும் இதனால் களுத்துறை தொடக்கம் ஹொரண வரையிலான வீதிக்கு தொடர்பு ஏற்படுவதற்கான சாத்தியத்தன்மை இருத்தல்.

தெற்கு அதிவேக கடுகதி பாதையில் அமைந்துள்ள பெல்பொல பகுதியானது, புதியதொரு இடைமாற்ற நிலையமாக முன்மொழிவுப்பட்டிருப்பதன் காரணமாக களுத்துறை தொடக்கம் ஹொரண வரையிலான வீதிக்கு இடைத் தொடர்பு அதிகரிப்பதற்கான சாத்தியத்தன்மை முக்கிய வாய்ப்பாக கருதப்படுகின்றன. இது தொடர்பான விபரணங்கள் உரு இலக்கம் – 5.13 இல் காட்டப்பட்டுள்ளது.

உரு 5.13 : தெற்கு அதிவேக கடுகதி பாதையில் பெல்பொல இடைமாற்ற நிலையம் மற்றும் களுத்துறை தொடக்கம் ஹொரண வரையிலான வீதிக்கு இடையிலான தொடர்பு




மூலம் : "Google" புகைப்படம் (2018)

## அச்சுறுத்தல்கள்

தெற்கு அதிவேக கடுகதி பாதை நிர்மாணத்தின் போது ஏற்பட்ட துரித அபிவிருத்தி காரணமாக, இந் நகரின் தொடக்க மக்கள் தொகையைப் பெருக்குவதற்கு (Threshold population) சிரமம் ஏற்படுத்தும் சாத்தியத்தன்மை இருத்தல்

தெற்கு அதிவேக கடுகதி பாதையின் நிர்மாணத்தின் காரணமாக, களுத்துறை நகரைச் சூழவுள்ள புறநகர் பகுதியில் துரித அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இதன் விளைவாக களுத்துறை நகர்புறப பகுதியின் தொடக்க மக்கள் தொகையானது (Threshold Population) குறைந்து செல்லும் போக்கை அவதானிக்கலாம். உதாரணமாக பின்வரும் புறநகர் அபிவிருத்திகளை குறிப்பிடலாம்; ஹொரண தொழிற்துறைத் அபிவிருத்தி, மத்துகமை நகர்ப்புறப் பகுதியில் இடம் பெற்று வரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் தெற்கு அதிவேக கடுகதிப் பாதை அபிவிருத்தி போன்ற அபிவிருத்திகலானவை, வெளி பிராந்தியங்களில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான சாதக தன்மைகளை ஏற்படுத்துவதோடு, நகரிற்குள் உள்ள மக்கள் தொகை அளவை குறைத்து செல்கின்றது. 5.14 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, களனிகம மற்றும் தோடங்கொடை வீதியின் இடைமாற்றங்களின் பெறுபேறாக, அந்த பிரதேசங்கள் அதிக மக்கள் செறிவுடன் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

உரு 5.14 : தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்ட பின்னரான வீதியமைப்பு தொடர்புகள்



மூலம் – நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

# அத்தியாயம் அமைப்பு



## திட்டம்

## 6.1.கருத்தாக்கத் திட்டம்

இந்த கருத்தாக்கத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, ஐந்து பிரதான அபிவிருத்தி சார் பிரிவுகளின் கீழ் இந்த நகரிற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவற்றினை பிரயோசனப்படுத்துவதன் மூலம், இப் பிரதேசத்திற்காக பிரேரணை செய்யபட்டுள்ள தொலைநோக்கு பார்வையினை வெற்றிகரமாக எய்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பிரிவுகளின் கீழ்; பன்முகப்படுத்தப்பட்ட தன்மையிலான குழுமங்களுக்கான உருவாக்க செயற்பாடுகள், திட்டமிடல் பகுதியின் மேற்கு எல்லையில் காணப்படும் கடற்கரை பகுதிகளை அடிப்பைடயாக கொண்டு சுற்றுலாத்துறையை புத்துயிர்ப்பு செய்வதல் போன்ற அபிவிருத்தி சாதகத்தன்மை கொண்ட பகுதிகளுக்கான மேம்படுத்தல் நடவடிக்கைகளையும் இது உள்ளடக்கி காணப்படுகின்றது மற்றும் இவை இந் நகரின் முக்கிய அபிவிருத்தி வாய்ப்புகளாகவும் கருதப்படுகின்றன. அத்தோடு, திட்டமிடல் பிரதேசத்தின் வடக்குப் பகுதியின் இருப்பானது, பொல்கொடை ஏரிக்கு முகங்கொடுத்தவாறு அமைந்து காணப்படும் சாத்தியபாட்டைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு இயைந்த சுற்றுலாத் துறையை உருவாக்க இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. களு கங்கையின் இயற்கை அமைப்புடன் கூடிய வரலாற்று சிறப்பு மிக்க மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரியக் தளங்களை அடிப்படையாகக் கொண்டு, சுற்றுலாத் துறையை இப் பிரதேசத்தில் அபிவிருத்தி அடைய செய்தல் மற்றும் நாகொடை பகுதியினை சுகாதார அபிவிருத்தி வலயமாக அபிவிருத்தி செய்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக, சுற்றுச்சூழலியல் உணர்திறன் வாய்ந்த பகுதிகளின் பாதுகாப்பின் மூலம் அனர்த்தங்களை இழிவளவாக்கல் செய்து அதன் மூலம் சுற்றுப்புற சூழலை வசதியானதாக , சௌகரியமானதாக மற்றும் பாதுகாப்பானதாக அபிவிருத்தி செய்து, இப் பிரதேசத்தில் பல்வேறு விதமான அடர்த்தி மட்டங்களுடன் கூடிய வாழ்வதற்கு உகந்த முறையிலான 04 குடியிருப்புப் பகுதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இதன் மூலம் முன்மொழியப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இந்த 04 குடியிருப்பு குழும (residential clusters) பகுதிகளுக்கும் அவசியப்படும் சேவைகளை வழங்கும் முகமாக, நகரின் மத்தியில் ஒரு பிரதான வணிக நிலையம் (commercial hub), சுற்றுப்புற சூழலில் அமையபெறும் 06 மைய முனையங்கள் (neighborhood nodes), 02 குடியிருப்புசார் மைய முனையங்கள் (residential nodes) மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதற்கான ஒரு மைய முனையம் என்ற அடிப்படையாக கொண்டு சேவை வழங்கு பிரதான மையங்ககளை உருவாக்க இதனால் முன்மொழியப்பட்டுள்ளது. களுத்துறை நகரினை சுற்றுப்புற சூழலில் அமைந்து காணப்படும் முக்கிய இடங்களுக்கான ஒரு மத்திய சேவை வழங்கல் நிலையமாக அபிவிருத்தி செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

பலாத்தோட்ட, கொலனியா, மல்வத்தை, உகல்பந்த, மில்லாகஸ் சந்தி மற்றும் எலமொதர ஆகிய பிரதேசங்களை சுற்றுப்புற சூழலில் அமைந்து காணப்படும் மையங்களாக (neighbourhood nodes) உருவாக்க இந்த திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ளது. மத்திய சந்தி, மொரன்துடுவ ஆகிய இடங்கள் குடியிருப்புப் பகுதிகளாக அபிவிருத்தி செய்யப்பட்ட உள்ளன. நாகொடை சந்தியானது சுகாதார சேவைகளை வழங்குவதற்கான பிரதான மையமாக அடையாளம் காணப்பட்டுள்ள பகுதியாக திகழ்கின்றது. இறுதியில், இந்த திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படும் அனைத்து விதமான மையங்களும் ஒருக்கிணைக்கப்பட்ட முறையான ஒரு வீதி வலையமைப்பின் மூலம் மத்திய வணிகப் பகுதிக்குள் இணைக்கப்படும் எனபது குறிப்படத்தக்க விடயமாகும்.

களு கங்கைக்கு அருகாமையில் அமைந்து காணப்படும் இந்த நகரின் மத்திய பகுதியில் நாளாந்த இடம்பெறுகின்ற குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளைக் கணக்கிலெடுத்து நோக்கும் போது, இந்த பகுதியானது மத்திய வர்த்தக மாவட்டமாக (CBD) அபிவிருத்தி செய்யப்படுவதற்கான அதிகளவான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்பது புலனாகின்றது. இந் நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளை கவனிக்கும் இடத்து, அவை பெரிதும் நிர்வாகம், மதம், வணிகம், மற்றும் போக்குவரத்து ஆகிய நான்கு வகைகளிலான நடவடிக்கைகளை சார்ந்ததாகவே இருக்கின்றன. மேலும், இந்த திட்டத்தின் மூலம் வஸ்கடுவை, கட்டுக்குறுந்த மற்றும் நாக மர சந்தி ஆகிய பிரதான மூன்று உப நகர மையங்களும் களுத்துறை மத்திய வணிகப் பகுதிக்குள் காலி பிரதான வீதியின் மூலம் இணைக்கப்படவுள்ளன.

இந்த திட்டமிடல் பகுதியின் கீழ், பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய மூலோபாயமாக சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி காணப்படுகின்றது. அதனை அடிப்படையாக கொண்டு, மேற்குக் கடற்கரைப் பகுதியை சார்ந்து வியாபித்துள்ள சுற்றுச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு உயர் அடர்த்தியிலான சுற்றுலா ஊக்குவிப்பு வலயத்தை (High– density tourism promotion zone)

அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பொல்கொடை சுற்றுச் சூழல் உணர்திறனைப் பாதுகாப்பதனை அடிப்படையாக கொண்டு, பொல்கொடை உணர்திறன் வலயத்தில் நிலைத்தகு அபிவிருத்தியை ஏற்படுத்தவும் இதன் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. களு கங்கையின் அமைவிடத் தன்மை மற்றும் அதனோடு சார்ந்த இயற்கை கட்டமைப்பு என்பவற்றை கருத்தில் கொண்டு, களுத்துறை போதி மர வளாகம், ரிச்மண்ட் கோட்டைக் கட்டிட வளாகம் (Richmond castle) போன்ற வரலாற்று சிறப்புத் தன்மைமிக்க மற்றும் பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த தலங்கள் அமைந்து காணப்படும் பிரதேசங்களுக்கு இடையேயான தொடர்புகளை மேம்படுத்தி, இப் பிரதேசத்தில் ஒருங்கிணைந்த ஒரு சுற்றுலா ஊக்குவிப்பு வலயத்தை (Tourism promotion zone) அபிவிருத்தி செய்ய இதன் மூலம் உத்தேசிக்கப் பட்டுள்ளது. மேலும், நாகொடை பகுதியின் அமைவிட சாதகத்தன்மையை பயன்படுத்தி அதனை சுகாதார அபிவிருத்தி வலயமாக மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, அடையாளம் காணப்பட்டுள்ள நாகொடை பகுதியில் பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை மென்மேலும் மேம்படுத்தும் நோக்குடன் தற்போது கிடைக்கப்பெறும் வைத்தியசாலை வசதியுடன் தொடர்புபட்ட ஏனைய இதர வசதிகளையும் ஒன்றித்து பொதுமக்களுக்கு முறையானதொரு சுகாதார வசதியை வழங்கும் முகமாகவே இந்த சுகாதார அபிவிருத்தி வலயமத்தில் இடம்பெறப்போகும் பணிகள் முன்மொழியப்பட்டுள்ளன.

மேலும், இந் நகருக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகள், பல பணிகளின் நிமித்தம் நகரத்திற்கு வந்துசெல்லும் நாளாந்த பயணிகள், மற்றும் அப்பகுதியில் வாழும் குடியிருப்பாளர்கள் ஆகியோருக்கு சௌகரியமான வசதிகளை ஏற்படுத்தும் முகமாக, பல்வேறு விதமான வீதி அமைப்புகள் தொடர்பான பிரேரணைகள் மற்றும் அவசியப்படும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை முன்னெடுத்தல் குறித்து இந்த கருத்தாக்கத் திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த கருத்தாக்கத்திட்டமானது, பொருளாதார அபிவிருத்தி மூலோபாய திட்டம் (கட்டுப்பாட்டமைவு இடைநிறுத்தம் – Console caesura), உட்கட்டமைப்பு வசதிகள் சார் அபிவிருத்தி மூலோபாய திட்டம் (ஒருங்கிணைந்த இடைநிறுத்தம் – Conjoined caesura), குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் பரம்பல் மூலோபாய திட்டம் (சௌகரியமான இடைநிறுத்தம் – Cushy caesura) , நிலைத்திருக்கத்தக்க சுற்றுச்சூழல் ரீதியான மூலோபாய திட்டம் (பசுமை இடைநிறுத்தம் – Cyan Caesura), கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவ மூலோபாய திட்டம் போன்ற பல திட்டங்களின் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் இந்த பிரதேசத்தில் காணப்படக் கூடிய பௌதீக, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான அபிவிருத்தியை மேம்படுத்துவதை அடிப்படையாகக்கொண்டு, மேற்கூறிய 5 மூலோபாயங்களின் அடிப்படையில் இத்திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, முன்மொழியப்பட்டுள்ள மேற்கூறியவாறான நான்கு பிரதான மூலோபாய செயல் திட்டங்களையும் செயல்படுத்துவதன் மூலம் இந் நகருக்கு தேவையான அனைத்து விதமான வசதிகளையும் ஏற்படுத்திகொடுப்பது மட்டுமல்லாமல், இந் நகருக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பல பணிகளின் நிமித்தம் நகரத்திற்கு வந்துசெல்லும் நாளாந்த பயணிகள், மற்றும் அப்பகுதியில் வாழும் குடியிருப்பாளர்கள், யாத்ரீகர்களுக்கு அனர்த்தங்களிலிருந்து விடுபட்ட வசதியான சூழலை உறுதி செய்யும் படியாக தோற்றுவிக்கப்பட்ட “தென் மேற்கு கடற்கரையின் பிரதம இடைநிறுத்தம்” என்ற தொலைநோக்கு பார்வையின் அடிப்படையிலான நகரை உருவாக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டம் தொடர்பான மேலதிக விபரங்கள் உரு இலக்கம் 6.1 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

உரு 6.1 : கருத்தாக்க திட்டம்




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

## 6.2.முன்மொழியப்பட்டுள்ள நிலப் பயன்பாட்டு திட்டம்.

களுத்துறை களுத்துறை பிரதேச செயலகப் பகுதிக்காக முன்மொழியப்பட்டுள்ள நிலப் பயன்பாட்டுத் திட்டத்தின் மூலம் களுத்துறை அபிருத்தி திட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட தொலைநோக்குப் பார்வை, இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை என்பவற்றை எதிர்காலத்தில் எய்துவது மட்டுமல்லாமல், இந்த திட்டத்தின் தொலைநோக்குப் பார்வையான "தென் மேற்கு கடற்கரையின் பிரதம இடைநிறுத்தம்" என்ற வகையிலான ஒரு நகரை அபிவிருத்தி செய்வதே இதன் முக்கிய எதிர்பார்ப்பாக அமைகின்றது. இந்த திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், இந்த பகுதியில் காணப்படும் அம்சங்களுக்கு இடையிலான ஒத்த தன்மை பாதுகாக்கப்படுகின்றது.

களுத்துறை களுத்துறை பிரதேச செயலகப் பகுதியின் நகரப்புற சூழல் தன்மையை எடுத்து நோக்குவோமாயின், அது பெரும்பாலும் பல்வேறு விதமான அடர்த்திகளிலான பயன்பாடுகளுடனும் மற்றும் பல்வேறு விதமான கட்டட உயரங்களுடனும் செறிந்து காணப்படுகின்றது. இவ்வாறாக அமையப்பெற்றுள்ள அதன் இடம் சார் கட்டமைபையும் மற்றும் ஈர்ப்புத்தன்மையையும் பேணி பாதுகாக்கும் முகமாக அதன் அபிவிருத்தி பல்வேறு விதமான கோணங்களில் அலசி ஆராயபட்டு முன்னெடுக்கப்படுகின்றது.

மேலும், அடையாளம் காணப்பட்டுள்ள அனைத்து விதமானப் பகுதிகளுக்குமான திறந்த வெளிகளுக்கான மேம்பாடு, வீதி அமைப்புக்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூலம், இயற்கை கண்கவர் காட்சிகள் மற்றும் பன்முகத் தன்மையிலான அழகியல் சார் அம்சங்களை அடிப்படையாக கொண்டு இந்த களுத்துறை நகர வடிவமைப்பு உருவாக்கப்பட முன்மொழியப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே, இப் பகுதிக்காக முன்மொழியப்பட்டுள்ள நில பயன்பாட்டு திட்டமானது இங்கு காணப்படும் பல்வேறுபட்ட கட்டட அடர்த்தி தன்மைகள் மற்றும் வடிவ அமைப்புக்கள் என்பன இயற்கையான சுற்றுச்சூழலுடன் இணைந்தவாறு அறிமுகப்படுத்தவேண்டும் என்பதே இதனால் வலியுறுத்தப்படுகின்றது.

களு கங்கையின் கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும் இக் களுத்துறை நகரமானது, கொழும்பு – வெல்லவாய வீதி (காலி பிரதான வீதி) மற்றும் மருதானை – மாத்தறைக்கு இடையிலான புகையிரதப் பாதை ஆகிய போக்குவரத்து சார் நிலையங்களை விஷேடபடுத்தி அமையப்பெற்றுள்ள ஒரு நகரமாக இந்தத் திட்டத்தில் இனங்காணப்படுகிறது. இது தவிர, சமயம் சார் செயற்பாடுகள், நிர்வாக நடவடிக்கைகள், போக்குவரத்து நடவடிக்கைகள் போன்ற பல்வேறு விதமான செயல்பாடுகளையும் மற்றும் இந்தியப் பெருங்கடலுடன் ஒருங்கிணைந்து காணப்படும் களு கங்கை கழிமுகப் பகுதியை கொண்டிருத்தல் ஆகிய சிறப்பம்சங்களை இதன் மையப் பகுதி உள்ளடக்கியதாக அமைந்து காணப்படுகின்றது. இந்த நகரமானது, வெவ்வேறு விதமான உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் அவற்றுடன் சார்ந்த நிலப் பயன்பாடுகள் போன்றவற்றைகே கொண்டு காணப்படுகின்றது.

களுத்துறை திட்டமிடல் பகுதியில் காணப்படும் நிலப் பயன்பாட்டைப் பற்றி பரிசீலிக்கும்போது, மொத்த நிலப்பரப்பில் பாதியளவான பகுதிகளாக அதாவது கிட்டத்தட்ட 55% மான நிலப்பகுதிகளானவை; களு கங்கையுடன் சார்ந்த பிரதேசங்கள், கடல் நீரேரி மற்றும் ஏனைய நீர் நிலைகள் போன்ற இயற்கை நீர் ஆதாரங்களோடு கலந்ததாக அமையப்பெற்றுள்ள பசுமையான நிலப் பிரதேசங்களாகவே அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்தோடு, அவை இயற்கை கண்கவர் காட்சிகளுடன் கட்டமைந்த ஒரு உயர்ந்த இயற்கை வனாந்தர செழிப்பைக் கொண்டவையாக உள்ளன. மேற்குறிபிட்டவாறான பல்வேறு சாத்திய கூறுகள் காணப்பட்ட போதிலும், அவ்வாறான சாத்தியகூறுகளுக்கு பங்கம் விளைவிக்கும் விதத்திலான பல இடையூறுகள் மற்றும் தடைகள் காணப்படுகின்றன.

இந் நகரை மூலமாகக்கொண்டு பலவித நிர்வாக, சமய மற்றும் கல்வி சார் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. பெரும்பாலும், இந் நகரின் மத்திய பகுதியில் வணிகம் சார் செயற்பாடுகளும் மற்றும் களு கங்கையின் கழிமுகப் பகுதியில் சமயம் சார் செயற்பாடுகளும் அமையப்பெற்றுள்ளன. இருந்தாலும், அந்த நடவடிக்கைகளின் தன்மைகளை மற்றும் அதனோடு தொடர்புபட்ட அம்சங்களை கவனிக்கும்போது, அச் செயற்பாடுகள் முறையாக திட்டமிடப்படாமல் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாக, இந் நகரப் பொருளாதாரத்திற்கு ஒரு நிறைவான பங்களிப்பை செய்ய முடியாத தருவாயிலேயே இவ்வாறான செயற்பாடுகள் உள்ளன.

சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்ந்திழுக்கும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள இயற்கை கடற்கரை பகுதி, கடல் நீரேரி, வரலாற்றுச் சிறப்புத் தன்மைமிக்க மற்றும் பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த

இடங்கள் (களுத்துறை போதி மர வளாகம், ரிச்மண்ட் கோட்டைக் கட்டிட வளாகம் (Richmond castle)) மற்றும் பொல்கொடை எரியை சார்ந்து காணப்படும் சுற்றுச்சூழல் வலயம் போன்ற பகுதிகளுக்கிடையே முறையான ஒரு இடைத் தொடர்பு காணப்படாமை ஒரு குறைபாடாக கருதப்படுகின்றது. களு கங்கையினை சார்ந்துள்ள பகுதிகள் பெரும்பாலும் தட்டையான நிலப்பகுதி மற்றும் குறைந்த உயர மட்டத்தில் அமைந்திருத்தல் போன்ற நிலப்பாங்கினையே கொண்டுள்ளன. இதன் காரணமாக இப் பகுதியில் ஒவ்வொரு வருடமும் அனர்த்தங்களின் பெரும் இன்னல் நிலைகள் உருவாகின்றன. அத்தோடு, 2030 ம் ஆண்டிற்காக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் முன்கணிப்பு செய்யபட்ட தரவுகளின் படி, இந்த பகுதிகளில் மக்கள் தொகை அடர்த்தியானது அதிகரித்து செல்லும் வண்ணமேயுள்ளது.

எனவே, முன்மொழியப்பட்டுள்ள நிலப் பயன்பாட்டு மூலோபாயமானது, “தென்மேற்கு கடற்கரையின் பிரதம இடைநிறுத்தம்" என்ற இந்த திட்டத்தின் தொலைநோக்கு பார்வைக்கான இலக்கை அடையும் முகமாக, இனங்காணப்பட்ட அனைத்து விதமான இடையூறுகளையும் நிவர்த்தி செய்து, கு இந் நகருக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பல பணிகளின் நிமித்தம் நகரத்திற்கு வந்துசெல்லும் நாளாந்த பயணிகள், மற்றும் அப்பகுதியில் வாழும் குடியிருப்பாளர்கள், யாத்ரீகர்களுக்கு உகந்த ஒரு சூழலை உருவாக்குவதற்காக திட்டமிடப்பட்டிருக்கின்றது. அதற்கு அமைவாக, இயற்கைச் சூழலை பாதுகாத்தல் தொடர்பான பிரேரணைகள் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள நிலப் பயன்பாட்டு பரம்பல் முறை சார்ந்த விபரங்கள் என்பன கீழ்வரும் முறையில் கண்டறியப்பட்டுள்ளன.

இந்த திட்டமிடல் பகுதியின் மேற்குப் பகுதியானது, இந்து பெருங்கடற் பரப்போடு சம்மந்தப்பட்டதாகவும் மற்றும் களுத்துறை போதி மர வளாகம் மற்றும் களு கங்கை கழிமுகப் பகுதிகளோடு இணைந்ததாகவும் அமைந்து காணப்படுகின்றது. இவ்வாறான அமைவிடமானது, பெருமளவிலான சுற்றுலாப் பயணிகளை இங்கு ஈர்ப்பதற்கான ஒரு பிரதான அம்சமாகக் காணப்படுகின்றது. இந் நகர மத்திய பகுதியில் அமைந்து காணப்படும் வணிகப் பகுதியுடனான தொடர்புகளை சீராக பேணி வளர்ப்பதன் மூலம், இந்தப் பகுதியை ஒரு சமயம் சார் நடவடிக்கைகளுடன் கூடிய ஒரு குழுமமாக அபிவிருத்தி செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

உரு இலக்கம் – 6.2.இல் காட்டியுள்ள குறுக்குவெட்டுத் தேற்றத்தின் படி, இப் பகுதிக்கு வருகைதரும் ஒரு பயணி காலிடோ கடற்கரை பகுதியில் தனது பயணத்தை தொடங்கினால், அவர் அதனைத் தொடர்ந்து இயற்கையான நதியையும் அருகிலுள்ள போதி மரத்தையும் முறையே பார்க்க காணக்கூடியதாக இருக்கும். அத்தோடு, அந்த இடத்திலிருந்தவாறு 300 மீட்டர் சுற்றளவில்அமைந்து காணப்படும் அடர்த்தி அபிவிருத்தி வலயத்தை காணலாம். இப் பகுதியில் உள்ள கட்டிடங்களின் உயர மட்டங்கள் களுத்துறை போதி மரத்தின் உயரத்தை விட குறைவாகவே பேணப்பட்டு வருகின்றன. இந்த வலயத்தை தொடர்ந்து, மத்திய வணிக அபிவிருத்தி வலயம் I, ஈரநில பாதுகாப்பு வலயம், அதிக அடர்த்தி கொண்ட குடியிருப்புக் குழுமம் ஆகியன முறையே காணப்படுகின்றன. ஈரநில பாதுகாப்பு வலயம் மற்றும் அதனை தொடர்ந்து அதிக அடர்த்தி கொண்ட குடியிருப்பு குழுமம் மற்றும் அதனை தொடர்ந்து உயர் அடர்த்தியான சுகாதார வசதிகளது குழுமம் ஆகியவற்றை முறையே இனங்காணலாம். இவ்வாறாக, இந்த பகுதியினை வெவ்வேறு விதமான அடர்த்திகள் கொண்ட பல்வேறு செயல்பாட்டு வலயங்களாக கீழ்க்கண்டவாறு அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

உரு 6.2 : குறுக்குவெட்டுத் தேற்றம் 1 (A– A )




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

பல்வகைப்படுத்தப்பட்ட நகர்ப்புற நிலப்பயன்பாட்டு முறைகளை உருவாக்குவதற்கும் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்கும் பிரகாரம், வலய மண்டலத் திட்ட காரணி (Zoning Factor) மற்றும் தொகுதி முழுத் தழுவு அளவு (Plot coverage) போன்றவாறான விதிமுறைகள் மற்றும் வரைமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு விதமான குடியிருப்பு அடர்த்தியைக் கொண்ட பகுதிகளை உருவாக்கும் அடிப்படையாக கொண்டு இவ்வாறான விதிமுறைகள் மற்றும் வரைமுறைகள் அமல்படுத்தபடவுள்ளன. இந்த திட்டத்தின் மேற்கு பகுதி எல்லையானது, கரையோரப் பிரதேசமாக காணப்படுவதன் அனுகூலத்தைப் பயன்படுத்தி நோக்குமிடத்து, டெங்ஜெரின் கடற்கரை விடுதி தொடக்கம் (Tangerine Beach Hotel) காலி பிரதான வீதி நோக்கி செல்வதற்கு இடைபட்ட பிரதேசமானது உயர் அடர்த்தி சுற்றுலா வலயம் I என அடையாளம் காணப்பட்டுள்ளது மற்றும் அதனை தொடர்ந்து காணப்படும் பகுதிகள் வர்த்தக வலயம் I என அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து அமைந்து காணப்படும் வலயத்தின் கட்டிடங்களின் உயரங்களை மட்டுப்படுத்துவதன் மூலம், களு கங்கையின் பரிசேதன இட ஒதுக்கீட்டை மக்கள் பார்வைக்கு தென்படும் விதமாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. களு கங்கையின் நீர் மட்டமானது குறிப்பிட்ட ஒரு சில காலகட்டங்களில் பெருக்கெடுத்து வழிவதைத் கருத்தில் கொண்டு, அதற்கு அடுத்தபடியாக அமைந்து காணப்படும் பகுதிகள் குறைந்த குடியிருப்பு அடர்த்தியைக் கொண்ட வலயமாக பேணப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வலயம் தொடர்பான விபரங்களை உரு இலக்கம் – 6.3 இல் காட்டியுள்ள குறுக்குவெட்டுத் தேற்றத்தின் படி அடையாளம் காணலாம்.

உரு 6.3 : குறுக்குவெட்டுத் தேற்றம் 2 (B– B)




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

இந் நகரின் செயற்பாடுகளை நோக்குமிடத்து, குறிப்பாக பஸ்துன்ரட்ட (Pasdunrata) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, தாதியர் பயிற்சி கல்லூரி, காவலர் பயிற்சி பள்ளி, திறந்த பல்கலைக்கழகத்தின் மாவட்டக் கிளை, கட்டுக்குறுந்த விமான நிலையம் போன்ற இப் பகுதியில் காணப்படும் மாவட்ட மட்டத்திலான பல்வேறு நிறுவனங்கள் சார் நடவடிக்கைகள் மக்களை கவர்ந்திழுக்கும் அம்சங்களாக உள்ளன என்பது குறிப்படத்தக்கது. இவற்றிற்கு மேலதிகமாக, மோட்டார் கார் பந்தையப் பாதை இங்கு அமைந்திருப்பது

மிகவும் பிரபலமான ஒரு ஈர்ப்பு விடயமாகவும் மற்றும் இந்த பகுதிக்கான ஒரு வாய்ப்பாகவும் இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, கட்டுக்குறுந்த உள்நாட்டு விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகள் உயர் குடியிருப்பு அடர்த்தியைக் கொண்ட உயரக் கட்டுப்பாடுடைய குடியிருப்பு வலயமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. உரு இலக்கம் – 6.4 இல் காட்டியுள்ள குறுக்குவெட்டுத் தேற்றத்தின் படி, இப் பகுதிக்கு வருகைதரும் ஒரு பயணி, முதலில் களு கங்கையை காணலாம் அதனைத் தொடர்ந்து இரண்டாவதாக நடுத்தர அடர்த்தி கொண்ட பொருளாதார வலயம் I , அதன் பின்பு உயர் குடியிருப்பு அடர்த்தியைக் கொண்ட உயரக் கட்டுப்பாடுடைய குடியிருப்பு வலயத்தையும் அடையாளம் காணமுடியும்.

உரு 6.4 : குறுக்குவெட்டுத் தேற்றம் 2 (C– C)




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

மொரன்துடுவ பிரதேசத்தை குடியிருப்பு சார் முனையமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மொரன்துடுவ பிரதேசமானது, களுத்துறை – பண்டாரகம வீதி ஊடாக அணுகக் கூடியதாக உள்ளது. அத்தோடு, தெற்கு அதிவேக கடுகதிப் பாதையில் அமைந்து காணப்படும் களனிகம இடமாற்றத்திலிருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வாறான உயர் சாத்திய கூறுகள் அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

மொரன்துடுவ குடியிருப்பு சார் மையத்தின் அபிவிருத்தியை நோக்குமிடத்து, இப் பகுதிக்கு வருகைதரும் ஒரு பயணிக்கு முதலில் சுற்றுச்சூழலுக்கு பாதுகாக்கப்பட்ட உயர் அடர்த்தி சுற்றுலாக் குழுமம் II க்கான வலயம் மற்றும் அதனை தொடர்ந்து மிதமான நிலையான அடர்த்தியுடைய வணிக வலயம் I உம், தாழ் நில பாதுகாப்பு வலயமும், மிதமான அடர்த்தி குடியிருப்பு குழுமம், குறைந்த அடர்த்தி கொண்ட குடியிருப்புத் குழுமம் மற்றும் இறுதியாக, சுற்றுசூழல் நட்புறவுடனான (Eco– friednly) பொல்கொடை பகுதியில் குறைந்த அடர்த்தி சுற்றுலா வலயம் என்பவற்றை முறையே அவதானிக்கலாம் இந்த வலயம் தொடர்பான விபரங்களை உரு இலக்கம் – 6.5 இல் காட்டியுள்ள குறுக்குவெட்டுத் தேற்றத்தின் படி அடையாளம் காணலாம்.

உரு 6.5 : குறுக்குவெட்டுத் தோற்றம் 2 (D– D)




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

மேலும், இந்த திட்டமிடல் பகுதியின் அடிப்படை நிலப் பயன்பாட்டுச் சூழல் மற்றும் நகர்ப்புற வடிவமைப்பு நோக்கு என்பன தொடர்பாக வரைபட இலக்கம் – 6.1 இல் கொடுக்கப்பட்டுள்ளவாறு இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், தென் மேற்கு கடற்கரையின் "பிரதம இடைநிறுத்தம்" என்ற நகரை அபிவிருத்தி செய்வது என்ற தொலைநோக்கு பார்வையின் இலக்கினை அடையமுடியும். நகரமைப்புத் திட்ட வடிவமைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி மூலோபாயங்களை பிரதிபலிக்கும் முகமாக முன்மொழியப்பட்டுள்ள நிலப் பயன்பாட்டு திட்டத்தின் மூலம் அப்பகுதியில் பல்வேறு விதமான செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.




வரைபடம் 6.1 : முன்மொழியப்பட்ட நில பயன்பாட்டு திட்டம் ( 2030)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

## 6.3.உள்கட்டமைப்பு அபிவிருத்திக்கான முலோபாயச் செயல் திட்டம்

இப் பகுதியில் வசித்துவரும் குடியிருப்பார்களுக்கும் மற்றும் திட்டமிடல் பகுதிக்கு நாளாந்த பணிகளின் நிமித்தம் வந்துசெல்லும் மக்கள் தொகையினருக்கும் தேவையான அனைத்து விதமான பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் விபரம் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

### 6.3.1 சேவை முகாமைத்துவத் திட்டம்

இந்த திட்டமிடல் பகுதியில் காணப்படும் பௌதிக மற்றும் சமூக சேவை வசதிகள் குறித்து பரிசீலிக்கும்போது, சுகாதார வசதிகள், வைத்தியசாலை வசதிகள், கல்வி மற்றும் பாடசாலை வசதிகள் என்பவற்றின் கிடைப்பனவு தொடர்பாக கண்டறிவது மிகவும் முக்கியமானதொரு விடயமாக கருதப்படுகின்றது.

#### 6.3.1.1 சுகாதார வசதிகள்

களுத்துறை பிரதேசத்தின் தற்போதைய நிலைமையின் படி, உயர் தரத்திலான சுகாதார வசதிகள் அதிகமாகக் கிடைக்கபெறுகின்றன என்பது குறிப்படத்தக்கது. களுத்துறை ஆதார வைத்தியசாலையானது, களுத்துறை மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலை ஆகும். தற்போதைய தரவுகளின் படி, சுமார் 1,900 மக்கள் இந்த வைத்தியசாலையிலிருந்து அன்றாடம் சேவைகளைப் பெற்றுவருகின்றனர். இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள், பார்வையாளர்கள், மருத்துவ சிகிச்சைக்காக வந்து செல்லும் நபர்களின் மொத்த எண்ணிக்கையானது நாளொன்றுக்கு சுமார் 5,767 நபர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் சில மருத்துவ சேவைகள் மற்றும் துணை மருத்துவ சேவைகள் போன்றவை சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தர் அலுவலகத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. இப் பகுதியில், இரண்டு தனியார் வைத்தியசாலைகள் (Philip, Family Care) உள்ளன. மேலும், களுத்துறை மாவட்ட வைத்தியசாலையின் கீழ் இயங்கும் இரண்டு மருந்தகங்கள் மற்றும் ஐந்து பிற மருத்துவ மையங்களும் இந்த பகுதியில் செயல்பாட்டில் உள்ளன. மேலும், இப் பகுதியை மையப்படுத்தியே தாதியர் பயிற்சிக் கல்லூரியும் அமைந்து காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.இந்த வைத்தியசாலையின் முக்கிய மருத்துவ வசதி மையங்களில் ஒன்றாக விளக்கும் குழந்தை பராமரிப்பு மற்றும் மகப்பேறு வைத்தியசாலைக்கான (400 படுக்கைகள்) கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அத்தோடு முன்மொழியப்பட்டுள்ள செயல் திட்டங்களுக்கு மத்தியில் காது, முக்கு, தொண்டை சம்மந்தப்பட்ட வைத்தியசாலையின் (ENT hospital) சேவையானது பிரதான வசதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறாக, தற்போது திட்டமிடல் பகுதியில் கிடைக்கும் மருத்துவ வசதிகளானவை, தற்போதைய மக்கள் தொகையினர் மற்றும் எதிர்காலத்தில் அதிகரித்து வரும் மக்கள் தொகையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளது.

திட்டமிடல் பகுதியில் உள்ள வைத்தியசாலைகள் பற்றிய விபரங்கள் மற்றும் அதிகபட்சமாக சுமார் 500 மீட்டர் என்ற அடிப்படையாக கொண்டு அமைந்த நடைதிறன் தூரம் (walkability distance) போன்ற விடயங்களை கருத்தில் கொண்டு, திட்டமிடல் பகுதிக்கு தற்போதைய சுகாதார சேவைகள் போதுமானதாக இருக்கின்றதா என்பது தொடர்பான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு, சுகாதார சேவைகளுக்கான வசதிகளும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளதா என்பதை ஆராய்ந்து, தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடல் பகுதியில் வசதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்பதும் இதனுடாக கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்கள் பின்னிணைப்பு – 13 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே, இந் நகருக்கு தேவையான சுகாதார சேவைகளுக்கான நிறுவனங்களை மேலும் அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது. ஆனால் தற்போதைய சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான அவசியத் தன்மை இருக்கின்றது.

#### 6.3.1.2.கல்வி வசதிகள்

களுத்துறை திட்டமிடல் பகுதியில் காணப்படும் கல்வி வசதிகள் குறித்து அவதானிப்பது முக்கியமானதாக உள்ளது. அதற்கமைவாக, களுத்துறை கல்வி வலயத்தின் கீழ் காணப்படும் பாடசாலைகள் தொடர்பாக விபரங்கள் பின்வருமாறு இனங்காணப்பட்டுள்ளன. 1 AB – 08, 1C – 06, T2 (6-11) – 17, T3 – 03. இவற்றோடு சேர்த்து 3 விஷேட தேவைக்குட்பட்ட சிறுவர்களுக்கான பாடசாலைகளும் இத் திட்டமிடல் பகுதியில் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு; திஸ்ஸ மகாவித்தியாலயம், டெல்துவ மகாவித்தியாலயம் மற்றும் வேலபுர மத்திய வித்தியாலயம் என்பனவாகும்.

இந்த திட்டமிடல் பகுதியில் காணப்படும் கல்வி வசதிகள் குறித்து பரிசீலிக்கும் போது, குறிப்பாக இந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கான அதிகபட்ச நடைதிறன் அளவு (walkability distance) 500 மீட்டர் என்ற அடிப்படை அளவு தூரத்தை கணக்கில் கொண்டு இது சம்மந்தமான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மற்றும் ஒட்டுமொத்த திட்டமிடல் பகுதியின் கல்வித் தேவைகளை நிறைவேற்றும் வகையில் கல்வி வசதிகள் போதுமான அளவில் உள்ளன என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இந் நகரில் தற்போது காணப்படும் கல்வி வசதிகளானவை, தற்போதைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும், எதிர்காலத் தேவைகளுக்கு போதுமானதாயிருக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளது.

### 6.3.2.வீதிகள் மற்றும் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம்.

களுத்துறை நகரமானது, களுத்துறை மாவட்டத்தின் ஒரு போக்குவரத்து மையமாக முக்கியமானதொரு சேவையை வழங்குகின்றது. விசேடமாக களுத்துறை பிரதேச செயலகப் பகுதிக்குள் மட்டுமன்றி, மத்துகமை மற்றும் வலல்விட்ட பிரதேசச் செயலகப் பிரிவுகளில் இருந்தும் கொழும்பு நோக்கி பயணிக்கும் முகமாக பொதுப் போக்குவரத்து வசதிகளை பயன்படுத்தும் பயணிகள் பெரும்பாலும் களுத்துறை நகருக்குச் செல்ல வேண்டியுள்ளது. களுத்துறை நகரின் மூலம் பயணிகள் பிரயாணிப்பதற்கான முக்கிய காரணியாக கொழும்பு– காலி வெல்லவாய வீதி ( A2) மற்றும் மருதானை முதல் மாத்தறை வரையிலான புகையிரதம் போக்குவரத்து வசதிகள் கிடைப்பதே அமைகிறது. களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் புகையிரத நிலையத்தை கடுகதி புகையிரத தொழிற்பாட்டு நிலையமாக செயற்படுவதன் காரணமாக களுத்துறை நகருக்கு பயணிகளின் ஈர்ப்புத் தன்மை குறிப்பிட்டளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை தெற்கு புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் களுத்துறை பேருந்து நிலையம் அமைந்து காணப்படுகின்றமையினால், மக்கள் தமது போக்குவரத்து சார் வசதிகளை நிறைவேற்றிக் கொள்ள அது வசதியாக இது மாறியுள்ளது. தற்போது இந்த இடத்தில் போக்குவரத்து சார்ந்த அபிவிருத்தி நடைபெறுகிறது.

இந்த திட்டத்தின் கீழ், களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள வீதிகளின் அபிவிருத்தியின் ஊடாக உயர் அடர்த்தி குடியிருப்பு வலயங்களுக்கு போக்குவரத்து வசதிகளை மேம்படுத்திக் கொடுக்க இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. இது களுத்துறை நகரத்திற்கும் மற்றும் அடையாளம் காணப்பட்டுள்ள குடியிருப்பு வலயங்களுக்கும் இடையிலான நேரடித் தொடர்புகளை மேலும் மேம்படுத்தவும் உதவும். முன்மொழியப்பட்டுள்ள போக்குவரத்து திட்டத்தின் கீழ், நகர் பகுதிக்குள் பாதசாரிகள் நடைபாதைகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பான நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் முதலாம் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளபடி, நகரத்திற்கான வந்துசெல்லும் நாளாந்த பயணிகளின் தொகையானது 80,000 க்கும் அதிகமாக இருக்கும். இவர்களில் அதிக சதவீதத்தினர் நகர மையத்தின் கடிகாரக் கோபுரம் அமைந்து காணப்படும் இடப் பகுதி மற்றும் காலி பிரதான வீதியில் மூன்று வழி சந்தி வரையிலான பகுதியில் இருந்து தங்களது போக்குவரத்து, நிர்வாக மற்றும் வணிகத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் நகரத்திற்கு வருகின்றனர்.

2030 ஆண்டிற்காக முன்மொழியப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நகரின் மத்திய பகுதியில் அமைந்து காணப்படும் வீதிகளின் பாதசாரிகள் நடைபாதைகளானவை, நாளாந்த மக்கள் தொகைக்கு ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கபடுகின்றது. இந்த போக்குவரத்துத் திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலமாக கீழ்க்கண்டவாறான நோக்கங்களை அடைய கூடியதாய் இருக்கும்.

1. நகரின் மத்திய பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள சில வீதிப் பிரிவுகளை (சுமார் 2.3 கிலோ மீட்டர்) பாதசாரிகளுக்கு வசதியான முறையிலும் மற்றும் பாதுகாப்பான முறையிலும் அபிவிருத்தி செய்யல்.
2. 2030 ஆம் ஆண்டில் போக்குவரத்து வசதிகளுடன் மற்றும் நகர்புறச் சேவைகளுடன் கூடிய 02 குடியிருப்புத் தொகுதி முனையங்கள் (Residential Nodes), 01 சுகாதார சேவை குழுமம் மற்றும் 06 குடியிருப்புசார் சுற்றுப்புற சூழலில் அமைந்து காணப்படும் குழுமங்களுக்கான (Neighborhood Nodes) மற்றும் தேவையான நகர சேவையும் (Urban service) மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்க கூடிய வெவ்வேறான அடர்த்தியை உடைய 04 குடியிருப்பு வலயங்கள் 2030 ஆம் ஆண்டளவில் உருவாக்குதல்.

இந்த நோக்கங்களை அடைவதற்கு, ஒரு போக்குவரத்து திட்டத்தை செயல்படுத்த வேண்டிய தேவைப்பாடு உள்ளது. இந்த போக்குவரத்து திட்டத்தில், குடியிருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கண்டறியப்பட்டுள்ள குடியிருப்புத் தொகுதிகளுக்கும், களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் நகர்ப்புற மையங்களின் அபிவிருத்திக்கும் இடையே உள்ள தொடர்பை மேம்படுத்தும் வகையில், பிராந்திய அளவில் காணப்படும் பிற நகரங்களுடன் தொடர்புகளை அபிவிருத்தி செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள போக்குவரத்துத் திட்டமானது இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

1. வீதி அபிவிருத்தித் திட்டம்

2. போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம்

## 1) வீதி அபிவிருத்தித் திட்டம்

2019 – 2030 ற்கு இடைப்பட்டக் காலப்பகுதிற்கான, களுத்துறை அபிவிருத்தித் திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள வீதி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் களுத்துறை திட்டமிடல் பகுதியின் நிலவமைப்பைக் (Saptial Form) கட்டியெழுப்ப முடியும். இதன் பிரகாரம், இடது புறத்திலிருந்து இந்திய பெருங்கடல் மற்றும் களுத்துறை பலதோட்ட வீதி ( கங்கபந்த வீதி) மற்றும் அங்கிருந்து தெற்கு பகுதியில் நாகொடை சந்தி வரை உள்ள பகுதி, அபிவிருத்தி ஊக்குவிப்பு வலயமாக (Development promotional zone) அபிவிருத்தி செய்யப்படும் என கண்டறியப்பட்டுள்ளது.

அந்த இடத்திலிருந்து, காலி பிரதான வீதி,களுத்துறை தொடக்கம் பண்டாரகம வரையிலான வீதி, களுத்துறை – ஹொரண வீதி, களுத்துறை – மத்துகமை வீதி என்பன அபிவிருத்தி வழித்தடமாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம், வீதி அமைப்பை அபிவிருத்தி செய்யும் முகமாக, அபிவிருத்தி ஊக்குவிப்பு வலயத்தை அபிவிருத்தி செய்தல் (Development corridors) அந்த வகையில்,அதி கூடிய அடர்த்தியுடைய வணிக வலயம் மற்றும் பிரதான அபிவிருத்தி வழித்தடங்கள் மேம்படுத்தி, களுத்துறை மத்திய பிரதேச குடியிருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கண்டறியப்பட்ட வலயங்களுக்கு இடையே உள்ள தொடர்பை மேம்படுத்தும் வகையில்வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பின்வருமாறு 03 முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

I. அடையாளம் காணப்பட்டுள்ள வீதிகளை அகலப்படுத்துதல்.

இதன் கீழ், அடையாளம் காணப்பட்ட வீதிகளில் வாகன தரிப்பிட வசதியை மேம்படுத்துதல் மற்றும் சேவை வழங்க கூடிய பாதசாரிகள் நடை பாதைகளை அறிமுகம் செய்து வைத்தல்.

II. அடையாளம் காணப்பட்டுள்ள வீதிகளுக்கு இடையேயான தொடர்பை ஏற்படுத்துதல்

இடத் தொடரியல் (Space syntax) மூலம் பகுப்பாய்வு செய்த பின்னர் கண்டறியப்பட்ட வீதிகளுக்கு இடையே தொடர்பை ஏற்படுத்துதல். (தற்போது இணைக்கப்படாமல் உள்ள வீதிகள்) இதன்

மூலம், இடம்சார் கட்டமைப்பை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மூலோபாயமானது, அபிவிருத்தி ஊக்குவிப்பு வலயத்தின் அபிவிருத்திக்காக கடைபிடிக்கப்படுகிறது.

III. அடையாளம் காணப்பட்டுள்ள சில வீதிகளில் பாதசாரிகள் நடைபாதைகள் ஏற்படுத்துதல்

வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், அடையாளம் காணப்பட்டுள்ள சில வீதிகளில் பாதசாரிகள் நடைபாதைகள் அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள வீதிகள் செயற்திட்ட அமுலாக்குதல் மூலோபாய திட்டத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளன.

2) போக்குவரத்து அபிவிருத்தி திட்டம்

களுத்துறை நகரத்திற்கும் குடியிருப்பு முனையங்களுக்கு (Residential Node) இடையிலான தொடர்பினை அபிவிருத்தி செய்ய இதனூடாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பிரதானமாக இரண்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

i. பயணிகளுகான பேருந்து முனையங்களை (Passenger Bus Terminals) அபிவிருத்தி செய்தல்
ii. புதிய பயணிகள் வீதிகளை (Passenger Roads) அறிமுகப்படுத்துதல்

குடியிருப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள குடியிருப்பு வலயங்களுக்கும் மற்றும் களுத்துறை நகரத்திற்கும் இடையேயான தொடர்பினை அபிவிருத்தி செய்து, குடியிருப்பு வலயங்களிலே மேற்கூறப்பட்டவாறான பயணிகள் பேரூந்து முனையங்களை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள திட்டமிடல் பகுதியானது, பேருந்து நிலைய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புப் பகுதிகளில் உள்ள அடையாளம் காணப்பட்டுள்ள வீதி சந்திப்புகளில் பேருந்து முனையங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேவைப்பாடு கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், தற்போது காணப்படும் பேருந்து வழிப்பாதைகளுடன், சில புதிய பேருந்து வழிப்பாதைகளும் கண்டறியப்பட்டு, அதன் மூலமாக இந்தத் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள குடியிருப்புப் பகுதிகளிலிருந்து (களுத்துறை தெற்கு) களுத்துறை நகருக்கு செல்லும் இணைப்பானது பலமான முறையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இவ்வாறு கண்டறியப்பட்ட புதிய பேருந்து வழிப்பாதைகளில் பின்வருவன அடங்கும்;

– களுத்துறை மற்றும் நீபோட (Neboda) இற்கு இடையிலான ஹில்ஸ் தெரு வழியாக செயபடுத்தப்படவுள்ள பேருந்து சேவை. ( தற்போது காணப்படும் களுத்துறை நீபோட பேருந்து சேவையைத் தவிர)
– துவ ஆலய வீதி வழியாக களுத்துறை நகருக்கு செயபடுத்தப்படவுள்ள பேருந்து சேவை. (களுத்துறை நகரில் இருந்து துவ ஆலய வீதி சந்திப்பு வரை)
– களுத்துறை தொடக்கம் முன்மொழியப்பட்டுள்ள பெல்பொல இடைமாற்றம் வரையில் செயபடுத்தப்படவுள்ள பேருந்து சேவை

## 6.3.3.நீர் வழங்கல் திட்டம்

களுத்துறை பிரதேச செயலகப் பிரதேசத்திற்கு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை முற்கணிப்பின் எண்ணிக்கை 196,556 ஆகும். இந்த எண்ணிக்கையானது இந்த திட்டம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மக்கள் தொகை முற்கணிப்பிற்கு கிட்டத்தட்ட ஒத்ததாகும். (நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இச் செயல் திட்டம் அமுலாக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை முற்கணிப்பு 199,000 என்பதேயாகும்)

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் தரவுகளின் படி, 2030 ஆம் ஆண்டளவில் களுத்துறை பிரதேச செயலகப் பகுதியில் 93% மான மக்களுக்கு நீர் வழங்கும் திறன் உள்ளது. மீதமுள்ள 7% மான மக்கள் குழாய் கிணறுகள், கிணறுகள் போன்ற பிற ஆதாரங்களுடன் அவர்களுக்கு தேவையான நீர்

பாவனையை சமாளிக்க முடியும். வரைபட இலக்கம் 6.2 இல் கண்டறியப்பட்டுள்ள படி, திட்டமிடல் பகுதிக்கு தண்ணீர் பெறுவதற்கு வெவ்வேறு விதமான நீர் ஆதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தோடு, இந்த அபிவிருத்தி திட்டத்தின் மூலம் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள குடியிருப்பு வலயங்களுக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் மூலம் நீர் வழங்கும் திறன் உள்ளது.

களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தில் பிரதான குடிநீர் ஆதாரமாக களு கங்கையானது விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இருந்தாலும், வறண்ட பருவத்தில் உப்பு நீர் கலப்பதன் காரணத்தினால் (தை மாதம், ஆவணி மாதம், புரட்டாதி மாதம்) குழாய் மூலம் நீரை பயன்படுத்தும் மக்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டுகின்றனர். இந்த சிக்கலானது களுத்துறை பிரதேசத்தில் குடிநீருடன் இணைந்ததான பிரதான பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இலக்கு 02 இன் பலவீனங்கள் பற்றிய விளக்க பகுப்பாய்வின் கீழ் இந்த விடயம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கு தீர்வாக, நில மேற்பரப்பு நீரோட்டத்தை நோக்கி உப்பு நீர் பாய்வதைத் தடுக்கும் வகையில், களுத்துறை மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பிரேரணை ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. அதனூடாக, களுத்துறை பாலத்திற்கு அருகாமையில் தடுப்பு சுவர்களை நிர்மாணிக்க தீர்மானித்துள்ளது. தற்போது இதற்கான சாத்தியகூறு பற்றிய ஆய்வு (Feasibility Study) மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. களுத்துறை நகரில் வசிப்பவர்களுக்கு சௌகரிய தன்மையையும் மற்றும் வசதியையும் ஏற்படுத்துவதற்கான ஒரு முக்கியமான திட்டமாக இது கருதப்படுகின்றது. இந்த திட்டம் பற்றிய விபரங்கள் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.




வரைபடம் 6.2 : திட்டமிடல் பிரதேசத்தின் நீரோட்ட அமைப்பு. (2018)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

## 6.3.4.மின் வழங்கல் திட்டம்

களுத்துறை பிரதேச செயலகப் பிரதேசத்திற்கான மின்சார விநியோகமானது, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார கம்பனி தனியார் நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களின் மூலம் வழங்கப்படுகின்றது. உரு இலக்கம் 6.6 காண்பிக்கப்பட்டுள்ள படி, களுத்துறை நகரப் பிரதேசத்திற்கான மின்வழங்கல் இலங்கை மின்சார கம்பனி தனியார் நிறுவனம் மூலமும் மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கான மின்வழங்கல் இலங்கை மின்சார சபையின் மூலமும் வழங்கப்படுகின்றது. களுத்துறை பிரதேச செயலக பகுதியில் 100% மான மின்சார விநியோகம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த இரண்டு நிறுவனங்களும், 2030 ஆம் ஆண்டிற்கென முற்கணிப்பு செய்யப்பட்டுள்ள 199,000 என்ற அடிப்படையிலான மக்கள் தொகையினருக்கு மின் வழங்கலை அளிக்கும் திறனை பெற்றுள்ளன.

உரு 6.6 : இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார கம்பனி தனியார் நிறுவனம் ஆகியவற்றின் மின்சார விநியோக நிலையங்கள்




மூலம் : இலங்கை மின்சார சபை

## 6.3.5.கழிவுநீர் முகாமைத்துவத் திட்டம்

களுத்துறை நகரப் பகுதியின் துரித அபிவிருத்திப் போக்கின் காரணமாக, இப் பிரதேசத்திற்கான நில உட்பிரிவுகள் மிக கூடுதலாக அதிகரிக்கப்படும் என கருதப்படுகின்றது. மேலும், களுத்துறை வடக்கு பிராந்தியம் மற்றும் தெற்கு பிரதேசங்களில் காணப்படும் அதிக கட்டட அடர்த்தி காரணமாக, கழிவுநீர் தொட்டியினைப் பயன்படுத்தி அதன் மூலம் மலசலக் கழிவுகளை வெளியேற்று முறைமை இனிமேலும் அந்த பகுதியில் சுகாதாரமான ஒரு செயற்பாடாக இருக்காது. அத்தோடு, கழிவு நீர் வெளியேற்றத்திற்காக கழிவுநீர் தொட்டியினைப் பயன்படுத்துவதும் நடைமுறையில் சாத்தியமற்றது. எனவே வரைபட இலக்கம் – 6.3 இல் காட்டியுள்ளவாறு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையானது , களுத்துறை நகரப் பிரதேசத்திற்கான மற்றும் ஏனைய பிரதேச சபை பிரிவுக்குள் தெரிவுசெய்யப்பட்ட கிராம சேவக பிரிவுகளுக்காக கழிவுநீர் முகாமைத்துவ திட்ட முன்மொழிவைக் கொண்டுள்ளது. இவ்வாறான கழிவுநீர் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக கண்டறியப்பட்ட கிராம சேவக பிரிவுகளது விபரங்கள் பின்வருமாறு,

1. களுத்துறை வடக்கு கி.சே பிரிவு
2. தேசஷ்த்ர ( Deshastra) கி.சே பிரிவு
3. தேசஷ்த்ர மேற்கு (Deshastra West ) கி.சே பிரிவு
4. வித்யாஸர (Vidyasara) கி.சே பிரிவு
5. தொட்டுபொல கி.சே பிரிவு
6. களுத்துறை தெற்கு கி.சே பிரிவு
7. களுத்துறை தெற்கு கி.சே பிரிவு
8. வெலபுர கி.சே பிரிவு
9. மஹாவத்த கி.சே பிரிவு
10. குடா ஹினேட்டியன்கல கி.சே பிரிவு
11. குருந்துவத்த கி.சே பிரிவு
12. அக்கரகொட (Akkaragoda) கி.சே பிரிவு
13. நாகொட மேற்கு கி.சே பிரிவு
14. வெத்துமங்கட கி.சே பிரிவு
15. களப்புவ (Kalapuwa) கி.சே பிரிவு
16. கட்டுக்குருந்த கி.சே பிரிவு
17. போஹத்தறமுல்ல மேற்கு கி.சே பிரிவு
18. போஹத்தறமுல்ல கிழக்கு கி.சே பிரிவு
19. பொத்துபிட்டிய வடக்கு கி.சே பிரிவு
20. பொத்துபிட்டிய தெற்கு கி.சே பிரிவு
21. பொத்துபிட்டிய மேற்கு கி.சே பிரிவு
22. பொத்துபிட்டிய நடுப்பகுதி கி.சே பிரிவு
23. குடா ஹினேட்டியன்கல கி.சே பிரிவு
24. குடா ஹினேட்டியன்கல கி.சே பிரிவு
25. குடா ஹினேட்டியன்கல கி.சே பிரிவு
26. குடா ஹினேட்டியன்கல கி.சே பிரிவு
27. மஹா வஸ்கடுவ தெற்கு கி.சே பிரிவு
28. தெடியாவல (Dediyawela) கி.சே பிரிவு
29. மஹா வஸ்கடுவ தெற்கு கி.சே பிரிவு
30. விலேகொட வடக்கு கி.சே பிரிவு
31. மல்வத்தை கி.சே பிரிவு
32. போட்னிக் வத்தை ( Botnicwaththa) கி.சே பிரிவு
33. ஜாவத்தை கி.சே பிரிவு
34. எதனமண்டல கி.சே பிரிவு
35. பலாதொட்டை கி.சே பிரிவு
36. விலேகொட தெற்கு கி.சே பிரிவு
37. இமுக்வத்தை கி.சே பிரிவு
38. எட்டவில கி.சே பிரிவு
39. விலேகொட தெற்கு கி.சே பிரிவு

40. இலுக்வத்தை கி.சே பிரிவு
41. அட்டவில கி.சே பிரிவு
42. வத்தமுல்ல கி.சே பிரிவு
43. மஹா ஹினேட்டியன்கல கி.சே பிரிவு
44. அலுபோகஹாலந்த கி.சே பிரிவு
45. கஜுதுவவத்த கி.சே பிரிவு
46. களமுல்ல வடக்கு கி.சே பிரிவு
47. களமுல்ல கிழக்கு கி.சே பிரிவு
48. களமுல்ல தெற்கு கி.சே பிரிவு
49. எதனமண்டல கிழக்கு கி.சே பிரிவு
50. எதனமண்டல மேற்கு கி.சே பிரிவு
51. உஸ்வத்த




வரைபடம் 6.3 : கழிவு நீர் முகாமைத்துவ திட்டத்திற்கு உட்பட்ட பிரதேசம். (2018)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

## 6.3.6.திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டம்

திண்மக்கழிவு தொடர்பான வரைவிலக்கணத்தை நோக்குமிடத்து அது "வீட்டுப் பாவணை பாவணை, வியாபாரம், வணிகம், தொழில் துறை, விவசாயம் மற்றும் பிற பொதுவான செயல்பாடுகள் போன்ற பல்வேறு விதமான மனிதச் செயல்பாடுகளிலிருந்து உருவாக்கப்படும் திரவமற்ற பொருள் திண்மக்கழிவுகள்" என்ற வகையில் அமைகின்றது. உணவு தொடர்பான கழிவுகள், காகிதங்கள், உலோக, பிளாஸ்டிக், கண்ணாடி, துணிகள் போன்ற கழிவுகள், வீட்டு தோட்டங்களில் இருந்து வெளியேறும் பொருட்கள், தொழிற்சாலைக் கழிவுகள் போன்றவை அடையாளம் காணப்பட்டுள்ள கழிவுகளின் வகையைச் சார்ந்தது. திண்மக்கழிவு முகாமைத்துவமானது, திண்மக்கழிவுகளின் உருவாக்கல், சேமிப்பு, சேகரித்தல், போக்குவரத்து மற்றும் அப்புறப்படுத்தல் போன்றவை செயல்பாடுகளைக் கொண்டுள்ளது.

களுத்துறை நகரப் பகுதியில் இன்றைய நிலை.

களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தில் நாளாந்த திண்மக்கழிவுகள் உருவாக்கமானது சுமார் 30 டொன்கள் ஆக கணக்கிடப்பட்டுள்ளது.

உரு 6.7 : களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தில் நாளாந்த திண்மக்கழிவுகள் உருவாக்கம் தொடர்பான விபரங்கள்




மூலம் : களுத்துறை நகர சபை மற்றும் பிரதேச சபை (2018)

மேற்குறிப்பிட்ட அளவுகளை அடிப்படையாக கொண்டு, நகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நாளொன்றுக்கு சுமார் 21 டொன் அளவிற்கு மக்கிப்போகும் தன்மையிலான கழிவுகள், 3 டொன் அளவிற்கு மக்காத கழிவுகள் 3 டொன் போன்றவை அப்புறப்படுத்தபடுகின்றதென கணக்கிடப்பட்டுள்ளது. அத்தோடு, களுத்துறை பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் நாளொன்றுக்கு சுமார் 7 டொன் மக்கிப்போகும் குப்பைகளும், சுமார் 1.5 டன் மக்காத கழிவுகளும் என்ற அளவில் அப்புறப்படுத்தபடுகின்றன.இது தொடர்பான விளக்கங்கள் உரு 6.8 இல் காட்டப்பட்டுள்ளது.

உரு 6.8 : நாளாந்த திண்மக்கழிவுகளின் வகைகள்




மூலம் : களுத்துறை பிரதேச சபை (2018)

இந்தப் பகுதியிலிருந்து உருவாக்கப்படும் கழிவுகள் பெரும்பாலும் போஹெறாரவத்த குப்பை குவிக்கும் தளத்திலேயே அப்புறப்படுத்தப்படுகின்றன. களுத்துறை நகர சபைக்கு சொந்தமான 6 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த போஹெறாரவத்த கழிவு முகாமைத்துவ மையத்தை மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபை நடத்தி வருகின்றது. இந்த திண்மக்கழிவு முகாமைத்துவ மையம் 2011 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு நாளாந்த அடிப்படையில் 5 முதல் 6 டொன் உர உற்பத்தி நடைபெற்று வருகிறது. இதனை அடிப்படையாக கொண்டு மாதம் ஒன்றிற்கு சுமார் 150 – 160 டொன் உரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒரு கிலோ உரம் சுமார் ரூபாய் 11 க்கு விற்கப்படுகிறது. இதன் மூலமாக மாதம் ஒன்றிக்கு சுமார் ரூபாய் 8 இலட்சம் வருவாயாக ஈட்டப்படுகிறது. போஹெறாரவத்த கழிவு முகாமைத்துவ மையத்தின் தேவைக்கேற்ப உயிர் எரிவாயுக் அலகு ஒன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் உயிர் எரிவாயு உற்பத்தியும் இங்கு நடைபெற்று வருகிறது. போஹெறாரவத்த திண்மக் கழிவு அப்புறப்படுத்தும் தளம் மற்றும் கழிவு முகாமைத்துவ மையம் என்பன தொடர்பான விபரங்கள் வரைபட இலக்கம் – 6.4 இல் காட்டப்பட்டுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால், 2030 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக மேற்கொள்ளப்பட்ட குடியிருப்பு மக்கள் தொகையின் முன் கணிப்பின் பிரகாரம், நகர சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில், மக்கள் தொகை அபிவிருத்தி விகிதாசாரமானது குறைந்த மட்டத்திலே காட்டப்படுகின்றது, மேலும் இது போன்ற திண்மக்கழிவுகள் உருவாகும் விகிதம் குறைந்து போகலாம் எனவும் கணிக்கப்படுகின்றது. அத்தோடு 2030 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இது 21 டொன்களாக இருக்கலாம் என கருதப்படுகின்றது. 2030 ஆம் ஆண்டில் திட்டமிடல் பகுதியில் உள்ள குடியிருப்பு மக்கள் தொகைக்கு ஏற்ப, நாளொன்றுக்கு சுமார் 30 டொன் திண்மக்கழிவின் உருவாக்க அளவு கணிக்கப்படுகின்றது.

நகர சபை பகுதிகளுக்கு நாளாந்த பணிகளின் நிமித்தம் வந்துசெல்லும் பயணிகளது எண்ணிக்கை தொடர்பான கணிப்பீடின் படி, அவர்களது செயற்பாடுகளின் மூலம் உருவாக்கப்படக் கூடிய கழிவுகளது தொகை 84 டொன் என்ற அளவில் கணக்கிடப்பட்டுள்ளது. அத்தோடு, 2030 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டின் படி, பிரதேச சபைப் பகுதியில் சுமார் 7 டன்கள் என மதிப்பிடப்படுகிறது. மேலும், 2030 ஆம் ஆண்டில் களுத்துறை திட்டமிடல் பகுதியின் கழிவுகளின் உருவாக்க அளவு நாளொன்றுக்கு 121 டொன் என்ற அளவில் இருக்கும்.

இத் திட்டமிடல் மூலோபாயத்திற்கு இணங்க, நகர சபையுடன் ஒருங்கிணைந்து இவ் கழிவுகளின் உருவாக்க அளவைக் குறைப்பதற்காக பிரதேச சபையானது பொதுமக்களின் பங்களிப்புடன்

செயற்படுவதோடு இந் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அமைப்பாகவும் செயற்படும். இவ்வாறாக முன்னெடுக்கப்படவுள்ள திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான மூலோபாயங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு அமைகின்றன.

### திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான மூலோபாயங்கள்

மூலோபாயம் 01 : இந்தப் பகுதியில் திண்மக்கழிவுகள் உருவாகும் விகிதத்தைக் குறைத்தல்

i. திண்மக்கழிவு உருவாகும் விகிதத்தை குறைக்கும் முகமாக வீட்டுப் பாவணை, வணிகம், தொழில் துறைகளில் உள்ள மக்களை திண்மக்கழிவு முகாமைத்துவ தொடர்பாக ஊக்குவிக்கும் வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

பொது இடங்கள், பாடசாலை போன்றவற்றில் விழிப்புணர்வுத் திட்டம் மற்றும் கல்வி சார் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். மேலும் கழிவுகளின் உருவாக்கல் விகிதத்தை குறைக்கும் முகமாக "10R" கருத்தாக்கத்தை (தவிர்த்தல், மறுத்தல், குறைத்தல், மறுஉபயோகம், பழுதுபார்த்தல், மாற்றிடு, மறுசுழற்சி, சிந்தித்தல், நினைவில் வைத்தல், திரும்பத் திரும்பச் செய்தல்) அறிமுகப்படுத்தி அதனூடாக கழிவு உற்பத்தியைக் குறைத்தல்.

மூலோபாயம் 02 : கழிவுகள் உருவாகும் இடங்களிலிலே கழிவுகளை வகை பிரித்தல்.

1. உள்ளூர் அதிகாரசபையினால், குடியிருப்பு மற்றும் வணிகப் பகுதிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்.

இப் பிரதேசத்தில் வசித்துவரும் பொது மக்களுக்கு மக்கிப்போகும் தன்மையிலான கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகளை ஒன்றாக கலக்க கூடாது என்பது தொடர்பாக கல்வி மற்றும் விழிப்புணர்வு சார் நிகழ்ச்சிகளை நடத்துதல். மேலும், "வகைப்பிரிப்பு இல்லை – சேகரிப்பு இல்லை (No Separation – No Collection)" என்ற கொள்கையினை அறிமுகப்படுத்துவதன் மூலம், வகை பிரிக்கப்படாத கழிவுகள் சேகரிக்கப்படாது என்பதை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தி கழிவுகள் வகை பிரிக்கப்படுவதன் முக்கியத்துவத்தை மக்களிடம் ஊக்குவித்தல்.

உதாரணமாக வீட்டுப் பாவணை, நிறுவனங்கள், வணிகம் மற்றும் தொழில்துறைத் தோற்றுவாய்கள் மூலமாக உருவாக்கப்படும் கழிவுகளுக்கு வெவ்வேறு விதமான வகைகளாக பிரிக்கப்பட்ட தனித்தனியான குப்பைத் தொட்டிகள் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

(அ) உரம் – பச்சை நிறம்

(ஆ) காகிதங்கள் – நீல நிறம்

(இ) நெகிழி (Plastic) – ஆரஞ்சு நிறம்

(ஈ) உலோகம் – பழுப்பு நிறம்

(உ) கண்ணாடி – சிவப்பு நிறம்

மூலோபாயம் 03 : மக்கிப்போகும் தன்மையிலான கழிவுகள் மற்றும் மக்களின் ஊக்குவித்தல் மூலம் உரம் தயாரித்தல், உரம் விற்பதற்கான இலாபகரமான சந்தை அறிமுகம்

i. குடியிருப்பு மற்றும் நிறுவன வளாகங்கள் போன்ற இடங்களில் உருவாக்கப்படும் மக்கிப்போகும் தன்மையிலான கழிவுகள் மூலம் உரம் தயாரித்தல். எடுத்துக்காட்டு: உரத் தொட்டி, உரக் கிடங்கு முதலிய வழிமுறைகளை பயன்படுத்தல்.
ii. பாரிய அளவிலான மக்கிப்போகும் குப்பைகளை வெளியேற்றும் இடங்களாக விளங்கும் வைத்தியசாலைகள் மற்றும் ஆடம்பர ஹோட்டல்கள் போன்ற இடங்களுக்கு, எளிய வழிமுறைகளைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கும் வகையில் உள்ளூர் அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் ஒரு இடப் பகுதியை கிடைக்கச் செய்தல்.

iii. ஒரு உரத் தொட்டியினை ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களும் எளிதான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பராமரித்து அதனூடாக இயற்கை காய்கறிகள் மற்றும் பழங்களை பயிரிடுவதினை செயற்படுத்துவதன் மூலம், இயற்கை காய்கறிகளுக்கான வர்த்தக சந்தையை அபிவிருத்தி செய்வதையும் ஊக்குவித்தல்.

மூலோபாயம் 04 : அரச நிறுவனங்கள், வைத்தியசாலைகளில் உயிர் எரிவாயுக் கூடங்களைஅமைத்தல்

i. உணவுக் கழிவுகள் மற்றும் விவசாயக் கழிவுகள் போன்றவற்றை எளிதில் உயிர் வாயுவாக மாற்றலாம் அத்தோடு அதனை சமையல், வெளிச்சம் (Light) போன்ற தேவைகளுக்காக பயன்படுத்த முடியும்.

மூலோபாயம் 05 : பன்றி வளர்ப்பு பண்ணைகளுக்கு மக்கிய உணவுக் கழிவுகளை பயன்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை ஏற்பாடு செய்தல்

i. இப் பகுதியில் காணப்படும் பன்றி வளர்ப்புப் பண்ணைகளில் மக்கிப்போகும் உணவு கழிவுகளை விலங்கு உணவாக பயன்படுத்தல்

மூலோபாயம் 06 : மக்காத கழிவினை மறுசுழற்சி செய்யப் பொருத்தமான தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்

i. இப் பிரதேசத்தில் வசித்துவரும் மக்கள் மத்தியிலும் மற்றும் மாணவர்கள் மத்தியிலும் கழிவுப்பொருளின் மறு உபயோகம் தொடர்பான உளப்பாங்கை மாற்றுவதற்கு பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களில் கழிவு முகாமைத்துவ செயற்பாட்டுப் பட்டறை ஏற்பாடு செய்தல்.

ii. மறுஉபயோகம் செய்யக்கூடிய கழிவுகளின் (கண்ணாடி, காகிதங்கள், உலோகம்) கொள்முதல் மையங்கள் அமைத்தல். அது போன்ற பொருட்களை சேகரிப்பதற்காக மக்களை ஊக்குவித்தல் மற்றும் சந்தைகள் மற்றும் தொழில் முனைவோர்களை அறிமுகப்படுத்துதல்

iii. உள்ளூர் அதிகாரிகளிடமிருந்து மறுசுழற்சி செய்யக் கூடிய கழிவுகளை கொள்முதல் செய்யத் தயாராக உள்ள வாங்குநர்களிடம் நல்ல தொடர்பை வைத்துக்கொள்ளும் வகையிலும் பதிவு செய்தல் மற்றும் அவர்கள் தொடர்பாக பொதுமக்களுக்குத் தகவல் தெரித்தல்.

iv. திண்மக்கழிவு குவிக்கப்படும் இடங்களில் இருந்து சேகரிக்கப்படும் உலோகம், பிளாஸ்டிக், அப்புறப்படுத்தப்பட்ட மின்சாதனப் பாகங்களை விற்க கழிவு பொருட்காட்சிகளை அறிமுகப்படுத்தல்

மூலோபாயம் 07 : வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறும் மருத்துவ கழிவுகளை குறைக்கும் முறையானதொரு நிறுவன அமைப்புகளை நிறுவுதல்

i. வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறும் மருத்துவ கழிவுகளை தனித் தனியாக வகை பிரிப்பதை கட்டாயமாக்குதல்
ii. இவ்வாறான மருந்துக் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு முன், அவை தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக உறுதி செய்ய வேண்டும்.
iii. வைத்தியசாலை வளாகத்தினுள் மருத்துவ திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு பொருத்தமான அமைப்பை அமைத்தல்

மூலோபாயம் 08 : திண்மக் கழிவுகளைக் சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லல் போன்றவற்றிற்கான முறைமைய மேம்படுத்துதல்

i. வீட்டுக்கு வீடு சென்று கழிவுச் சேகரிக்கும் முறையை செயல்படுத்துதல்
ii. கழிவுகளைச் சேகரிப்பதற்கான தேதிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அந்த தேதிகளில் வெவ்வேறு விதமான வகையான திண்மக் கழிவுகளை (பிளாஸ்டிக், கண்ணாடி) சேகரித்தல்.
iii. கழிவு சேகரிக்கும் வண்டிகள் வந்து கொண்டிருக்கின்றன என்பதை உணர்த்தும் முகமாக மணி ஒலியை எழுப்புதல்.
iv. உள்ளூராட்சி அதிகாரசபைகளினால் செயற்படுத்தப்படும் உரம் தயாரிக்கும் தளங்களுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் வசதிகளை வழங்குதல்.
v. திண்மக்கழிவு சேகரிக்கும் வண்டிகளில், வகைப்படுத்தி தனித்தனி பிரிவுகள் காணப்படுதல்.
vi. திண்மக்கழிவு சேகரிக்கும் வண்டிகள் செல்ல இயலாத இடங்களில், கை வண்டிகளைப் பயன்படுத்துவதன் மூலம் கழிவுகளை சேகரித்தல்.

மூலோபாயம் 09 : திண்மக்கழிவு நிரப்பும் தளங்களை அமைத்தல்.

i. மக்காத பொருள் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத பொருட்கள் நிலங்களுக்குள் நிரப்ப ஏற்றது. தனி உள்ளூர் அதிகாரசபையினால் ஒரு திண்மக்கழிவு நிரப்பும் தளத்தை அமைப்பது என்பது நிதி ரீதியாக நடைமுறைக்கு சாத்தியமில்லை எனவே பல உள்ளூர் அதிகார சபைகள் ஒன்றாக சேர்ந்து, இவ்வாறான திண்மக்கழிவு நிரப்பும் தளங்களை நடைமுறைப்படுத்த முடியும்

மூலோபாயம் 10 : மின்னணு கழிவுகள் (E– waste) முகாமைத்துவ நிலையத்தை ஸ்தாபித்தல்.

i. புறக்கணிப்பு செய்யபட்ட கணினிகள், விசைப்பலகைகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், செல்லிடப் பேசிகள் ஆகியவற்றை மற்ற நகர திண்மக்கழிவுகளுடன் சேர்த்து அப்புறப்படுத்த வேண்டும். மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் கீழ், பதிவு செய்துள்ள கொள்வனவாளர்களுக்கு கையளிக்கும் முகமாக அந்த பொருட்களை தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மூலோபாயம் 11 : பின்தொடர் குழுவிற்கான நியமனம்

i. திண்மக்கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு உரிய நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்களை அமைத்து பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.




பொஹோரவத்தையில் கழிவு முகாமைத்துவ நிலையத்தினை அமைத்தல்
களுத்துறை பிரதேச செயலக பிரிவு
மூலம் - நகர அபிவிருத்தி அதிகாரசபை(2018)

0 0.45 0.9 1.8 2.7 3.6 கி.மீ.

நகர அபிவிருத்தி அதிகாரசபை
மார்கழி 2018

மேல் மாகாண பிரிவு | களுத்துறை அபிவிருத்தி திட்டம் (2019-2030) | தயாரிப்பு: களுத்துறை மாவட்ட அலுவலகம்

வரைபடம் 6.4 : பொஹோரவத்தை கழிவு முகாமைத்துவ நிலைய உருவாக்கம். (2018)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

## 6.4.பொருளாதார அபிவிருத்தி மூலோபாய திட்டம்

இந்த பொருளாதார அபிவிருத்தி மூலோபாய திட்டத்தின் கீழ் காணப்படும் மூலோபாயங்களானவை, இந் நகரில் காணப்படும் சாத்தியகூறுகளைப் பயன்படுத்தி பொருளாதார நிலையினை இன்னும் மேம்படுத்தும் வகையில் சுற்றுலா அபிவிருத்தி திட்டம் மற்றும் சுகாதார அபிவிருத்தி திட்டம் போன்ற இரண்டு பிரிவிலான அபிவிருத்தித் திட்டம் உள்ளடக்கி வகுக்கப்பட்டுள்ளன.

### 6.4.1.பொருளாதார அபிவிருத்தித் திட்டம்

பொருளாதார அபிவிருத்தித் திட்டம் கீழ் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாக எடுத்துநோக்குமிடத்து, களுத்துறை பிரதேச செயலகப் பகுதியின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதில் பல்வேறு விதமான துறைகள் தொடர்பில் கவனம் செலுத்துவது முக்கியமானதாக இனங்காணப்பட்டுள்ளது. களுத்துறை நகரைச் சுற்றி வர்த்தக நடவடிக்கைகள் அடிப்படையாகவே குவிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன மற்றும் மொரன்துடுவ, உக்கல்போட சந்தி மற்றும் பலதோட்டை சந்தி ஆகிய இடங்களில் வணிக ரீதியிலான முனையங்கள் (Commercial nodes) அமைந்து காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. களுத்துறை பிரதேச செயலகப் பகுதியின் பொருளாதார இயைபுகளில் முக்கிய பங்களிக்கும் துறையாக சேவைத் துறை விளங்குகிறது. களுத்துறை மாவட்டத்தின் பிரதான நிர்வாக மையமாக களுத்துறை இருந்து வருகின்றது அத்தோடு வர்த்தக மற்றும் ஏனைய தேவைகளுக்காக பெருந்தொகையான மக்கள் இந் நகரத்தை நோக்கி பெரிதும் ஈர்க்கப்படுகின்றனர்

அத்தியாயம் ஒன்றில் விவரிக்கப்பட்டுள்ளபடி, நிர்வாக, கல்வி, சுகாதாரம் மற்றும் பல்வேறு விதமான சேவைகளைப் பெறுவதற்காக களுத்துறை பிரதேச செயலகப் பகுதிக்கு சுமார் 80,000 பேர் களுத்துறை நகருக்கு நாள்தோறும் வந்து செல்கின்றனர். களுத்துறை நகரத்துடன் இணைக்கப்பட்ட சமய முக்கியத்துவமும் சுற்றுலாத் துறையும் பல மக்களை நகரத்துக்கு ஈர்ப்பதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது. இவ்வாறான நாளாந்த பணிகளின் நிமித்தம் வந்துசெல்லும் பயணிகளின் தொகையானது, நகரத்தின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இருப்பினும், களுத்துறை மாவட்டத்தின் பிற பகுதிகளில் இடம்பெறும் நடவடிக்கைகள் அதாவது தெற்கு கடுகதிப் பாதையின் கட்டுமானம் மற்றும் மற்றைய பிரதேசங்களின் நடைபெறும் பல்வேறு விதமான தேசிய அளவிலான முதலீடுகள் என்பன இந் நகருக்கு நாளாந்த பயணிகள் வருவதற்கான பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றன.

இதற்கேற்ப, இந்த பொருளாதாரத் திட்டமானது SWOT பகுப்பாய்வின் மூலம் சாதகங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை கணக்கில் கொண்டு தயார் செய்யப்பட்டது. பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் அடைய வேண்டிய குறிக்கோள்கள் பின்வருமாறு.

1. களுத்துறை மாவட்ட அளவிலான அனைத்து விதமான நிர்வாக சேவைகளும், மாவட்டச் செயலக கட்டட வளாகத்தின் சுமார் 200 மீட்டர் அளவிற்கு உட்பட்டு (200m buffer) 80% வரை 2025 ஆம் ஆண்டளவில் நிர்வாக சேவைகளை வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.
2. களுத்துறை ஆதார வைத்தியசாலை வளாகத்திலிருந்து சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவிற்குள் (1 km buffer) அனைத்து விதமான மூன்றாம் நிலை மருத்துவ வசதிகளும் 80% வரை 2030 ஆம் ஆண்டளவில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த இலக்கை எய்தும் வகையில், இரண்டு மூலோபாயங்களை கடைபிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1. இந்த களுத்துறை பிரதேச செயலகப் பிரிவுகளில் சிதறிக்கிடக்கும், மாவட்ட அளவிலான அனைத்து விதமான நிர்வாக சேவைகளையும் ஒரே இடத்தில் ஒன்று குவிக்கும் முகமாக, பெரும்பாலான நிர்வாக சேவைகள் களுத்துறை மாவட்ட செயலகப் வளாகத்தினுள் அமைக்கப்படவுள்ளது.

2. களுத்துறை ஆதார வைத்தியசாலை வளாகத்திலிருந்து மூன்றாம் நிலை சுகாதார நிலையங்களுக்கு இடையே உள்ள தொடர்பை அதிகரித்தல். இந்த இலக்கை எய்துவதற்காக நிர்வாக மற்றும் சுகாதார குழுமங்களுக்கான அபிவிருத்தித் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

#### 6.4.1.1.நிர்வாக மற்றும் சுகாதார குழுமங்களுக்கான அபிவிருத்தித் திட்டம்.

களுத்துறை மாவட்டத்தின் பிரதான நிர்வாக மையமாக களுத்துறை நகரம் காணப்படுவதனாலும் மற்றும் மேல் மாகாணத்தில் 3 வது பெரிய அரசாங்கமாக ஆதார வைத்தியசாலை இங்கு அமையப்பெற்றிருப்பதன் காரணாமாகவும், இங்கு வரும் மக்கள் தொகையில் பெரும்பான்மையானோர் நிர்வாக மற்றும் சுகாதாரப் பணிகளுக்காகவே வருகின்றனர். தற்போது நடைபெற்று வரும் முக்கிய அபிவிருத்தியின் காரணமாக, எதிர்காலத்தில் சிகிச்சை பெறும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நகருக்கு வரும் அனைவருக்கும் வசதியளிக்கும் முகமாகவும் மற்றும் நகரத்தின் பொருளாதார நிலையினை உயர்த்தும் பொருட்டும், நிர்வாக மற்றும் சுகாதாரப் பணிகள் ஒருங்கிணைந்த குழுமத்திற்கான திட்டம் தயார் செய்யப்பட்டு, அதன் மூலம் பொருளாதார ஆதாயத்தை (Agglomeration Economy) ஒருங்கே அடைய முடியும் என்று இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது

இதனால், பொருளாதாரத் திட்டத்தின் நோக்கங்கள் 02 மற்றும் 03 இனை அடைய முடியும். இது தொடர்பான விபரங்கள் செயல் திட்ட அமுலாக்கல் தொடர்பான திட்டத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது.

### 6.4.2.சுற்றுலா அபிவிருத்தித் திட்டம்

மேலே விளக்கியபடி, களுத்துறை நகரம் யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு கவர்ச்சிகரமான இடமாக விளங்குகிறது. சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பின் காரணமாக, தனியார் துறை சார் நடவடிக்கைளில் பெரும்பாலும் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய சுற்றுலா விடுதிகளைக் கட்டுமானம் செய்வதே பிரதானமாக காணப்படுகின்றது. அத்தோடு, இங்கு இடம்பெறும் பல்வேறுபட்ட முதலீடுகளும் சுற்றுலாத் துறையை மையப்படுத்தியாகவே அமைகின்றன.

அதனை அடிப்படையாக கொண்டு, சுற்றுலா அபிவிருத்தித் திட்டமானது, களுத்துறை பிரதேச செயலகப் பகுதியின் பொருளாதாரத்திற்கு சுற்றுலாத் துறையின் பங்களிப்பினை அபிவிருத்தி செய்யத் தேவையான சாத்திய கூறுகள் மற்றும் இடையூறுகளைக் கணக்கில் எடுத்துத் தயார் செய்யப்பட்டுள்ளது.

இந் நகரத்துக்கு வரும் யாத்ரீகர்கள் வருகையானது ஆண்டு முழுவதும் இடம்பெறுகின்றது. அவர்களில் பெரும்பாலானோர் உள்ளூர் பயணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு இவ்வாறான சுற்றுலா சார் நடவடிக்கைகளின் மூலம் களுத்துறை நகரின் பொருளாதாரத்திற்கும அவர்கள் கணிசமான முறையில் பங்களிக்கிறார்கள். அதனை அடிப்படையாக கொண்டு, களுத்துறை நகரில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் இடங்களைக் கண்டறிந்து அவற்றை அபிவிருத்தி செய்ய இதன் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. வரைபட இலக்கம் – 6.5 இல் காட்டப்பட்டுள்ளவாறான சுற்றுலா அபிவிருத்தித் திட்டமானது, களுத்துறை போதி மர வளாகம், கலிடோ கடற்கரை மற்றும் ரிச்மண்ட் கோட்டை கட்டிட வளாகப் (Richmond castle) பகுதிகளுக்கான இடைத்தொடர்பை அதிகப்படுத்துவதன் மூலமாக ஒருங்கிணைந்த சுற்றுலாத் தலங்களை உருவாக்க உத்தேசித்துள்ளது.

இதற்கமைய, களுத்துறை போதி மர வாளாகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களின் மிகவும் கவர்ச்சிகரமான பாரம்பரிய சுற்றுலாத்தலமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென உத்தேசிக்கப் பட்டுள்ளது. ரிச்மண்ட் கோட்டை கட்டிட வளாகமானது (Richmond castle) பாரம்பரியச் சுற்றுலா மண்டலமாக (Heritage Tourism) உருவாக்கப்பட உள்ளது. அத்தோடு, களு கங்கை செல்லும் வழியில் களுத்துறை போதி மர வளாகம் மற்றும் ரிச்மண்ட் கோட்டைக் கட்டிட வளாகத்திற்கு இடையில் உள்ள பிரதேசமானது கடல் முன்னரங்க சுற்றுலாத் தலமாக (Sea Front Tourism Promenade) அபிவிருத்தி செய்யப்பட உள்ளது. மேலும் மொரன்துடுவ,கொனாதுடுவ போன்ற பிரதேசங்களும் இயற்கையோடு சேர்ந்த சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யப்பட முன்மொழியப்பட்டுள்ள நிலையில், களு கங்கை மற்றும் பொல்கொட ஏரியினை கெப்பு கால்வாயானது கலக்கும் இடம் வரைக்கும் நீர் வழிப் போக்குவரத்துப் பிரதேசமாக (River Front Tourism Promenade) அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

களுத்துறை பிரதேசத்தில் சுற்றுலா நடவடிக்கைகள் பல்வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக கலாச்சார சுற்றுலாச் செயற்பாடுகள், சுற்றுச்சூழல் சார் சுற்றுலாச் செயற்பாடுகள், மற்றும் கடற்கரை

தொடர்பான சுற்றுலாச் செயற்பாடுகள் என்பன இப் பகுதியில் ஊக்குவிக்கப்படவுள்ளன. அத்தோடு, இத் திட்டத்தை அமுல்படுத்துவதனால் இங்கு வருகை தரும் சுற்றுலா பயணிக்கு குறுகிய தூரத்திற்குள் வெவ்வேறு விதமான சுற்றுலா அனுபவத்தை பெறவும் வாய்ப்பு உள்ளது.

இதன் மூலம் இப் பகுதிக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணிகள் ஆகிய இரு சாராரையும் கவர உதவும். மேற்கண்ட சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தின் குறிக்கோள்களும் மற்றும் மூலோபாயங்களும் கீழ்க்கண்டவாறு கண்டறியப்பட்டுள்ளன.

## குறிக்கோள்கள்

01. களுத்துறை போதி மர வளாகம், கலிடோ கடற்கரை மற்றும் ரிச்மண்ட் கோட்டை கட்டிட வளாகப் (Richmond castle) பகுதிகளுக்கான இடைத்தொடர்பை அதிகப்படுத்துவதன் மூலமாக 2030 ஆம் ஆண்டளவில் ஒருங்கிணைந்த சுற்றுலாத் தலங்களை உருவாக்குதல்.

## முலோபாயங்கள்

i. களுத்துறை போதி மர வளாகம் மற்றும் ரிச்மண்ட் கோட்டைக் கட்டிட வளாகம் (Richmond castle) ஆகிய இரண்டையும் அடிப்படையாக கொண்டு கலாச்சார சுற்றுலா வலயங்களை உருவாக்குதல்.
ii. களு கங்கை மற்றும் காலிடோ கடற்கரை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இரண்டு சுற்றுலா வலயங்களை உருவாக்குதல்

இந்த திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள செயற்திட்டங்கள் யாவும் செயற்பாட்டு அமுலாக்கல் மூலோபாய திட்டத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளன.




வரைபடம் 6.5 : சுற்றுலா அபிவிருத்தி திட்டம் ( 2018)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

## 6.5.நிலைதகு சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாயத் திட்டம்

களுத்துறை திட்டமிடல் பகுதியில், அந்தப் பிரதேசத்திற்கே உரித்தான மரபுவழிவந்த பல தனித்துவமான சுற்றுச்சூழல் அம்சங்கள் உள்ளன. களு கங்கையின் கழிமுகப் பகுதியில் அமைந்து காணப்படும் இடத்தின் 55% மான நிலப் பரப்பு ஈரநிலமாக எஞ்சியுள்ளன அத்தோடு அவற்றுள் சில கடலுக்கு அண்மையில் அமைந்து காணப்படுகின்றன. அனைத்து விதமான சுற்றுச்சூழல் அம்சங்களையும் ஒருங்கிணைத்து, இப் பகுதிக்கான சுற்றுச்சூழல் நிலைத்தன்மை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்தப் பகுதியானது, தேசிய அளவிலான பல்வேறுபட்ட பேரழிவுகளுக்கும் உள்ளாகிவருகின்றது என்பது ஒரு பலவீனமாகவே கருதப்படுகின்றது. இந்த காரணிகளைக் கருத்தில் கொண்டே நிலைதகு சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாயத் திட்டம் தயார் செய்யபட்டுள்ளது. அத்தோடு, இத் திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட நோக்கங்களை அடைய எதிர்பார்க்கப்படுகின்றது.

அ) 2030 ஆம் ஆண்டளவில், இப் பகுதிக்கு தேவைப்படும் 100% குடிநீரை சுத்தமானதாகவும் மற்றும் சுகாதரமானதாகவும் வழங்க வேண்டும்.

ஆ) 2025 ஆம் ஆண்டளவில், இங்குள்ள கடற்கரைப் பகுதியில் மேற்கு எல்லையான தீரகந்தை மாவத்தையிலிருந்து தெற்கு பயாகல பகுதி வரை நீளும் 13 கி.மீ தூரமுள்ள கடற்கரை பகுதியில் , மணல் திட்டுகள் அழிவடைதல் சார்ந்த தாக்கங்களை முடிந்தளவு குறைத்தல்

இ) 1925 ஹெக்டேயார் சுற்று சூழல் உணர் திறன் தன்மை மிக்க வலயத்தினை முகாமைத்துவம் செய்வதற்கூடாக, 21 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தினை குறைப்பதன் மூலம், 2025ஆம் ஆண்டளவில் இப்பிரதேசத்தை மக்களும் வாழ்வதற்கு உகந்த சூழலை உடைய பகுதியாக உருவாக்குதல்.

### 6.5.1.சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மூலோபாயத்தின் முக்கிய நோக்கங்களாக ஈரநிலப்பகுதிகள் மற்றும் சுற்றுச் சூழலியல் உணர்திறன் வாய்ந்த பகுதிகளை பாதுகாத்தல், வடிகால் அமைப்பு மற்றும் கடலோர சுற்றுச்சூழல் அமைப்பு தொடர்பான பாதுகாப்பு மற்றும் அனர்த்தங்களை நிர்வகித்தல் ஆகியவை காணப்படுகின்றன. ஈரநிலப்பகுதிகளைப் பாதுகாப்பதன் மூலம் நீரை தக்க வைத்துக் கொள்ளும் திறனை அதிகரிக்கலாம் அத்தோடு இதன் மூலம் உயிர்பல்வகைமையானது சீராக பேணப்படும் என கருதப்படுகின்றது.

#### 6.5.1.1.ஈரநிலப் பகுதி மற்றும் சுற்றுச் சூழலியல் உணர்திறன் வாய்ந்த பகுதிகளை பாதுகாப்பதற்கான மூலோபாயங்கள்

ஈரநிலப் பகுதி மற்றும் சுற்றுச் சூழலியல் உணர்திறன் வாய்ந்த பகுதிகளை பாதுகாக்கும் முகமாக, இப் பகுதியானது மேல் மாகாண ஈரநில திட்டத்தின் கீழ் ஈரநில வலயம் என கண்டறியப்பட்டுள்ளது.
இத் திட்டமிடல் பகுதியில் காணப்படும் பிரதான கால்வாய்கள், உப வாய்க்கால் ஆகியவை முறையாக பராமரிக்கப்படாததால் இங்குள்ள வடிகால் அமைப்பு முறையாக செயற்படவில்லை என்பது தெளிவாக புலப்படுகின்றது. மேலும், இப் பகுதியில் ஆக்கிரமிப்பு செடிகள் வளர்வதன் விளைவாகவும் மற்றும் தாழ்வான பகுதிகளில் இடம்பெற்று வரும் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் காரணமாகவும் தடையின்றிய முறையில் வரும் நீர் வரத்து தொந்தரவிற்கு உள்ளாகின்றது.

ஆகவே, இந்த அனைத்து விதமான பிரச்சினைகளும் ஈரநிலப் பகுதி மற்றும் சுற்றுச் சூழலியல் உணர்திறன் வாய்ந்த பகுதிகளை பாதுகாப்பதற்கான மூலோபாயத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்படும் என கருதப்படுகின்றது.

களுத்துறை திட்டமிடல் பகுதியில் கண்டறியப்பட்ட ஈரநிலப் பகுதிகள் கீழ்க்கண்டவாறு வலயப்படுத்தப்பட்டுள்ளன.

i. ஈரநில பாதுகாப்பு வலயம்
ii. இயற்கை ஈரநிலப் பராமரிப்பு வலயம்

iii. ஈரநில விவசாய வலயம்
iv. சிறப்பு நெல் சாகுபடி

இதற்கான வலய மண்டல விளக்கமானது வரைபட இலக்கம் – 6.6 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**i.** ஈரநில பாதுகாப்பு வலயம்

பொல்கொட ஏரியை மையப்படுத்திய சுற்றுச்சூழல் வலயமானது, களனி மற்றும் களு கங்கை ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்கு இடையில் ஒரு பகுதியளவு மறைக்கப்படாத கடல் நீரேரியாக இருந்து வருகிறது. இரண்டு ஏரித் தொகுதிகள் (வடக்கு பிரதேசம் மற்றும் தெற்கு பிரதேசம்) பொல்கொட ஏரியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, வெரஸ் கங்கை, பொல்கொட கங்கை, பனபே கால்வாய், ரம்பான கால்வாய், மகா ஓயா மற்றும் தலப்பிட்டிய கால்வாய் போன்ற கால்வாய்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. பொல்கொட ஏரியானது அதிக அளவிலான உயிரியல் சார் பல்வகைமைத்தன்மை கொண்டு காணப்படுகின்றது. இருந்தாலும், தொழிற்சாலைக் கழிவுகள் வெளியேற்றப்பட்டதன் காரணமாகவும், சுற்றுப்புற சூழலில் உள்ள பகுதிகளில் திட்டமிடப்படாத அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நில ஆக்கிரமிப்புகள் காரணமாகவும் மற்றும் ஆக்கிரமிப்புத் தாவரங்கள் போன்ற காரணங்களால் பல்வேறு விதமான அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வருகிறது.

இந்த விடயங்களை கட்டுப்படுத்தும் முகமாக, மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை 2009 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30 ஆம் நாள் திகதியிடப்பட்ட 1634/23 என்ற இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இதனை சுற்றுச்சூழல் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியுள்ளது. (ஆதாரம் : இலங்கையின் சுற்றுச்சூழல் உணர்திறன் பிரதேசங்கள்– மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை). மேலும், இதன் உயிரியல் சார் பல்வகைமைத்தன்மையை எடுத்து நோக்குமிடத்து, பொல்கொட ஏரியின் தெற்குப் பகுதியில், 45 மீன் இனங்கள், 16 இருவாழ்விகள் இனங்கள், 40 ஊர்வன இனங்கள், 97 பறவை இனங்கள் மற்றும் 31 பாலூட்டி இனங்கள் என்பன கண்டறியப்பட்டுள்ளன. (ஆதாரம் : இலங்கை தேசிய ஈரநில கோப்பகம், மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை – 2000)

பொல்கொட ஏரியின் தெற்குப் பகுதியில் அமைந்து காணப்படும் மஹா கொணதுவ மற்றும் குடா கொணதுவ போன்ற இரண்டு கிராம சேவகர் பிரிவுகளும் களுத்துறை திட்டமிடல் பகுதிக்குள் உள்ளடங்கும் பிரதேசங்களாக காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**ii.** இயற்கை ஈரநிலப் பராமரிப்பு வலயம்

களு கங்கை மற்றும் பொல்கொட ஏரி போன்ற பிரதான நீர் ஆதாரங்களை அடிப்படையாக கொண்டே அழுத் கால்வாய், ஹீனேடியங்கல கால்வாய் மற்றும் கெப்பு கால்வாய் போன்ற கால்வாய் அமைப்புகள் அமைந்து காணப்படுகின்றன. மேலும், இந்த கால்வாய்களை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ள ஈரநிலங்கள், இந்த இயற்கை ஈரநிலப் பராமரிப்பு வலயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**iii.** ஈரநில விவசாய வலயம்

நெல் பயிரிடும் பகுதிகள் தவிர, அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் இந்த மண்டலத்தில் சேர்க்கப்படுகின்றன.

**iv.** சிறப்பு நெல் சாகுபடி பகுதிகள்

களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தில், நெல் நிலங்கள் மற்றும் அனைத்து விதமான கைவிடப்பட்ட நெல் நிலங்கள் இந்த மண்டலத்தில் சேர்க்கப்படுகின்றன. அத்தோடு, இது நீர் தேக்கம் மற்றும் வடிகால் மண்டலமாகவும் கருதப்படுகிறது.




வரைபடம் 6.6 : ஈர நில வலயமைப்பு திட்டம் (2019 – 2030)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை

இந்த மண்டலத்தில் பின்வரும் சிக்கல்கள் கண்டறியப்பட்டுள்ளன

- பிரதான மற்றும் உப கால்வாய்களின் மோசமான பராமரிப்பின் காரணமாக நீர் சரியான முறையில் வெளியேற்றப்படுவதில்லை.
- தாழ்வான பகுதிகளில், அங்கீகாரமற்ற கட்டுமானங்கள் தகாத முறையிலும் மற்றும் முறைகேடாகவும் நடந்து வருகின்றன

### 6.5.1.2.தற்போது காணப்படும் வடிகால் அமைப்பினை பாதுகாப்பதற்கான மூலோபாயங்கள்

இந்த திட்டத்தின் கீழ், 444. 78 ஹெக்டேர் பரப்பளவில் தற்போது காணப்படும் நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்பட உள்ளது. இதன் மூலம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

நடவடிக்கை 01

சுற்றுச்சூழல் பாதுகாப்பு வலயத்திற்கான அறிமுகம்

2005 ஆம் ஆண்டு ஆடி மாதம் 7 ஆம் நாள் அன்று திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தலின் படி அமையப்பெற்ற 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிற்கு இடைப்பட்ட களுத்துறை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கால்வாய்கள் மற்றும் ஆற்றுப்படுகைகான இட ஒதுக்கீட்டு வலயம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது சார்ந்த விபரணம் அட்டவணை இலக்கம் – 6.1. இல் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் அதே போன்ற இடஒதுக்கீடு தான் இந்த திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்கள் தொகுதி II இல் காணப்படும் ஒழுங்குமுறைப்படுத்தல் பிரிவில் கூறப்பட்டுள்ளது.

அட்டவணை 6.1 : திட்டமிடல் பகுதியில் காணப்படும் ஆறு, கால்வாய்கள் மற்றும் ஏனைய நீரோடைகளின் இட ஒதுக்கீடுகள் தொடர்பான விபரம்.

| நீர் மூலத்தின் பெயர் | இடஒதுக்கீட்டின் அகலம் (மீட்டர்) | அலகு ( அடி) |
|---|---|---|
| களு கங்கை | கரையிலிருந்து 20 மீட்டர் | 60 அடி |
| பொல்கொட ஏரி | கரையிலிருந்து 12 மீட்டர் | 40 அடி |
| ஹீணேடியண்கல கால்வாய் மற்றும் அளுத் கால்வாய் | கரையிலிருந்து 06 மீட்டர் | 20 அடி |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை ( 2018)

அத்துடன், இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆம் ஆண்டின் ஆடி மாதம் 14 ம் நாள் திகதியிடப்பட்ட 1662/17 ம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலின் படி பிரகடனம் செய்யப்பட்ட இடஒதுக்கீடுகளின் பிரகாரம், களுத்துறை பிரதேச செயலக பகுதியிலுள்ள ஏனைய கால்வாய்களில் பயன்படுத்தப்படலாம் என இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 6.5.1.3. கடலோர சுற்றுச்சூழல் முகாமைத்துவ மூலோபாயம்

களுத்துறை நகர அபிவிருத்திக்கு இடையூறாக இருக்கும் பிரதான காரணிகளில் மணல் திட்டுகள் அழிவடைதல்ம் ஒன்றாகும். பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் மிகவும் கவர்ச்சிகரமான கண்ணுக்கினிய காலிடோ கடற்கரை பகுதியானது, படிப்படியான மோசமடைந்து வருகின்றமை மற்றும் களு கங்கையில் மண் அகழ்தல் போன்ற செயற்பாடுகள் பிரதேசத்தின் உயிர் பல்வகைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றதோடு மிகவும் கவர்ச்சிகரமான காலிடோ கடற்கரையை அழிப்பதன் காரணத்தினால் சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பும், இயற்கை மதிப்பும் வெகுவாக குறையும். மேலும் இது கரையோர சூழல் முறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே, இவ்வாறான சேதங்களைக் குறைப்பதற்கு இந்தத் திட்டத்தில் சில நடவடிக்கைகள் கண்டறியப்பட்டன. அவை பின்வருமாறு.

நடவடிக்கை 01

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட விதிமுறைகள், கரையோர அபிவிருத்திப் பணிகளை ஒழுங்குறுத்துவதற்காக அவ்வாறாகவே பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளன. 1981 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலை பயன்படுத்தி கரையோர பிரதேசங்களின் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் இதே ஒழுங்குமுறைகளை பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. பாதிப்பு அளவின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு இது மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. மிகவும் பாதிப்புக்குள்ளாகும் வலயம் டெங்ஜெரின் கடற்கரை விடுதி தொடக்கம் அவானி களுத்துறை உல்லாச விடுதி வரையிலான பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
நிரந்தரச் செடிகள் வளர்ந்துள்ள பகுதியின் எல்லையிலிருந்து 55 மீட்டர் தூரமானது, இந்த வலய இட ஒதுக்கீடாக சேர்க்கப்பட்டுள்ளது. அதில் இருந்து 20 மீட்டர் பரப்பளவுக்குள் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் அனுமதிக்கப்படுவதில்லை. அந்த இடத்திலிருந்து வரையறுக்கப்பட்ட நடவடிக்கைகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன.

2. நடுத்தர பாதிப்புக்குள்ளாகும் வலயம் (அவானி களுத்துறை உல்லாச விடுதி – பயாகல தெற்கு)

நிரந்தரச் செடிகள் வளர்ந்துள்ள பகுதியின் எல்லையிலிருந்து 50 மீட்டர் தூரமானது, இந்த வலய இட ஒதுக்கீடாக சேர்க்கப்பட்டுள்ளது. கடலுக்கு அருகிலிருந்து 20 மீட்டர் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் அனுமதிக்கப்படுவதில்லை. மேலும், அந்தக் கட்டத்தில் இருந்து 30 மீட்டர் வரையிலான பகுதிக்குள் அபிவிருத்திப் பணிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

3. குறைந்த பாதிப்பிற்குள்ளாகும் வலயம் ( பின்வத்த புகையிரத நிலையம் – டெங்ஜெரின் கடற்கரை விடுதி)
நிரந்தரச் செடிகள் வளர்ந்துள்ள பகுதியின் எல்லையிலிருந்து 35 மீட்டர் தூரமானது, இந்த வலய இட ஒதுக்கீடாக சேர்க்கப்பட்டுள்ளது. கடலுக்கு அருகிலிருந்து 10 மீட்டர் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் அனுமதிக்கப்படுவதில்லை. மேலும், அந்தக் கட்டத்தில் இருந்து 25 மீட்டர் வரையிலான பகுதிக்குள் அபிவிருத்திப் பணிகள் கட்டுப்படுத்தப்படுகின்ற.

நடவடிக்கை 02
இப் பகுதியில் எஞ்சியுள்ள மணல் திட்டுகளை மீண்டும் கட்டமைக்க வேண்டும்.
மணல் திட்டுகளது அழிவு காரணமாக கீழ்வரும் பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன.

- உப்புநீர் ஆற்றில் கலப்பதன் விளைவாகக் குடிநீர் பிரச்சினை எழுந்துள்ளது
- ஆற்றின் சூழல் முறைமையில் காணப்படும் உயிரினப் பல்வகைமை தன்மையில் ஏற்படும் பாதிப்பின் காரணமாக,சூழல் சமநிலை நிலைகுலைந்து போவதற்கான சாத்தியப்பாடு காணப்படல்.
- களு கங்கையில் மணல் அகழ்ந்தெடுக்கப்படுவதன் விளைவாக ஏற்படும் நேரடியான பாதிப்புக்கள்
- சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுக்கான சாத்தியப்பாட்டை உருவாக்குதல்

இந்த பிரச்சினைகளுக்கான தீர்வாக, இப் பகுதியின், சுமார் 1.7 கிலோ மீட்டர். நீளக் கடற்கரை பகுதியில் உள்ள மணல் திட்டுகளை, ஊட்டம் நிறைந்த பகுதியாக மீண்டும் உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது. 2030 ஆம் ஆண்டளவில், இதனை நிரந்தர மணல் திட்டாக மாற்றவும் முன்மொழியப்பட்டுள்ளது.

நடவடிக்கை 03
அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளுக்கான சதுப்பு நிலக் கன்றுகளை (கண்டல் தாவரம்) நடுகை திட்டம்

புகையிரத நிலையத்திற்கும் கடல் நீரேரிக்கும் இடைப்பட்டு காணப்படுகின்ற சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் சதுப்பு நிலக் கன்றுகளை (கண்டல் தாவரம்) நடுகை செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மூலம் கடல்அரிப்பு மற்றும் காற்றின் திசைதிருப்பம் போன்றவை மட்டுப்படுத்தப்படவுள்ளன.

நடவடிக்கை 04

- டெங்ஜெரின் கடற்கரை விடுதி தொடக்கம் காலிடோ கடற்கரை வரையிலான சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவிற்குள் காணபடுகின்ற மிகவும் பாதிப்படைந்து வரும் கடலோரப் பகுதியில் சில புதர்களை நடவு செய்தல் தொடர்பான ஒரு திட்டத்தை செயல்படுத்துதல்
- இயற்கைக் காட்சிகளுக்கு எவ்வித சேதமும் இல்லாமல் கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாத்தல் மற்றும் இயற்கை அழகோடு அமையப்பெற்ற ஒரு சுற்றுசூழலை பேணுதல் போன்ற நடவடிக்கைகள் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

## 6.5.2. நிலத்தோற்றத் திட்டம்

களு கங்கை ஆற்றுப்படுக்கை நிலப்பரப்பினில் களுத்துறை திட்டமிடல் பகுதி அமைந்து இருப்பதன் காரணத்தால், களு கங்கை, கடல், காலிடோ கடற்கரை, உள்ளகக் கால்வாய் அமைப்பு, ஈரநிலப் பிரதேசங்கள் ஆகியவற்றுடன் ஒன்றித்து பண்டைய காலத்தில் இருந்து அபிவிருத்தி பெற்ற ஒரு நிலத்தேற்ற அமைப்பைக் கொண்டு விளங்குகின்றது.

2019 – 2030 வரையிலான காலகட்டத்திற்கு இடைப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின், *"தென் மேற்குக் கடற்கரையின் பிரதம இடைநிறுத்தம்"* என்ற தொலைநோக்கினை எய்தும் நோக்குடன் திட்டமிடல் பகுதியின் நிலத்தோற்ற சூழலை உருவாக்குவதற்காக, அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் மூலோபாய அபிவிருத்திகளை செயற்படுத்த இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அடையாளம் காணப்பட்டுள்ள இடங்கள் பின்வருமாறு.

களுத்துறை திட்டமிடல் பகுதியில் சில இடங்களில் அழகியல் சார்ந்த பெறுமதி அதிகரிப்பதற்காக பின்வரும் செயல் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன;

1. நாகோட சந்தியில் நிலத்தோற்றங்கள் தொடர்ப்பான மேம்படுத்துதல்களை முன்னெடுத்தல்.
2. ரிச்மண்ட் கட்டிட வளாகத்தில் (Richmond castle) நிலத்தோற்றங்களை மேம்படுத்துதல்
3. நீதிமன்ற வளாகத்தின் முன்புறம் உள்ள நிலத்தோற்றங்களை மேம்படுத்துதல்
4. காலிடோ கடற்கரை பகுதியில் நிலத்தோற்றங்களை மேம்படுத்துதல்
5. உயர் அடர்த்தி குடியிருப்பு வலயத்தில் அமைந்து காணப்படும் ஹீணேடியங்கல கால்வாயின் ஒரு பகுதியில் நேர்க்கோட்டுப் பூங்காவை அமைத்தல்.
6. குழந்தை மற்றும் மகப்பேறு வைத்தியசாலை வளாகத்தின் முன்புற நிலத்தோற்றங்கள் தொடர்ப்பான மேம்படுத்துதல்களை முன்னெடுத்தல்.
7. மொரன்துடுவ சந்தியில் நிலத்தோற்றங்களை மேம்படுத்துதல்
8. நகரப் பூங்காக்களை மேம்படுத்துதல்
9. சிறுவர் பூங்காக்களில் நிலத்தோற்றங்களை மேம்படுத்துதல்
10. களுத்துறையில் இரட்டைப் பாலங்களின் நடுப் பகுதியில் அமைந்து காணப்படும் புகையிரத பாதை மற்றும் காலி பிரதான வீதி ஆகிய இடங்களுக்கு இடையில் காணிப் பிரதேசத்தின் ( தலாவ) நிலப்பகுதியில் நிலத்தோற்றங்களை மேம்படுத்துதல்.

இதற்கு மேலதிகமான விபரங்கள், சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் மற்றும் நிலைதகு சுற்றுச்சூழல் மூலோபாய திட்டம் மற்றும் செயல் திட்ட அமுலாக்கல் தொடர்பான மூலோபாயத் திட்டங்களின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

## 6.5.3. அனர்த்த முகாமைத்துவத் திட்டம் நிலைதகு சுற்றுச்சூழல் அபிவிருத்தி

அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு அதிக சாத்தியப்பாடுகள் காணபடுகின்ற பிரதேசங்களை இனங்காணல் மற்றும் அதன் பேரழிவுகளைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இந்தத் திட்டத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளன.

தற்போது காணப்படும் நிலைமை

களுத்துறை திட்டமிடல் பகுதியில் ஏற்படும் அனர்த்தங்களின் வகைகள் பின்வருமாறு அமைகின்றன;

1. வெள்ளம்

2. குடிநீர் பிரச்சினை
3. நிலச்சரிவு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்ற இடங்கள்
4. சுனாமி
5. மழைநீர் வெளியேற்றத்திலான இடர்பாடுகள்

1. வெள்ளம்

களுத்துறை திட்டமிடல் பகுதியானது, ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது பெரும் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகிறது. பலாத்தோட்டை அளவீடு மையத்தில் வெள்ளத்தின் அளவு அளவிடப்படுகிறது. களு கங்கை பகுதியின் இருபுறங்களிலும் அமைந்து காணப்படும் கிராம சேவகர் பிரிவுகள் பெரும்பாலும் இவ்வாறான வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகின்றன. மேலும், அதிக மழைவீழ்ச்சி இடம்பெறும் காலங்களில், கழிவுநீர்க் வடிகால்கள் நிரம்பி வழிவதன் விளைவாக, கழிவுநீர் உள்வரத்தும் ஏற்படுகிறது. 2014 தொடக்கம் 2018 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள நிலைமைகள் அட்டவணை இலக்கம் – 6.2 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.2 : 2014– 2018 க்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் களுத்துறை பிரதேச செயலக பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலை பற்றிய விபரங்கள்

| ஆண்டு | பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 02. 06. 2014 இருந்து 06. 06. 2014 வரை | 1224 | 4054 |
| 29. 09. 2015 | 160 | 689 |
| 15. 11. 2015 | 178 | 809 |
| 16. 05. 2016 இருந்து 28. 05. 2016 வரை | 241 | 993 |
| 26. 05. 2017 இருந்து 24. 06. 2017 வரை | 2942 | 11854 |

மூலம் : தேசிய அனர்த்த நெகிழ்திறன் சார் மையம் அனர்த்த சம்பவங்களுக்கான அறிக்கை– களுத்துறை மாவட்டம் ( 2018)

2. குடிநீர் பிரச்சினை

களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தில் பிரதான குடிநீர் ஆதாரமாக களு கங்கையானது விளங்குகிறது. வறண்ட பருவத்தில் உப்பு நீர் கலப்பதன் காரணத்தினால் (தை மாதம், ஆவணி மாதம், புரட்டாதி மாதம்) குழாய் மூலம் நீரை பயன்படுத்தும் மக்கள் பாதிக்கப்பட்டுகின்றனர். அத்தோடு, மக்களுக்கு தேவையான நீர்ப் பிரமாணமானது, கீத்ஹென நீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

உலர் பருவத்தில் நீரின் மின் கடத்தும் திறன் (Electrical conductivity) அதிகரிக்கிறது இந்த எண்ணிக்கை 750ms/c க்கு மேல் அதிகரித்தால், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையினால் கூறப்பட்டுள்ளவாறு குடிநீர் தேவைக்கு உகந்தது அல்ல. இங்கு காணப்படும் குடிநீர் தட்டுப்பாடு தொடர்பான விடயங்கள் அட்டவணை இலக்கம் – 6.3 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 6.3 : 2014 முதல் 2018 வரையிலான காலப்பகுதியில் களுத்துறை பிரதேச செயலக பகுதியில் இடம்பெற்ற குடிநீர்ப் பிரச்சினை பற்றிய விபரங்கள்

| ஆண்டு | பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 17. 03. 2016 இருந்து 28. 03. 2016 வரை | 1978 | 8383 |
| 29. 09. 2015 இருந்து 13. 02. 2017 வரை | 17,332 | 75,017 |

மூலம் : தேசிய அனர்த்த நெகிழ்திறன் சார் மையம் அனர்த்த சம்பவங்களுக்கான அறிக்கை– களுத்துறை மாவட்டம் ( 2018)

களுத்துறை பிரதேச செயலக பகுதியில் வாழ்கின்ற 56% மான மக்கள் தொகையினர் மற்றும் நகர சபை பகுதியில் வாழ்கின்ற 99% மான மக்கள் இந்த பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர். இந்த பிரச்சினை ஏற்படும் காலத்தில், குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. ஆனால், இது போதுமானதாக இல்லை என கூறப்படுகிறது. இப் பிரச்சினையை தீர்க்க, குறுகிய கால, நீண்ட கால தீர்வுகளை கண்டறிய வேண்டும்.
குறுகிய கால தீர்வாக, குடா கங்கையில் இருந்து, பொலத்துமோதராவில் உள்ள கீத்ஹென சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரை வெளிக்கொணர்ந்து, அப்பகுதிக்கு வினியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. நீண்ட கால தீர்வாக, களு கங்கையில், உப்பு நீர் தடுப்பு வேலி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. நிலச்சரிவினால் பாதிக்கப்படும் பகுதிகள்

நிலச்சரிவு அனர்த்தங்கள் தொடர்பான தரவுகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன நிலச்சரிவு அபாய நிலவரைபட அறிக்கை 2012 (Landslide Hazard Zoning mapping, 2012) இன் படி, பாதிப்புக்குள்ளாகக் கண்டறியப்பட்டுள்ள GN பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

i. மஹா கொனதுவ ( 701)
ii. கிதுலாவ ( 723)
iii. புலேட்டேன் மேற்கு ( 729C)

4. சுனாமி

2002 சுனாமி அனர்த்தத்தின் போது களுத்துறை திட்டமிடல் பகுதியில் பாதிக்கப்பட்ட 8491 குடும்பங்கள் மற்றும் 1891 வீடுகள் சேதமடைந்தன என தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கிராம சேவகர் பிரிவுகள் பின்வருமாறு;

i. தேஸ்ட்ரா களுத்துறை மேற்கு கி.சே பிரிவு (717/1)
ii. எத்தகம மேற்கு கி.சே பிரிவு (732A)
iii. கலமுல்ல வடக்கு கி.சே பிரிவு (731)
iv. கலமுல்ல தெற்கு கி.சே பிரிவு (731A)
v. களுத்துறை வடக்கு கி.சே பிரிவு (717)
vi. களுத்துறை தெற்கு கி.சே பிரிவு (725)
vii. களுத்துறை தெற்கு கி.சே பிரிவு (725A)
viii. குடா வஸ்கடுவ மேற்கு கி.சே பிரிவு (710B)
ix. மஹா வஸ்கடுவ வடக்கு கி.சே பிரிவு (714A)
x. மஹா வஸ்கடுவ தெற்கு கி.சே பிரிவு (714)
xi. பொஹொதேரமுல்ல மேற்கு கி.சே பிரிவு (707A)
xii. பொதுபிட்டிய வேரஸ்ட் கி.சே பிரிவு (708C)
xiii. தோட்டுபொல மேற்கு கி.சே பிரிவு (717B)
xiv. வித்யாஸரா கி.சே பிரிவு (717C)
xv. வெதும்மாகட கி.சே பிரிவு (730)

மூலம் : ஆரம்பநிலை அறிக்கை – 2, 2004 சுனாமி காரணமாக பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் கட்டிடங்கள் குறித்த கணக்கெடுப்பு, களுத்துறை பிரதேச செயலகப் பிரிவு, களுத்துறை மாவட்டம் – மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.

5. மழைநீர் பிரச்சினை

மழை நீர் வடிகால் அமைப்பு முகாமைத்துவத் திட்டத்தின் கீழ், குடா வஸ்கடுவ மற்றும் மஹா வஸ்கடுவ போன்ற பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏறத்தாழ 1.15 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை உள்ளடக்கிய மழைநீர் வடிகால் திட்டம், புகையிரதப் பாதைக்கும் காலி பிரதான வீதிக்கும் இடையில் அமைக்கப்படவுள்ளது. இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் ஏற்கனவே பின்னிணைப்பு – 15 இல் வழங்கப்பட்டுள்ளவாறான ஒரு திட்டத்தை தயாரித்துள்ளது.

### 6.5.3.1. அனர்த்த முகாமைத்துவ திட்டத்தின் படியான வலய மண்டல விபரங்கள்

களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தில் அனர்த்தம் ஏற்படும் நிலைமையினை அடிப்படையாகக் கொண்டு, இந்த பிரதேசத்தை மூன்று வலயங்களாகப் பிரிக்கலாம்.

i. பசுமை வளாகம்
ii. அடர்த்தி குறைந்த குடியிருப்பு வலயம்
iii. கடலோரப் பாதுகாப்பு வலயம்

I. பசுமை வளாகம்

களு கங்கைக்கான இட ஒதுக்கீடு ( 20 மீட்டர்கள்), ஹீணேடியண்கல கால்வாய் இட ஒதுக்கீடு ( 20 மீட்டர்கள்), அளுத் கால்வாய் இட ஒதுக்கீடு ( 20 மீட்டர்கள்),பொல்கொட ஏரி இட ஒதுக்கீடு ( 20 மீட்டர்கள்) கெப்பு கால்வாய் இட ஒதுக்கீடு ( 20 மீட்டர்கள்) போன்றவை இந்த வலயத்தில் உள்ளடங்குகின்றன. அத்தோடு வலய மண்டலத் திட்டத்தின் (Zoning Plan) கீழ் பல்வேறு விதமான குழுமங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த பசுமை வளாகமானது, தண்ணீர் தக்கவைக்கும் நோக்கத்திற்காகவும் மற்றும் திறந்த வெளி பயன்பாட்டிற்காகவும் ஒதுக்கப்பட வேண்டும்,

II. அடர்த்தி குறைந்த குடியிருப்பு வலயம்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் (NBRO) அடையாளப்படுத்தப்பட்ட நிலச்சரிவுகளினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் ஆகியவை இந்த மண்டலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மண்டலத்தில் குறைந்த அடர்த்தி கொண்ட குடியிருப்புத் தொகுகளும், குறைந்த அடர்த்தி கொண்ட சுற்றுலாக் குழுமங்களும் அமைக்கப்பட்டுள்ளன. சதுப்பு நிலங்கள், நெல் நிலங்கள், தாழ்வான பகுதிகள் அனைத்து விதமான வெள்ளக் குறைவை குறைப்பதற்காக பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், இந்த நிலச்சரிவுகளைக் குறைப்பதற்கு தற்போது காணப்படும் வனக்காப்பக பாதுகாப்பு தேவைப்படுகிறது.

III. கடலோரப் பாதுகாப்பு வலயம்

2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க கரையோர பாதுகாப்பு திருத்தச் சட்டத்தின் படி, 100 மீட்டருக்கு உட்பட்ட கடற்கரை பகுதியை பாதுகாப்பு வலயமாக வைத்திருத்தல் வேண்டும். அத்தோடு, சதுப்பு நிலக் கன்று (கண்டல் தாவரம்) நடுதல், ஆசன ஒழுங்கமைப்புக்கள், பொழுதுபோக்கு மற்றும் ஓய்வுநேர செயற்பாடுகள் இந்த வலயத்தினுள் அமைக்கப்படலாம். அனர்த்த முகாமைத்துவ திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள வலய மண்டலத் திட்டம் (Zoning Plan) தொடர்பான விபரங்கள் வரைபட இலக்கம் – 6.7 இல் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் அது தொடர்பான ஏனைய விதிகளும் ஒழுங்குமுறைகளும் தொகுதி II இல் கொடுக்கப்பட்டுள்ளன.




வரைபடம் 6.7 : களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தின் அனர்த்த தணிப்பு வலையமைப்பு திட்டம். 2018
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை 2018

### 6.5.4. பொது திறந்த வெளி மற்றும் பொழுதுபோக்கு செயல்பாடுகளுக்கான நிலத் திட்டம்

திட்டமிடல் பகுதியில் முற்கணிப்பு செய்யப்பட்டுள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப திறந்த வெளியை மதிப்பீடு செய்வது தொடர்பான விபரங்கள் இந்த திட்டத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக, தற்போது காணப்படும் நிலப் பரப்பில், முறையான செயற்பாட்டு மற்றும் செயற்பாடுகள் வரையறைக்குட்பட்ட பொழுதுபோக்குச் செயல்பாடுகளிலும், எதிர்காலத் தேவைகளுக்கும் சுற்றுச்சூழல் அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, மதிப்பீடு செய்து வருகிறது. நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிடல் நியமங்களின் படி, ஒவ்வொரு 1000 மக்களுக்கும் 1 ஹெக்டர் நிலத்தொகுதி என்ற விகிதாசார அடிப்படையாக கொண்டு அபிவிருத்தித் திட்டத்தில் பொது திறந்த வெளி இடங்களுக்கு வழங்கப்பட வேண்டும். மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையில் பதிவு செய்யப்பட்ட தரவின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டில் களுத்துறை திட்ட அதிகார எல்லைக்குட்பட்ட மக்கள் தொகை 170,835 ஆகும்.

அபிவிருத்தித் திட்டத்தின் தரவுகளது பகுப்பாய்வின் படி, 2030 ஆண்டிற்கான முற்கணிப்பு மக்கள் தொகையின் எண்ணிக்கை 199,854 ஆகும். இதன் பிரகாரம், குறைந்தபட்சம் 200 ஹெக்டேர் நிலப்பரபானது பொது திறந்த வெளிகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளுக்காக வழங்கப்பட வேண்டும். களுத்துறை திட்டமிடல் பகுதியில் பொழுதுபோக்கு வசதிகள், செயற்பாட்டு பொழுதுபோக்கு மற்றும் மந்தமான பொழுதுபோக்கு வசதிகள் என இரண்டு வகைகளாக கருதப்படுகின்றது. செயற்பாட்டு பொழுதுபோக்கு வசதிகளின் கீழ், பொதுமக்கள் சுறுசுறுப்பாக ஈடுபட தேவையான பொழுதுபோக்கு வசதிகள் உள்ளடங்குகின்றன. அவை பின்வருமாறு;

அ. விளையாட்டு
ஆ. நீச்சல்
இ. தடகளம்
ஈ. நடைப்பயிற்சி
உ. படகோட்டுதல்
ஊ. பாரம்பரிய மீன்பிடி

களுத்துறை திட்டமிடல் பகுதியில் மேற்படி தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டவையாக உள்ளன, அட்டவணை இலக்கம் – 6.4 இல் இது தொடர்பாக விவரிக்கப்பட்டுள்ளது. இதில் இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை/வழிகாட்டுதல்கள், இந்தத் திட்டத்தின் தொகுதி இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது

அட்டவணை 6.4 : களுத்துறை திட்டமிடல் பகுதியில் காணப்படும் நேரடி பொழுதுபோக்குப் பகுதிகள்

| இல | பூங்கா வகை | நிலப்பரப்பு ( ஹெக்டர்) |
|---|---|---|
| 1 | மிகச் சிறிய பூங்காக்கள் – Pocket Parks (EPP) | 1. 6 |
| 2 | சிறிய அளவிலான பூங்காக்கள் – Mini Park (EMP) | 18. 54 |
| 3 | நடுத்தர அளவிலான உள்ளூர் பூங்காக்கள் – Local Parks (ELP) | 1. 45 |
| 4 | கடற்கரை சார் பூங்காக்கள் – Beach Park (EBP) | 19. 47 |
| | மொத்தம் | 40. 52 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை ( 2018)

அட்டவணை இலக்கம் – 6.4 இல் இல் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம், களுத்துறை திட்டமிடல் பகுதியில் 40. 52 ஹெக்டேர் என்றளவிலான திறந்தவெளிப் பகுதிகளாக காணப்படுகின்றன. தற்போது காணப்படும் 170,836 மக்கள் தொகையினை அடிப்படையாக கொண்டு, 170 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் திறந்த வெளிகள் இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஆனால், அட்டவணை இலக்கம் – 6.4 இல் கொடுக்கப்பட்டுள்ளவாறான களுத்துறை திட்டமிடல் பகுதியில் காணப்படும் திறந்த வெளிகள், ஏற்கனவே உள்ள மக்கள் தொகைக்கு போதுமானதாக இல்லை. மேலும் தற்போதைய திறந்தவெளி பகுதிகளில் காணப்படும் வசதிகளும் போதுமானதாக இல்லை.

பொழுதுபோக்கு பகுதிகள் மற்றும் நூலகங்களின் வசதிகள் பின்வருமாறு அமைகின்றன.
அ) பொது நூலகங்கள்– 6
ஆ) பிரதேச சபைக்கு சொந்தமான நூலகங்களின் எண்ணிக்கை– 3
இ) நகர சபைக்கு சொந்தமான நூலகங்களின் எண்ணிக்கை– 2

ஈ) களுத்துறை போதி அறக்கட்டளைக்கு சொந்தமான நூலகங்களின் எண்ணிக்கை – 1

1) நகர மண்டபம் – 1
2) திரையரங்குகள் – 4
3) வாசிப்பு அறைகள்– 4
4) சனசமூக மண்டபம்– 37

2030 ஆண்டிற்கான முற்கணிப்பு மக்கள் தொகையின் எண்ணிக்கையானது 199,854 ஆக காணப்படுகின்றது. இந்த மக்கள் தொகையின் பொழுதுபோக்கு தேவையைப் பூர்த்தி செய்ய, குறைந்தபட்சம் 200 ஹெக்டர் என்றளவிலான திறந்த வெளிகள் வழங்கப்பட வேண்டும். களுத்துறை திட்டமிடல் பகுதியில் திறந்த வெளி மற்றும் பொழுதுபோக்குப் பிரதேசத்திற்கான திட்டம் பற்றிய மேலதிக விபரங்கள் அட்டவணை இலக்கம்– 6.5 மற்றும் பின்னிணைப்பு – 16 மற்றும் 17 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 6.5 : களுத்துறை திட்டமிடல் பகுதியில் 2019 – 2030 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலபகுதிக்கான அபிவிருத்திக்காக முன்மொழியப்பட்டுள்ள பொழுதுபோக்கு மற்றும் திறந்த வெளி பிரதேசத்திற்கான நிலத் திட்டம்.

| இல | பூங்கா வகை | நிலப்பரப்பு ( ஹெக்டர்) |
|---|---|---|
| 1 | முன்மொழியப்பட்டுள்ள உள்ளூர் பூங்காக்கள்<br>Proposed Local Parks | 1. 08 |
| 2 | முன்மொழியப்பட்டுள்ள நேர் நிலையில் அமையப்பெற்ற பூங்காக்கள்<br>Proposed Linear Park | 118 |
| 3 | கடற்கரை சார் பூங்காக்கள்<br>Proposed Beach Park | 45. 01 |
| | மொத்தம் | 164. 28 |
| 4 | தற்போது காணப்படும் பொதுத் திறந்தவெளிப் பகுதிகள் | 40. 51 |
| | ஒட்டு மொத்தம் | 204. 79 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை ( 2018)

### 6.5.4.1. முன்மொழியப்பட்டுள்ள பொழுதுபோக்கு மற்றும் திறந்த பகுதிகள் திட்டத்திற்கான மூலோபாயங்கள்

பின்வரும் காரணிகளில் அதிகபடியான கவனம் செலுத்தப்படும்

– தற்போது காணப்படும் அனைத்து விதமான விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்த வெளிகளாக பயன்படும் காலியிடங்களை பயன்படுத்துதல், புனரமைத்தல் மற்றும் வகைப்படுத்தல் மற்றும் அதிகபட்ச சாத்தியமான அளவில் பொழுதுபோக்கு நோக்கங்களை முன்னெடுத்தல்.

– தற்போது காணப்படும் விளையாட்டு மைதானங்களை வசதிகளுடன் புனரமைத்தல்

– தற்போது காணப்படும் திறந்த வெளிகள் மற்றும் காலி நிலப்பகுதிகளில், சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் மைதானங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல்.

– திறந்த வெளிகள் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை அமுலாக்குதல் மூலம் அங்கீகாரமற்ற கட்டுமானங்களைக் கட்டுப்படுத்துதல்

– தற்போது காணப்படும் விளையாட்டு மைதானங்கள் மற்றும் பூங்காக்களை பராமரித்தல் தொடர்பான பொறிமுறை மற்றும் முகாமைத்துவதுவத்தை மேம்படுத்தல்.

- மரநடுகையின் மூலம் நிலத்தேற்ற அமைப்பின் தரத்தை மேம்படுத்தல்: கிடைக்கப்பெறும் நிலத்தின் தன்மைக்கு பொருத்தமான தாவர வகைகளை பயன்படுத்தலாம். ஒரே மாதிரியான அடையாள அம்சத்தை நகருக்குள் கொண்டு வரும் விதத்தில் மரங்கள் தேர்வு செய்யப்படலாம்.

- திட்டமிடல் கருத்தின் பிரகாரம் வீதி அபிவிருத்திப் பணிகளில் மரகன்றுகள் நடுதல் மற்றும் நிலத்தேற்றத்திற்கான அபிவிருத்திகளை செய்தல்.

- சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றுவதன் பொருட்டு, சமூக மற்றும் பொழுதுபோக்கு வசதிகளாக உயர்– இறுதி விளையாட்டு சங்கங்கள், விடுமுறை இல்லங்கள், மாளிகைகள், சுற்றுலா விடுதிகள் போன்றவற்றை நிறுவுதல்.

#### 6.5.4.2. 2030 ஆம் ஆண்டளவில் வெப்பநிலையைக் குறைப்பதற்கான மூலோபாயங்கள்

- இலங்கை பசுமை கட்டிட மன்றத்தின் நியமத்தினை அடிப்படையாகக் கொண்டு அனைத்து விதமான அரசாங்க மற்றும் இடைநிலை அரசாங்க கட்டிடங்கள் கட்டுமானம் செய்யப்பட உள்ளன.
- அலுவலகங்கள் மற்றும் குடியிருப்பு கட்டிடங்களை கட்டுமானம் செய்யும் போது, பசுமை கூரையுடன் கூடிய நீர் தெளிப்பான்கள் (Water sprinkler) அறிமுகப்படுத்தப்படும்.
- கட்டிடங்களுக்கு வண்ணங்களைத் தீட்டும் போது மென் நிறங்களை பயன்படுத்த வீடு கட்டுநர்களுக்கு பரிந்துரைக்கப்படுகின்றது.
- முன்மொழியப்பட்டுள்ள அனைத்து விதமான வாகன நிறுத்துமிடங்களுக்கும் பசுமையாக்க நிறுத்தும் கருத்தாக்கம் (green parking concept) அறிமுகப்படுத்துதல் மற்றும் தற்போது காணப்படும் வாகன நிறுத்தங்களை பசுமையாக்க நிறுத்த பகுதிகளாக புனரமைத்தல்.
- நீர் உறிஞ்சும் திறன் உறுதி செய்யப்பட்டால், ஊடுபூட்டு அடைப்புகளை (Interlock paving) செப்பனிடுவதற்கு பயன்படுத்த முடியும், லைட் கலர் பொருள் மட்டுமே அனுமதிக்கப்படும்.
- தற்போது காணப்படும் விளையாட்டுத் மைதானங்கள், பூங்காக்கள் மற்றும் திறந்த வெளி இடங்கள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் திறந்த வெளி அடைப்பிடங்களை பசுமையாக்க கருத்தாக்கம் படி செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது காணப்படும் திறந்த வெளிகள் பற்றிய விபரம் பின்னிணைப்பு 17 இல் கொடுக்கப்பட்டுள்ளது.




வரைபடம் 6.8 : களுத்துறை திட்டமிடல் பிரதேசத்திற்கான பொது திறந்த வெளிகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் தொடர்பான திட்டம் (2019 -2030)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

### 6.5..5.விவசாய திட்டம்

நெல், இறப்பர், தென்னை மற்றும் இலவங்கப்பட்டை என்பன திட்டமிடல் பிரதேசத்தில் பிரதான விவசாய நடவடிக்கைகளாக உள்ளன. நிலத்தின் மொத்த நிலப்பரப்பில் இறப்பர் – 10.55% மான, தேங்காய் – 5.22% மான இலவங்கப்பட்டை – 0.4% மான மற்றும் நெல் – 39.7% மான என்ற அடிப்படையாக கொண்டு பரந்து காணப்படுகின்றன.

விவசாயத் துறையில் இருந்து கிடைக்கும் பொருளாதாரப் பங்களிப்பு மிகவும் குறைவாக உள்ளது. இது 4.59% மான ஆக பதிவாகியுள்ளது. மேலும், தற்போது காணப்படும் தாழ்வான பகுதிகளை பாதுகாக்கவும், பொருளாதாரத்தில் அதன் பங்களிப்பை பராமரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழுள்ள ஈரநில விவசாயப் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. இதனோடு சம்மந்தப்பட்ட ஒழுங்குமுறைகள், இந்தத் திட்டத்தின் தொகுதி இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது

இறப்பர் உற்பத்தியானது, கிதுலாவ கிராம சேவகர் பிரிவில் பிரதானமாக பரந்துவிரிந்த காணபடுகின்றது. அத்தோடு மொத்த நிலப்பரப்பில் 10.5% மான என்ற வகையில் காணப்படுகின்றது. இறப்பர் பயிர்செய்கையோடு தொடர்பு பட்டதாக பின்வரும் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- இறப்பர் பயிர்செய்கை நிலங்களை தொழிற்சாலை நோக்கத்திற்காக பயன்படுத்தல்
- இறப்பர் சந்தையில் விலை வீழ்ச்சியடைவதை மற்றும் இறப்பர் காணிகளை வேறு பயிர்ச் செய்கைக்காக மாற்றுதல்.
- பயிற்சி பெற்ற தொழிற்காரர்களின் பற்றாக்குறை
- இறப்பர் காணிகளை உப பிரிவின் மூலம் குடியிருப்பு நோக்கத்திற்காக இறப்பர் காணிகளை பயன்படுத்துதல்.

இறப்பர் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், அகலவத்தையிலுள்ள தேசிய இறப்பர் ஆராய்ச்சி நிலையம் மற்றும், இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றினால் தயார் செய்யப்பட்ட முன்மொழிவுகள் அமுலாக்கம் செய்யப்பட வேண்டிய தேவை அடையாளம் காணப்பட்டுள்ளது. அவையாவன;

1. நீர்தாங்கு பிரதேசங்களில் ஏற்படக் கூடிய மண் அரிப்பு மற்றும் மண் சரிவு அபாயங்களை தடுக்கும் முகமாக, அரச மற்றும் தனியார் நில உரிமையாளர்களை, அந்நிலங்களில் இறப்பர் பயிர்செய்கையை மேற்கொள்வதற்கு ஊக்குவித்தல்.
2. சிறிய அளவிலான இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் மானிய தொகையை இரட்டிப்பாகுதல்.
3. விவசாய நீட்டிப்பு நிகழ்சிகளின் மூலம், இறப்பர் பயிர்ச்செய்கையுடன், குறிப்பிட்ட கால இடை வெளிக்குள் ஊடு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளவும், மேலும் உற்பத்தியை அதிகரிக்கும் முகமாக, மழை நீர் முகாம்களை இடுவதற்கும் விவசாயிகளை உற்ச்சாகப்படுத்துதல்.

தென்னை பயிர்ச்செய்கையானது, வானாதமுள்ள கிராம சேவகர் பிரிவிற்குள்ளேயே அதிகம் பரவியுள்ளதுடன்,அது மொத்த நில பரப்பின் 5.2% மான ஆகும். தென்னை அபிவிருத்தி அதிகாரசபையானது, அப்பயிர்ச்செய்கையை அதிகரிக்கும் நோக்கில் மானியங்களை வழங்குவதற்கு முன்மொழிந்துள்ளதுடன் இந்த திட்டத்தின் கீழ் அவ்வாலோசனைகளை அமுல் படுத்துவதற்கும் தீர்மானித்துள்ளது.

## 6.6. கலாசாரம், மதம் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவ திட்டம்.

களுத்துறை திட்டமிடல் பிரதேசமானது, பல்வேறான கலாசார பண்புகள், கலாசார பாரம்பரியங்களை தன்னகத்தே கொண்டிருப்பதனால், அதன் தனித்தன்மையை பாதுகாப்பதற்காக, அவை முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்த மூலோபாய திட்டத்தின் மூலம், களுத்துறை பிரதேச செயலக பிரிவு வளாகத்தினுள் காணப்படும், கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை பாதுகாப்பதற்கான சிறந்த செயன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

அந்த வகையில், களுத்துறை போதி மற்றும் அதன் சுற்று வளாகமானது, புனித பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மேலும்,போதி மர வளாகத்திலிருந்து 300 மீட்டருக்கு உட்பட்ட பகுதியில், அபிவிருத்திகளை சிறந்த முறையில் கட்டுப்படுத்துவதற்கு தேவையான கட்டிட உயரங்கள், முகப்பு நிறங்கள் மற்றும் அனுமதிக்ககூடிய பயன்பாடுகள், போன்ற இன்னோரன்ன ஒழுங்கு முறைகள் அத்தியாயம் II இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

களுத்துறை பிரதேச செயலக வளாகமானது, கலப்பு கலாசார வலயம் என்பதுடன், வெவ்வேறான மத மற்றும் பாரம்பரிய பண்புகளை அங்கு காண முடியும். அவ்வாறன மத தளங்களில் அநேகமானவை பௌத்த தளங்களாவதுடன், அங்கு வருகைதரும் பெரும்பான்மையினர் சிங்கள மக்களாவர்.

### 6.6.1.சில பௌத்த தளங்கள்

1. வரலாற்று சிறப்பு மற்றும் பாரம்பரியம் மிக்க களுத்துறை போதி மற்றும் சுற்று வளாகம்.
2. களுத்துறை வடக்கு பகுதியில் அமைந்து காணப்படும் அசோகாராம மஹா விகாரை.
3. ஶ்ரீ சுதர்மாகார பாரம்பரிய விகாரை.
4. வலுகாராம மஹா விகாரை.
5. மகீசர்யானாராம பாரம்பரிய ஶ்ரீ மஹா விகாரை.
6. புலினதாலாராம மஹா விகாரை.
7. கந்தே பாரம்பரிய விகாரை.
8. ஶ்ரீ நிகோதாராம மஹா விகாரை.
9. ராஜகுரு ஶ்ரீ சுபுதி மஹா விகாரை.
10. பாரம்பரிய விவேகாராம வஜ்ரகொத் விகாரை.
11. கனேவத்தை பாரம்பரிய விகாரை.
12. மல்அஸ்னே ராஜமஹா விகாரை.

### 6.6.2. கலாசார நிகழ்வுகள்.

மேற்குறிப்பிட்ட பௌத்த ஸ்தலங்களை மையப்படுத்தி அநேகமான கலாசார நிகழ்வுகள் இப் பிரதேசத்தில் இடம் பெறுகின்றன. அவற்றுள் மிஹிந்து மஹா பெரஹர என்பது ஒரு முக்கிய நிகழ்வாகும். இந்த தளங்களுக்குள், கலபுகம ஶ்ரீ சுமன்கலாராமைய, உகல்போட மல்சேன ரஜ மஹா விகாரை, இதகம விஜயராம விகாரை போன்றன,இந்த மிஹிந்து மஹா பெரஹர நிகழ்வை நடத்தி வருகின்றன. அதற்கு மேலதிகமாக, கீழ்வரும் கலாசார நிகழ்வுகளும் பிரதேசத்தின் கலாசார பாரம்பரியத்தை எடுத்தியம்புகின்றது என்றால் அது மிகையாகாது.

1. ஹேன வத்த முனசிங்க விஜயராஜ விகாரை – வருடாந்த பிணர மஹா பெரஹர.
2. களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் தீபாராமைய விகாரை – சம்புத்தா ஜயந்தி மஹா பெரஹர.
3. கிதுலாவ மிஹிகத்தாவத்த ஶ்ரீ சம்போதி விகாரை – வருடாந்த எசல மஹா பெரஹர.

மேற்குறிப்பிட்ட பௌத்த தளங்களுக்கு மேலதிகமாக வேறு சில பௌத்த தளங்கள், களுத்துறை பிரதேச செயலக பிரிவு வளாகத்தினுள் காணப்படுகின்றன.

இஸ்லாம் மத மையங்கள்

1. களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் டி சில்வா வீதியில் காணப்படும் பள்ளி வாசல்.
2. களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் வெத்தும்கட வீதியில் அமைந்து காணப்படும் பள்ளி வாசல்
3. களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் நக்கான்டியா பள்ளி வாசல்.
4. மஹா ஹீணேடியங்கல பிரதேசத்தில் அமைந்து காணப்படும் பள்ளி வாசல்
5. களுத்துறை ஜான் தெருவில் அமைந்து காணப்படும் அல் டோறு பத்துள் ஹசன்ய பள்ளி வாசல்
6. சிறிய முஸ்லிம் பள்ளி வாசல் – இல 269, காலி பிரதான வீதி

கத்தோலிக்க தேவாலயங்கள்

1. களுத்துறை வடக்கு பிராந்திய தொட்டுபோல பாதையில் அமைந்து காணப்படும் தேவ சபை
2. களுத்துறை வடக்கு பிராந்திய தொட்டுபோல பாதையில் அமைந்து காணப்படும் புனித யோவான் தேவாலயம்
3. களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் தேக்கவத்த பகுதியில் உள்ள ஏடன் தேவாலயம் ( Most Eden church)
4. களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் சிரிகுறுஸ தேவலாயம்
5. மெதடிஸ்த தேவாலயம், இலக்கம் – 220, காலி பிரதான வீதி, களுத்துறை
6. பரிசுத்த தூய ஆவியானவர் தேவாலயம், நகோடை
7. பிலிப் நேரி தேவாலயம், இல 17, பிலிப் நேரி தெரு, கட்டுக்குருந்த, களுத்துறை
8. புனித அந்தோனியார் தேவாலயம், கலமுல்ல, களுத்துறை
9. ஜேசு பாலகன் தேவலாயம், கலமுல்ல, களுத்துறை
10. புனித மரியாள் தேவலாயம், கலமுல்ல, களுத்துறை
11. புனித செபஸ்தியார் தேவலாயம்

வேறு

1. களுத்துறை ஸ்ரீ அம்மன் கோவில்
2. பழைய கதிர்காம கோவில்
3. புனித. யோவான் ஆலயம்.
4. உக்கல்போட மஹா தேவாலயம்

இந்த மத வழிபாட்டுத்தலங்களை நோக்கும் இடத்து , களுத்துறை அம்மன் கோவிலில் நடைபெறும் வெல பெராஹரா, பழைய கதிர்காம கோவில் ஆகிய இடங்களில் வருடாந்த பெரஹேரா மற்றுமொரு இரண்டு பிரதான கலாச்சார நிகழ்வுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், அனைத்து விதமான தேவாலயங்களிலும் வருடாந்த ஊர்வலங்கள் நடைபெறுகின்றன

### 6.6.3. பாதுகாப்பு பிரதேசங்கள்.

மேற்குறிப்பிட்டதற்கு மேலதிகமாக, சில கலாசார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தளங்களும் திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படுகின்றன. அவை கீழ்வரும் அட்டவணை இலக்கம் – 6.6 இல் காட்டப்படுகின்றது.

அட்டவணை 6.6 : களுத்துறை திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படுகின்ற வரலாற்று மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடங்கள்.

| கலாசார ரீதியானவை | வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. |
|---|---|
| – ரிச்மண்ட் கோட்டைக் கட்டிட வளாகம் (Richmond Castle)<br>– தியகம பலுனு பாறை (Diyagama Palunu) | – நகர சபை கட்டிடம்<br>– கன்னோதய வித்தியாலயம்.<br>– பொலிஸ் கண்காணிப்பாளர் அலுவலகம்.<br>– மாவட்ட நீதிமன்ற கட்டிடம்.<br>– களுத்துறை மணிக்கூட்டு கோபுரம் |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2017)

இந்த இடங்களை பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் மற்றும் அது தொடர்பான விதிமுறைகள் தொகுதி இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கலாசார ஸ்தலங்களையும் நிகழ்வுகளையும் பாதுகாக்க விசேட கலாச்சாரப் பகுதி இந்த திட்டத்தின் கீழ் முன்மொழியப்படவில்லை. மேலும், கலாசார மற்றும் பாரம்பரியத்திற்கான தனித் திட்டமும் தயாரிக்கப்படவில்லை. ஆனால், அந்த முக்கியமான இடங்களை பாதுகாக்கவும், பாதுகாப்பு தேவையான செயல் திட்ட நடவடிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன. மேலும் பாதுகாப்பு தளங்கள் தொல்லியல் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## 6.7. குடியிருப்பு அடர்த்தி மற்றும் பரம்பல் திட்டம்

2030 ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட வேண்டிய குடியிருப்பு சார் வலயங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் குடியிருப்பு சார் ஊக்குவிப்பு பகுதிகள் அபிவிருத்தி செய்தல், குடியிருப்பு அடர்த்தி மற்றும் பரம்பல்தொடர்பான விபரங்கள் என்பன இந்த திட்டத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளன

இந்த திட்டம் குறித்த தொலைநோக்குப் பார்வையுடன், களுத்துறை நகரம், அனர்த்தங்களிலிருந்து விடுபட்ட நகரம் என்ற வகையில், வசிப்பவர்களுக்கு வசதியாகவும் மற்றும் சௌகரிய வாழ்வியலை கொடுக்கும் முகமாகவும் உருவாக்கப்படவுள்ளது. இந்த நோக்கத்தை அடைவதற்கு இந்த திட்டம் தயார் செய்யப்பட்டது.

இந்த குடியிருப்பு சார் அபிவிருத்தி திட்டம் தயாராவதற்கான காரணமாக, களுத்துறை பிரதேச செயலகப் பகுதி இயற்கைப் பேரழிவுகளுக்கு உள்ளாகியமை மற்றும் சுற்றுச் சூழல் சார் உணர்திறன் உள்ள பிரதேசங்களை கொண்டிருப்பதன் காரணமாக மக்களின் செறிவுவைக் குறைத்தல் காணப்படுகின்றது. எனவே ஒரே இடத்தில் வசதிகளை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்படலாம். எனவே, பரந்துபட்ட வகையில் சேவைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக, 2030 ஆம் ஆண்டிற்கான அதிகரித்து வரும் மக்கள் தொகை பரம்பல் உள்ளடங்கும் அடர்ந்த பகுதிகளையும், குறைந்த அடர்த்தியான பகுதிகளையும் தீர்மானிக்க குடியமர்வு பொருத்தக் பகுப்பாய்வுகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

இந்த நோக்கத்தை அடைவதற்கு இரண்டு மூலோபாயங்கள் கையாளப்பட வேண்டும்.

1. அனர்த்த பாதிப்பு உள்ள பகுதிகள் மற்றும் சுற்றுச் சூழல் உணர்திறன் வாய்ந்த பகுதிகளில் உள்ள மக்கள் தொகையை, வலய மண்டல விதிமுறைகளின் (Zoning regulation) மூலம் கட்டுப்படுத்துதல்.

2. பல்வேறு விதமான அடர்த்திகளில் நான்கு குடியிருப்பு சார் குழுமங்கள் உருவாக்குதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்து வலய மண்டல விதிமுறைகளின் மூலம் நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

பரவிய நிலையின் அடிப்படையாக கொண்டு உள்ள மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கும் முகமாக, சேவைகளுக்கான அணுகல் நிலைமைகள் பிரதான அம்சமாக கருதப்பட்டது. இதன் மூலம், குடியிருப்பு சார் குழுமங்களுக்கான இணைப்பு புள்ளிகள் அடையாளம் காணப்பட்டு, அதன் மூலம், அதன் ஒருங்கிணைப்பு அம்சங்களுடன் கூடிய சாலைத் தொடர்புகள் கண்டறியப்பட்டுள்ளன. பின்னிணைப்பு – 19 இல் காட்டப்பட்டுள்ளவாறு "சேவைகளை சாதிப்பதற்கு ஏற்ற தன்மை (Easyness to achieve service)" என்ற சேவையைப் பயன்படுத்தி, தற்போது காணப்படும் சேவைகளும், அந்த சேவைகளுக்கான அணுகுமுறையும் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இரண்டாவதாக, சாலைத் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒவ்வொரு முனைவு புள்ளிகளுக்கும் ஏற்ற எடை, பின்னிணைப்பு – 20 இல் உள்ளவாறு "ஒருங்கிணைப்பு முனைய புள்ளிகள் முன்னுரிமைப் பகுப்பாய்வு (nodal points priority analysis)" மூலம் கண்டறியப்பட்டது. மேற்கண்டவற்றினை அடிப்படையாக கொண்டு அபிவிருத்தி செய்யத் தக்கது குடியிருப்பு சார் முனைவுப் புள்ளிகள் பின்வருமாறு கண்டறியப்பட்டுள்ளன.

எனவே, 2030 ஆம் ஆண்டு காலப்பகுதிகாக, பல்வேறு விதமான அடர்த்தி வலயங்களுக்கு இடையில் முன் கணிக்கப்பட்ட 199,854 என்ற அளவிலான மக்கள் தொகையின் பரம்பலின் விபரம் பின்வருமாறு;

– குடியிருப்பு சார் முனையங்கள் (Residencial Nodes) – மத்திய சந்தி, மொரன்துடுவ
– சுற்றுப்புற சூழல் சார் முனையங்கள் (Neighborhood Nodes) – பாலத்தோட்டை, கொலன்னியா, மல்வத்தை, உகலபோடா, மில்லஸ் சந்தி, எலமதோதரா
– சுகாதார சேவை முனையங்கள் (Health service Nodes) – நாகொட

வணிக பகுதியில் முன்கணித்த மக்கள் தொகை மாறாமல், 29,626 இருக்கும் என்று கருதப்பட்டது. அதற்கு அமைவாக, பிற பகுதிகளில் விநியோகிக்கப்பட வேண்டிய சமநிலை முன்னறிவிப்புத் தொகை 170,228 ஆகும். இது மூன்று அடர்த்திகளில் நான்கு குடியிருப்புப் பகுதிகளிடையே பகிர்ந்தளிக்கப்படும். இதற்காக களுத்துறை பிரதேச செயலகத்தில் தற்போது காணப்படும் அடர்த்திகள் அதிகபட்சமும் ஆகக் குறைந்தும் கருதப்பட்டது. தற்போதைய அபிவிருத்தி நிலைமைகளில்கூட அந்த அடர்த்திகள் மாறாமல் இருந்ததால், எதிர்கால அபிவிருத்தி நிலைமைகளுடன் அந்த அடர்த்தி நீடிக்க வாய்ப்பிருக்கிறது.

களுத்துறை பிரதேச செயலக பகுதியில் அதிகபட்ச குடியிருப்பு சார் அடர்த்தி சதுர கிலோ மீட்டருக்கு 21,426. 6 பேர். அதிக அடர்த்தி கொண்ட குடியிருப்பு சார் குழுமம் மற்றும் அதிக அடர்த்தி கொண்ட உயரக்கட்டுப்பாட்டு குழுமத்திற்கு இந்த அடர்த்தி பயன்படுத்தப்பட்டது. குறைந்த அடர்த்தி கொண்ட குடியிருப்புக் குழுமத்தில், சதுர கிலோ மீட்டருக்கு நபர்களுக்கு குறைந்தபட்ச அடர்த்தி 903. 88 பேருக்கு வழங்கப்பட்டது. இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட மதிப்பு மிதமான அடர்த்திக் குடியிருப்புக் குழுமத்தில் பயன்படுத்தப்பட்டது. ஆக, இந்த நான்கு குழுமங்களில் அதிகபட்ச மக்கள் தொகை கணக்கிடப்பட்டது.

அதிகபட்ச மக்கள் தொகை = நிலத்தொகுதியின் அதிகபட்ச மக்கள் அடர்த்தி

அதிகபட்ச மக்கள் தொகை விகிதாரசாரத்தின் படி, சமநிலை மக்கள் தொகை (170,228) பரம்பலானது குடியிருப்பு சார் குழுமங்களுக்கிடையிலும் பரம்பி காணப்படுகின்றது. அதற்காக அவ் வலயங்களுக்கு பொருத்தமான மக்கள் தொகை கணக்கிலெடுக்கப்படும்.

சமநிலை மக்கள் தொகை அடர்த்தி விகிதாரசாரம்= குழுமத்திற்கான உத்தேச மக்கள் தொகை

எனவே, பல்வேறு விதமான அடர்த்தி நிலவரங்களைக் குடியிருப்பு சார் குழுமங்களில் காணப்படும் மக்கள் தொகை பரம்பல் தொடர்பான விபரங்கள் அட்டவணை 6.7 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 6.7 : பல்வேறு விதமான குடியிருப்பு சார் குழுமங்களில் காணப்படும் மக்கள் தொகை அடர்த்தி மற்றும் பரம்பல் தொடர்பான நிலவரங்கள்

| குடியிருப்பு சார் குழுமம் | மக்கள் தொகை | முன்மொழியப்பட்டுள்ள அடர்த்தி விபரங்கள் |
|---|---|---|
| அதியுயர் அடர்த்தி குடியிருப்பு சார் குழுமம் (High Density Residential Zone) | 91568 | 6324. 61 |
| அதியுயர் அடர்த்தி உயரக் கட்டுப்பாட்டு குடியிருப்பு சார் குழுமம் (High Density Height Control Residential Zone) | 15895 | 6297. 27 |
| மிதமான அடர்த்தியிலான குடியிருப்பு சார் குழுமம் (Moderate Density Residential Zone) | 57599 | 3281. 40 |
| குறைந்தளவு அடர்த்தியிலான குடியிருப்பு சார் குழுமம் ( Low Density Residential Zone) | 5166 | 3281. 90 |
| மொத்த மக்கள் தொகை | 170228 | 265. 62 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை ( 2018)

குடியிருப்புத் திட்டத்தின் கீழ் நான்கு குழுமங்களில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள திட்டமிடல் பகுதியில் உள்ள முற்கணிப்பு தொகை கீழ்க்கண்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் 6.9 : களுத்துறை திட்டமிடல் பிரதேசத்திற்கான குடியிருப்பு அடர்த்தி மற்றும் குடிப்பரம்பல் (2019 – 2030)
மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை(2018)

## 6.8. செயல் திட்ட அமுலாக்கத்திற்கான மூலோபாயத் திட்டம்

களுத்துறை பிரதேச செயலகப் பிரதேசத்திற்காக தயார் செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் தொலை நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கு ஐந்து மூலோபாய திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலே விளக்கியதன் படி, இந்த 05 திட்டங்களில் பொருளாதார அபிவிருத்தி மூலோபாயத் திட்டம், உள்கட்டமைப்பு அபிவிருத்தி மூலோபாயத் திட்டம், நிலைதகு சுற்றுச்சூழல் முகாமைத்துவ மூலோபாயத் திட்டம், குடியமர்வு அடர்த்தி மற்றும் குடிப்பரம்பல் தொடர்பான மூலோபாய திட்டம் மற்றும் கலாச்சார மற்றும் பாரம்பரிய முகாமைத்துவ மூலோபாயத் திட்டம் ஆகியவை அடங்கும். இந்த திட்டங்களின் கீழ், 72 செயல் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த 72 செயல் திட்டங்களுக்கு இடையேயான முன்னுரிமைப்படுத்தல் பட்டியல் இந்த அமலாக்கத் திட்டத்தின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது.

### மூலோபாயக் செயல் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தல்

இந்த செயல் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதில் முதல் படியாக, தொலைநோக்குப் பார்வையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அடிப்படை மற்றும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள் கவனத்தில் கொள்ளப்படும். இவ்வாறு, நியாய வாரியான ஒப்பீடு (Pairwise Comparison) செய்யப்பட்டது. அதன் பின்னர், இந்த முன்னுரிமைப்படுத்தப்பட்ட செயல் திட்டங்கள் மூலம் இலக்கை அடைவதற்கான சாத்தியக்கூறு அடிப்படையாகக் கொண்டு, எடை சரிபார்ப்புப் பட்டியல் (weighted check list) முறையின் கீழ் இந்த திட்டத்தின் 03 குறிக்கோள்களின் கீழ் அணி வகுத்து வைக்கப்பட்டன. செயல் திட்டங்கள், அமுல்படுத்தும் முகவர் நிறுவனங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இந்த செயல் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான கால அவகாசமானது கீழ்க்கண்டவாறு விபரங்களோடு ஒன்றிணைத்து தரப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக, 2019 -2030 களுத்துறை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட மூலோபாய செயற்திட்டங்கள் பின் இணைப்பு 21 இன் கீழ் காட்டப்படுகின்றது.

| | மூலோபாயக் செயல் திட்டம் | செயற்ப்பாட்டுத் திட்டங்கள் உள்ளடங்கும் பிரதான திட்டம் | அமுல்படுத்தும் முகவர் நிறுவனம் | 5 ஆண்டுகளில் | 10 ஆண்டுகளில் |
|---|---|---|---|---|---|
| 1 | களுத்துறை தெற்குப் பிராந்தியத்தில் காலி பிரதான வீதியை அண்டிக் அமைந்துள்ள "சரலக்வத்த" என்ற பகுதிக்கு தற்போதுள்ள நீதிமன்ற கட்டடத் தொகுதியை இடம்மாற்றம் செய்தல் | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – நீதி அமைச்சு | | |
| 2 | களுத்துறை தெற்கு பிராந்தியத்தின் நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் அமைந்துள்ள அரசாங்க அதிபரது குடியிருப்பாக விளங்கும் பழைய பங்களாவானது "லக்சல" வாக மாற்றப்படவுள்ளது. | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 3 | களுத்துறையில் தற்போது காணப்படும் நீதிமன்ற கட்டடத் தொகுதி வளாகத்தை ஆடம்பர வணிக வளாகமாக மாற்றுதல். | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 4 | களுத்துறை பிரதேச செயலக பிரிவு வளாகத்தினுள் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில், மலசலம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ திட்டமொன்றை நடை முறைப்படுத்துதல். | மலசலம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ திட்டம் | – தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | | |
| 5 | புகையிரத பாதை மற்றும் காலி பிரதான வீதி ஆகிய இடங்களுக்கு இடையில் உள்ள நிலப்பகுதியில் (களுத்துறையில் இரட்டைப் பாலத்தின் அருகில்) நிலத்தோற்றங்களை மேம்படுத்துதல். | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – களுத்துறை நகர சபை<br>– நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 6 | களுத்துறை நகர சபைப் பகுதிக்குள் அமையப்பெற்ற பலாத்தோட்ட வீதி பகுதியிலுள்ள மணிக்கூட்டு கோபுரம் முதல் ஆயுர்வேத மையம் வரையிலான வீதியின் இருபுறமும் மரம் நடுதல் | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – களுத்துறை நகர சபை<br>– நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | ஸ்ரீ சுமங்கல மாவத்தை தெற்கு மற்றும் அப்ரு மாவத்தை (Abru Mawatha) பாதைகளை காலிடோ கடற்கரைக்கு செல்லும் முறையில் அபிவிருத்தி செய்தல். | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – களுத்துறை நகர சபை<br>– மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 8 | குட ஹீணேடியங்கல வாய்க்காலின் இருபுறங்களிலும் அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசத்தில் நேர்கோட்டுப் பூங்கா (Linear Park) ஒன்றை அபிவிருத்தி செய்தல் | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – களுத்துறை நகர சபை<br>– நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 9 | களு கங்கைப் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் மிதக்கும் வர்த்தக நிலையங்கள் (floating trade stalls) அமைத்தல். | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – களுத்துறை நகர சபை<br>– நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 10 | நாகொட ஆதார வைத்தியசாலை வளாகத்தையும் மற்றும் குழந்தைகள் மற்றும் மகப்பேறு வைத்தியசாலையையும் ஒன்றிணைக்கும் வகையில் உப வீதியை அபிவிருத்தி செய்தல். | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – களுத்துறை நகர சபை<br>– நகர அபிவிருத்தி அதிகாரசபை<br>– இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | | |
| 11 | களுத்துறை போதி மர வளாகத்திற்கு சொந்தமாக காணப்படும் பூ கடைகளை மீண்டும் புதுப்பித்தல் | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – களுத்துறை போதி மர அறக்கட்டளை | | |
| 12 | வெள்ளக் கட்டுப்பாட்டுக்காக தற்போதுள்ள வடிகால் அமைப்பு முறைமைகளில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளுதல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – களுத்துறை நகர சபை<br>– நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 13 | களுத்துறை சைத்தியம் உள்ள வளாகத்தை அடுத்து காணப்படும் 300 மீட்டர் உட்பட்ட பிரதேசங்களுக்குள் இடம்பெறுகின்ற கட்டிடங்களது நிர்மாண | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – களுத்துறை நகர சபை | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கைகளானவை களுத்துறை சைத்தியத்தின் உயரத்தை விட அதிகரிக்காத வண்ணமாகவும் மற்றும் அதன் முன்புறத்தை நோக்கி அமையப்படாததுமாக இருக்க வேண்டும் | | – நகர அபிவிருத்தி அதிகாரசபை<br>– களுத்துறை பிரதேச சபை | | |
| 14 | நீரோட்டப் பாதைகளுக்கான இட ஒதுகீட்டு வலயத்தை பாதுகாத்தல் | நிலையான சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாய திட்டம் | – நகர அபிவிருத்தி அதிகாரசபை<br>– களுத்துறை நகர சபை<br>– களுத்துறை பிரதேச சபை<br>– இலங்கை நீர்ப்பாசன திணைக்களம் | | |
| 15 | நிரந்தரமான கழிமுக பகுதியை களு கங்கைக்கு தோற்றுவித்தல் மற்றும் மணல் திட்டுகளைப் பாதுகாத்தல். | நிலையான சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாய திட்டம் | – கரையோரப் பாதுகாப்பு திணைக்களம்<br>– இலங்கை நீர்ப்பாசன திணைக்களம்<br>– மாநகர செயல் திட்டத்தின் கடலோரக் செயல் திட்டப் பிரிவு | | |
| 16 | களு கங்கைக்கான இட ஒதுக்கீட்டு பகுதியில் சதுப்பு நிலக் கன்றுகளை (கண்டல் தாவரம்) நடுகை செய்தல் | நிலையான சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாய திட்டம் | – மத்திய சுற்றாடல் அதிகாரசபை<br>– இலங்கை நீர்ப்பாசன திணைக்களம் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள காலிடோ கடற்கரை பகுதியில் நீர் முறிப்பு சுவர் (breakwaters) அமைத்தல் | நிலையான சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாய திட்டம் மற்றும் நீர் வழங்கல் திட்டம் | – கரையோரப் பாதுகாப்பு திணைக்களம்<br>– இலங்கை நீர்ப்பாசன திணைக்களம்<br>– மாநகர செயல் திட்டத்தின் கடலோரக் செயல் திட்டப் பிரிவு | | |
| 18 | களு கங்கையில், உப்பு நீர் உட்புகாத வண்ணம் தடுப்பு வேலி அமைத்தல் | நிலைதகு சுற்று சூழல் மூலோபாய அபிவிருத்தித் திட்டம், நீர் வழங்கல் திட்டம் | – இலங்கை நீர்ப்பாசன திணைக்களம்<br>– தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை | | |
| 19 | களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள துவ பன்சல வீதியில் வெள்ள முகாமைத்துவத் திட்டத்தை முன்னெடுத்தல் | நிலையான சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாய திட்டம் | – இலங்கை நீர்ப்பாசன திணைக்களம் | | |
| 20 | களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள நாகொட சந்தி பகுதியில் வெள்ள முகாமைத்துவத் திட்டத்தை முன்னெடுத்தல். | நிலையான சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாய திட்டம் | – இலங்கை நீர்ப்பாசன திணைக்களம் | | |
| 21 | களுத்துறை திட்டமிடல் பகுதியில் நிலச்சரிவு ஏற்படக் கூடிய பிரதேசங்களைப் பாதுகாத்தல். | நிலையான சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாய திட்டம் | – தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் | | |
| 22 | வஸ்கடுவ பிரதேசத்தில் மழை நீர் வடிகால் அமைப்பு முகாமைத்துவத் திட்டத்தை முன்னெடுத்தல் | அனர்த்த முகாமைத்துவ திட்டம் | – இலங்கை நீர்ப்பாசன திணைக்களம் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | காலி பிரதான வீதியில் அமைந்து காணப்படும் நாக மர சந்தி தொடக்கம் வாதுவ வரையிலான நான்கு வழித்தடச் சாலையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 24 | வாடியமங்கட முதல் பண்டாரகம வரையிலாக அமைந்துள்ள வீதியை நான்கு வழித்தடச் சாலையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 25 | காலி தொடக்கம் ஹொரண வரையிலாக அமைந்துள்ள வீதியை இரு வழித்தடச் சாலையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 26 | காலி பிரதான வீதியில் அமைந்து காணப்படும் கட்டுக்குருந்த– தலுவத்த வரையிலான நான்கு வழித்தடச் சாலையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 27 | களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்து காணப்படும் காலிடோ கடற்கரை அபிவிருத்தி திட்டம் | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 28 | டெங்ஜெரின் கடற்கரை விடுதி தொடக்கம் காலிடோ கடற்கரை வரையிலான சுமார் 2 கிலோ மீட்டர் கடலோரப் பகுதியில் புதர்களை (Bushy) நடவு செய்தல் | நிலையான சுற்றுச்சூழல் அபிவிருத்தி மூலோபாய திட்டம் | – களுத்துறை நகர சபை<br>– நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 29 | பழைய வீதியை (சேர். சிரில் டி சொய்சா மாவத்தை) இரு வழித்தடச் சாலையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 30 | மாவல – மஹரேக்ம வரையிலாக அமைந்துள்ள இரு வழித்தடச் சாலையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 31 | "நில்வீதிய" சாலையை இரு வழித்தடச் சாலையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 32 | காலி வீதியில் பாதசாரிகள் நடைபாதையை அபிவிருத்தி செய்தல். | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 33 | புகையிரத நிலைய பாதையை (Railway avenue) சார்ந்து பாதசாரிகள் நடைபாதையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 34 | களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள படு கபடா வீதியில் பாதசாரிகள் நடைபாதையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 35 | சாராணந்த வீதியில் பாதசாரிகள் நடைபாதையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 36 | ஷாமிலி குணவர்தன வீதியில் பாதசாரிகள் நடைபாதையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 37 | ஞானோதய மாவத்தை வீதியில் பாதசாரிகள் நடைபாதையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 38 | கிரேகரி வீதியில் பாதசாரிகள் நடைபாதையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 39 | பழைய வீதியில் பாதசாரிகள் நடைபாதையை அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 40 | களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள படு கபடா வீதியில் பல் அடுக்கு வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய அங்காடிக் கட்டிடத் தொகுதி நிர்மாணம் செய்தல். | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 41 | களுத்துறை நகரில் அமைந்து காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகாமையில் சுரங்க பாதசாரிகள் நடைபாதையை நிர்மாணித்தல். | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 42 | களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள சாராணந்த மாவத்தையில் நிர்வாகக் கட்டிடத்தொகுதியினை நிர்மாணித்தல். | பொருளாதார அபிவிருத்தித் திட்டம் | – நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| 43 | கடற்கரைக்கு சமாந்தரமாக உள்ள வீதியை இரு வழித்தடச் சாலையாக அபிவிருத்தி செய்தல் | வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் | – களுத்துறை பிரதேச சபை | | |
| 44 | களுத்துறை வடக்கு பிராந்திய பகுதியில் போஹோடரமுல்ல கடற்கரைப் பூங்கா நிர்மாணிப்பதற்கான அபிவிருத்தித் திட்டம். | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – நகர அபிவிருத்தி அதிகாரசபை<br>– களுத்துறை பிரதேச சபை | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 45 | களுத்துறை தெற்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள ரிச்மண்ட் கோட்டைக் கட்டிட வளாகத்தில் உள்ள இயற்கை நிலத்தோற்ற அபிவிருத்தி அபிவிருத்தித் திட்டம் | சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் | – நீதி அமைச்சு | | |
